

# கம்பன் ஒரு பெருங்கடல்

**- தமிழ்ப்பேரறிஞர் தனிநாயக அடிகள் -**

**இவ்வாண்டு உலகம் எல்லாம் பரவியிருக்கும் தமிழ் ஆர்வலர்கள் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி அவரை நினைவு கூர்கின்றனர்.**

**கிறிஸ்துவப் பணிக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பின் தமிழைத் துறைபோகக் கற்று, தமிழ்மொழியின் தொன்மையையும் செழுமையையும் உலகறியச்செய்து, தமிழ் முனிவராக மலர்ந்தவர் தனிநாயகம் அடிகளார். பட்டங்கள் பலபெற்று, பல மொழிகளறிந்து, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி அர்த்தமுள்ள மாநாடுகளை நடத்தித் தமிழ் செழுமையுறத் துணை நின்றவர். Ambassador for Tamil என இந்தியப் பத்திரிகைகளால் பாராட்டப் பெற்றவர். இவர் எழுதிய ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகளை இன்றைய தமிழ் வாசகர்கள் எல்லோரும் வாசித்தோர் என்றில்லை. கம்பனின் பெரும் தமிழ்ப் புலமைக்காகவும் தமிழின் இனிமைக்காகவும் தன்னைப் பறிகொடுத்தவர் அடிகளார்.**

**தாய் வீடு வாசகர்களுக்காகப் பல ஆண்டுகளுக்கு முன் அவர், கம்பனின் கவிநயம் பற்றி எழுதிய கட்டுரையொன்றை மீள்பிரசுரம் செய்கின்றோம்.**

நம் தமிழ் இலக்கிய நூல்களைப் பெருங் கடல்களாகக் கூறுவது மரபாகும். தொல்காப்பியப் பெருங்கடல்போல் கம்பநாடனின் தொடர் நிலைச் செய்யுளும் ஒரு பெருங்கடலாகும். ஆண்டில் வளர வளர நம் இலக்கியச் செல்வங் களைப் படிக்கப்படிக்கத் தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களைச் செல்லும் நாடுகள் தோறுங் காணக் காணத் தமிழ் மகன் எத்துணைப் பெருஞ் சொத்துக்களுக்கு உரிமையாளனாகப் பிறக்கின்றான் என்பது வர வர இன்னுந் தெளி வாகிக் கொண்டு வருகின்றது. நினைக்குங்கால் தமிழை நம் தாய்மொழியாகத் தந்த இறைவ னுக்கு நாம் எத்துணை நன்றி செலுத்துதல் வேண்டும். நாம் சீனராகப் பிறந்திருத்தல் கூடும்: அமெரிக்கராகப் பிறந்திருத்தல் கூடும். ஐரோப்பியராகப் பிறந்திருத்தல் கூடும். இவ்வாறிருக்க இத்தமிழ் திருநாட்டில் பிறவி பெற்றுத் தமிழ் மொழியின் தித்திக்கும் இன்னிசையை நம் நாவின் நரம்புகளால் மீட்டி இன்புற்றுவரும் பெரும் பேற்றினைப் பெற்றுள்ளோமே. இதுவே தோன்றாத்துணை நமக்கு அருளிய பேரரும் பேறாகும்.

தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் உள்ள தனிப்பெருஞ் சிறப்புக்களில் பல்வேறு சமய இலக்கியங்களுக்குத் தமிழ் தாய்மொழியாக இருத்தல் உலகில் வேறெந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு. சமஸ்கிருத மொழி கீழ்த்திசை சமயங்களுக்குப் பொது மொழியாக ஒரு காலம் விளங்கிற்று. அவ்வாறே இலத்தீன் மொழி மேற்றிசை மறைகளுக்கு ஒரு காலம் பொது மொழியாக அமைந்துள்ளது. ஆனால் இலத்தீன் மொழியில் இந்து சமயம், புத்த சமயம் போன்ற சமயங்களைப் பற்றிய இலக்கிய நூல்கள் இல்லை. சமஸ்கிருதத்தில் கிறிஸ்துவின் திருமறை பற்றிய இலக்கிய நூல்கள் அரிது. தமிழிலோ கத்தோலிக்கரும் புரோடஸ்டாண்டரும், புத்தரும், சமணரும், சைவரும், வைணவரும், மகமதியரும் இலக்கிய உரிமை பாராட்டும் பான்மைகண்டு களிப்புறாத தமிழனும் உண்டோ! முத்தமிழ் முழங்கும் சிலப்பதிகாரத்தையும், புத்தம் போற்றும் மணிமேகலையையும், சமணத்தைச் சாற்றும் சீவக சிந்தாமணியையும், சிவனடியார் சிந்திக்கும் பெரிய புராணத்தையும், வைணவர் வணங்கும் கம்பர் இராமாயணத்தையும், மகமதியர் மதிக்கும் சீறாப்புராணத்தையும் கத்தோலிக்கர் கற்கும் தேம்பாவணியையும் புரோட்ஸ்டாண்டர் பாராட்டும் இரட்சணிய யாத்திரீகத்தையும் தமிழ் மக்கள் அனைவரும் தம் பொதுச் செல்வமாகவும் கருதுகின்றனரன்றோ! இப்பரந்த விரிந்த மனப்பான்மை தமிழ் நாட்டில் எந்நாளும் நிலையாக இருக்க வேண்டும். நம் காப்பியங்கள் சமயச் சார்புடையனவாயும். தமிழர் இவற்றை இலக்கியக் கண்ணால் நோக்கிப் படித்து, இன்புற்றுப் பெரும்வாழ்வு பெறுதல் அவர் கடமையாகும்.

*தொடர்தல் 67ம் பக்கம்*

# தமிழ்த்தூது

இலக்கியம் தனிப்பட்ட கலையன்று, இலக்கியம் ஏனைய கவின் கலைகளுடன், பண்பாட்டின் துறைகளுடன் நெருங்கிய தொடர்புள்ளது. எனவே இலக்கியத்தில் ஈடுபடுங்கால் ஏனைய தமிழ்க் கலைகளிலும் ஈடுபடுதல் வேண்டும். கம்பரின் கவிச்சுவையில் ஈடுபடும் நாம், ஓவியக் கலையிலும், கட்டிடக்கலையிலும், சிற்பக் கலையிலும், நாட்டியக் கலையிலும் ஈடுபடுவோமாயின் நம் நாட்டின் பண்பாடு வளரும் என்பது திண்ணம்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை முற்றிலும் உணர்ந்திலர். அக்காலத்தில் நம் சங்க இலக்கியங்கள் பதிப்பிக்கப்பெறவில்லை, நம் காப்பியங்களின் அச்சுப்படிகள் அருகியே இருந்தன, தமிழ்க் கல்வியும் இந்த நூற்றாண்டில் பரவியதுபோல் பரவியிருக்கவில்லை. இந்நூற்றாண்டில் எதிர்பாராத இடங்களில் தமிழ் மக்களின் பண்டைக்காலப் பெருமைக்குச் சான்றுகள் தோன்றுகின்றன. இம்மறுமலர்ச்சியின் நூற்றாண்டில் எங்கும் தமிழ் முழக்கம் பிறக்குங்கால் நம்முடைய கடமைகள் யாவை?

Goethe என்பார் செப்பினார். “What thou has received from thy fathers, acquire it a new if thou wouldst possess it” (நும்முன்னோர் நுமக்களித்த செல்வத்தை, நீவிர் நழுவவிடாது காப்பாற்ற வேண்டுமாயின் அதனை மீண்டும் பெறுவதற்குப் புதுப்பிக்க முயல்வீராக.)

தமிழ்ச் செல்வங்கள் அனைத்தையும் நாம் மீண்டும் பெறுவதற்கு முயல வேண்டும். நம் பிதிர்ச் சொத்துக்கள் யாவையென்று உணர்தல் நம் கடமை. பல்கோடி செல்வமுள்ள மக்கள் சிலர் தம் செல்வம் எங்கெங்கெல்லாம் உள்ளது என்று அறியாது வாழ்கின்றனர். அவர்களுடைய செயலாளரே அதனைக் காப்பாற்றி வருகின்றனர். நாம் அவ்வாறு பிறர்க்கு மேல் அக்கடமையைச் சுமப்பது பொருந்தமன்று. நாமே அச்செல்வங்களையும், அச்செல்வங்கள் உள்ள இடங்களையும் அறிந்திருத்தல் வேண்டும்.

நாம் இவற்றை அறிவதுடன் இவற்றைப் புதுப்பித்தும் பெருக்கியும் உலகிற்கும் நம் பின் வருவோர்க்கும் ஈதல் பிறிதொரு கடமையாகும். 1954-ஆம் ஆண்டு நான் ஐரோப்பாவிற்குச் சென்றிருந்தக்கால், அங்குள்ள நூல் நிலையங்களில் அந்துப்பட்டதாகக் கருதப்பெற்ற ஏட்டுப்பிரதிகள் சிலவற்றையும் அச்சுப்பிரதிகள் சிலவற்றையும் கண்டுள்ளேன். தைலாண்டுக்கு (Thailand) நான்கு திங்களுக்கு முன் சென்றிருந்த பொழுது. பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார் அந்நாட்டில் திருவெம்பாவைத் திருநாளைக் கொண்டாடுகின்றனர் எனக் கூறக் கேட்டிருந்தேனாதலால் அதனைப் பற்றி ஆராய்ந்து வந்தேன். அறிஞர் ஒருவரின் உதவியைக் கொண்டு அங்குள்ள பிராமணர் வழிபடும் கோயிலுக்குச் சென்று அவர்கள் ‘தாய்’ மன்னரின் பட்டச் சடங்கிலும் திருவெம்பாவைத் திருநாளில் பாடும் தமிழ்ச் செய்யுட்களைப் பாடுமாறு கேட்டேன். அப்பொழுது தமிழை அறியாதிருந்தும் மரபொன்றைக் காப்பதற்காகத் தாம் அறிந்த எழுத்து வடிவத்தில் வரைந்த ஏடுகளிலிருந்து என் மெய்சிலிர்க்கப் பிராமணத் தலைவர் படித்தார்.

*‘ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாட்டங்கண்*
*மாதே வளருதியோ? வன் செவியோ நின் செவிதான்’*

*‘ஏகம் இடம் ஈதோ, விண்ணோர்கள் எத்துதற்குக்*
*சுக மலர்ப்பாதத் தந்தருள வந்தருளுந்*
*தேசன், சிவலோகன், தில்லைச்சிற் றம்பலத்துள்*
*ஈசனார்க் கண்பார்யாம் ஆர், எல் ஓர் எம்பாவாய்’*

இவ்விரு எடுத்துக்காட்டுக்களால் தமிழ்த் தொண்டாற்றுவதற்கு எத்துணைப் பரந்த உலகம் உண்டு என்பதும் இப்பரந்த உலகை ஆராய்வன சிறந்த தொண்டாகும் என்பதும் அறிஞர்க்கு நன்கு புலனாகும். ஒவ்வொரு தமிழ் மகனும் தன்னால் இயன்ற மட்டும் தான்பெற்ற செல்வம் இவ்வையகம் பெறுக எனும் குறிக்கோளோடு தொண்டாற்றுவதே சிறப்பு.

*‘சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’*

என்றார் பாரதியார். பண்டைக்காலத் தமிழ் மகன் *‘சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவையும் அங்கு சேர்த்திடுவீர்’* எனும் மனப்பான்மையுடன் திரை கடலோடித் தமிழ்ப் பண்பாட்டை நிலைநாட்டினான். அவன் சென்ற நாடுகளில் நல்கிய செல்வங்களையும் நாம் எட்டுத் திக்குகளிலிருந்தும் இங்கு கொணர்ந்து மீண்டும் சேர்க்கும் காலம் வந்துள்ளது.

தமிழ்நாடு பெற்ற இத்தகைய செல்வங்களுள் கம்பர்தரும் இராமாயணம் செல்வத்துட் செல்வம். ஆங்கில அறிஞர் Carlyle என்பார் Shakespeare பற்றி எழுதுங்கால் ஆங்கிலம் பேசும் மக்களை இணைக்கும் ஒரு குடை, ஆங்கில அரசன்றி Shakespeare அரசனேயென்று கூறியுள்ளார். ஆங்கில அரசு மறைந்த பின்னும் Shakespeare மன்னன் தன் ஆட்சியை ஆங்கில நாடு தொடங்கி New Zealand மட்டும் நிகழ்த்துவாரெனப் பெருமையுடன் Carlyle குறிப்பிட்டார்.

Shakespeareக்கு இப்பட்டத்தைச் சூட்டியும் கூட. அவரை King Shakespeare Emperor Shakespeare என்று நாம் அடைகொடுத்துப் பேசுவதில்லை. ஆனால் ‘கவிச் சக்கரவர்த்தி கம்பன்’ என்று பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்கள் வழங்கி வருகின்றனர். கம்பன் தன் கவித்திறந்தால் பொது மக்களிடமிருந்து கவர்ந்து கொண்ட பட்டமே இது. தமிழ் மக்கள் கம்பனைச் சுவைக்கும் பான்மைக்கு இப்பட்டமே சாலும் சான்றாகும்.

கம்பனின் பேரரசு தமிழ் உயிரோடிருக்கு மட்டும் நிலைக்கும் என்பதற்கு ஐயமில்லை. அப்பேரரசு எங்ஙனம் பரவியது எங்ஙனம்



> **“கம்பனுடைய அரசு தமிழன் சென்ற நாடுகளிலெல்லாம் நிலைநாட்டப்பெற்றுள்ளது. கம்பனே அறியாத நாடுகளிலும் அவன் அரசு பரவியுள்ளது.”**

நிலைபெற்றது என்று ஆராய்வதற்கு ‘கம்பன் தரும் இராமாயணமும் தமிழ்நாடும்’ என்ற பெரியதோர் ஆராட்சி வேண்டியதாய் இருக்கின்றது. இத்தொடர்நிலைச் செய்யுளின் கவித்திறமே இதற்கு இடராயிற்று. இக்கவியைச் சுவைத்த மாந்தர் இதனை நெட்டுருச் செய்தனர். ஏடுகள் பலவற்றிலும் எழுதினர். நாடகமாக நடித்தனர். சொற்பொழிவுகளாகக் கதையைப் பெருக்கினர், நினைவு சோர்வுற்றபொழுது தம் சொந்த அடிகளையும் விருத்தப்பாக்களையும் சேர்த்தனர். ‘மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்’ என்றவாறு கம்பன் தமிழ் நாட்டின் உயிராதலால் தன் உயிரை ஒருவாறு இழந்தான். செருகுகவிகள் பாடபேதங்கள். ஏட்டுப் பிரதிகள் மல்கிக்கிடப்பதற்கு தமிழ் மக்கள் கம்பனைச் சக்கரவர்த்தியாக ஏற்றுக் கொண்டதே காரணமாகும்.

கம்பனுடைய அரசு தமிழன் சென்ற நாடுகளிலெல்லாம் நிலைநாட்டப் பெற்றுள்ளது. கம்பனே அறியாத நாடுகளிலும் அவன் அரசு பரவியுள்ளது.

பல படலங்களில் வால்மீகி வானரர்ளைப் பிரித்துச் சீதையைத் தேடும்படி அனுப்பும் செய்தியை தென்திசையொழிய ஏனைய திசைகளைப்பற்றி, கம்பன் ஒரு பாட்டில் சுருக்கமாகவும் விரைவாகவும், கூறுகிறான்.

*‘குடதிசைக்கண், சுடேணன், குபேரன் வாழ்*
*வடதிசைக்கண், சதவலி, வாசவன்*
*மிடல்திசைக்கண், வினதன், விறல் தரு*
*படையொடு உற்றுப் படர்க’ எனப் பன்னினான்.’*

வால்மீகியின் இலங்கை நாமறிந்த இலங்கை என்று கூறவது எளிதன்று, கம்பனின் இலங்கையோ, ஈழத்திருநாட்டில்தான் இருப்பதாகக் கருதினர் புலவர் என்பதற்குச் சான்றுகள் உண்டு. எனவே அங்கு அனுமான் செல்ல வேண்டிய வழியை அழகுறு சொல்லோவியங்களாக வரைகின்றான் கம்பன். தமிழ்நாட்டின் எல்லைகளை ‘வடவேங்கடம் தென்குமரி’ என்று கேட்ட நாம் இச்செய்யுளையும் கேட்டு மகிழாதிருப்பது எங்ஙனம்?

*‘வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்றாய்*
*நான்மறையும் மற்றை நூலும்*
*இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்*
*நல்லறத்துக் கீறாய் வேறு*
*புடைசுற்றுந் துணையின்றிப் புகழ் பொதிந்த*
*பொய்யே போற் பூத்து நின்ற*
*அடைசுற்றும் தண்சார லோங்கியவேங்*
*கடத்திற்சென் றடைதிர் மாதோ.’*

தென்னாட்டை விரிவாக விளம்பிய கம்பன், வால்மீகி கூறும் ஏனைய இடங்களைப் பெயரிட்டிலன். வால்மீகி கூறும் நாடுகளில் சாவகம் போன்ற இடங்களையும் சேர்த்துள்ளார். ‘Yavadirpam Saptarajyo posobhytam, Swarnarupa Yakam’ வால்மீகி பெயரிட்டும் கம்பன் பெயரிடாத நாடுகளிற்கூட கம்பனின் காப்பியமே ஒரு காலம் பெரிதும் போற்றப்பட்டு வந்தது.

கிழக்கு நாடுகளிலும் தென்கிழக்கு நாடுகளிலும் தமிழ் மக்கள் நிகழ்த்திய வரலாற்றை இதுகாறும் ஒருவரேனும் ஆராய்ந்து அறிந்ததில்லை. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் இத்துறையில் மேல்நாட்டறிஞர் இயற்றிய பல நூல்களைக் கொண்டு தென்னிந்தியப் பண்பாடு பர்மா, தைலாண்டு, கம்போதியா, மலாயா, இந்தோனீசியா, போர்னியோ ஆகிய நாடுகளில் பரவியதற்குக் கிடைத்த சான்றுகளைத் திறம் படத் தொகுத்துள்ளார். ஆயினும் இத்துறையில் இன்னும் பலர் ஆராய்ச்சி நிகழ்த்துவதற்குப் பரந்த இடமுண்டு, சுமத்திராவில் சேர சோழ பாண்டியர் எனப்படும் வகுப்பினர் வாழ்ந்து வருகின்றனர். சாவகத்திலும் பாலியிலும் நடைபெறும் நாட்டியமும் நாடகமும் தமிழ்நாட்டின் நாட்டிய நாடகக் கலையுடன் நெருங்கிய தொடர்புள்ளன. அந்நாடுகளிலுள்ள சிற்பங்களும், இன்றும் நடைபெறும் நாடகங்களும் கம்பனின் இராமாயணத்தைத் தழுவுவன. அங்கோர் வாட்டு, அங்கோர் தொம்மிலும், பொரோபுதூரிலும் காணப்படும் இராமாயணக் கதையின் சிற்பங்கள் வால்மீகியைத் தழுவாதது பற்றி அறிஞர் உடன்படுகின்றனர். கம்பனை இச்சிற்பங்கள் தழுவக்கூடும் எனக் கருதுகின்றனர் அறிஞர், ஆயினும் இவற்றை நேரிற் பார்த்து இத்துறையை ஆராய்ந்த தமிழ் அறிஞர் ஒருவரும் இலர்.

கம்பனின் அரசு எதிர்பாராத இடங்களில் பரவியுள்ளது. தைலாண்டு நாட்டுக்கு நான் சென்றக்கால் அங்கு தமிழ் பரவியதற்குத் ‘திருவெம்பாவை’த் திருநாளையும் செய்யுளையும் ஒழிய, இன்னும் சான்றுகள் பலவற்றை அறியவந்தேன். தைலாண்டுத் தொடர்பால் ‘தங்கம்’ என்ற சொல் தமிழ் வழக்கில் வந்துள்ளது. சீனத்திலும் ‘தை’யிலும் ‘தங்கம்’ என்றே பொன்னைக் குறிக்கின்றனர். தைமொழியில் மரக்கலத்தைக் ‘கப்பலென்றும்’ குதிரையை ‘மா’ வென்றும் கூறுகின்றனர். அவர்கள் சொற்கள் பெரும்பாலும் தமிழைத் தழுவி ‘ஐ’ ‘அம்’ உருபுகளை ஏற்று விகுதிகளைக் கொண்டவை. ‘மாலை’யை வடமொழி போல் ‘மலா’ என்று கூறாது ‘மலாய்’ என்றே கூறி வருகின்றனர். தைலாண்டில் அறிஞர் ஒருவருடன் தை (Thailand) இராமாயணத்தைப்பற்றி வினவினேன். அவர் பெயர் ‘அனுமான்’ (இப்பெயர் வடமொழிச் சொல் ‘அனுமானத்தின்’ திரிபுவென பின்னர் அறியவந்தேன்) ‘தை இராமாயணம் 50 விழுக்காடு தமிழ் இராமாயணத்தைத் தழுவியதே’ என்று குறிப்பிட்டார். பாட்டுடையப் பாத்திரங்களில் பெயரும் (‘குபேரன்’, ‘சுமன்தன்’, ‘மாயன்’, ‘தேவன்’, ‘சீவன்’ என்றே ஒலிக்கின்றன) தை இராமாயணத்தில் அனுமானுக்கு ஐந்து மனைவியர் உண்டு. ஒரு மனைவி இராவணனின் மகளாகிய மீன் தெய்வம்.

நம் தமிழ் நாட்டிலுள்ள இளம் அறிஞர் ஒருவரேனும் தை மொழியைக் கற்றுத் தமிழ் மக்கள் அக்காலத்தில் தாம் தொடர்பு கொண்ட மக்களுக்குப் பண்பையும் கலையையும் காவியத்தையும் நல்கின முறைகளையும் துறைகளையும் ஆராய்தல் எத்துணைச் சிறந்த ஆராய்ச்சியாகும். நம் பல்கலைக்கழகங்கள் கீழ்த்திசை நாடுகளுக்கு அறிஞர் சிலரை அனுப்பி, ஒருவர் சீனத்தையும், வேறெருவர் மலேயையும், இன்னொருவர் இந்தோனேசிய மொழியையும் கற்று ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்வதால் தான் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் புத்துணர்ச்சியை அளிக்ககூடும். இன்று தாழ்ந்திருக்கும் தமிழன் தன் பண்டைப் பெருமையை அறிந்தேனும் புதுவாழ்வில் ஈடுபட இத்தகைய கல்வி உறுதுணையாகும். சங்ககால இலக்கியங்களைப் பதிப்பித்துப் பரப்பியதால் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சி போல் நம்வரலாற்று ஆராய்ச்சியும், கலை ஆராய்ச்சியும் ஏனைய துறைகளிலும் மலர்ச்சியை உண்டாக்கின என்பதை வலியுறுத்தவும் வேண்டுமோ...!

கம்பனுடைய காலத்தை வரையறுத்துச் சொல்வதற்கு கம்பராமாயணத்தில் அகச்சான்று புறச்சான்றுகளையும் நாம் இதுகாறும் நன்றாக ஆராயவில்லை. கம்பனின் செய்யுட்களை ஆராயும் பொழுது சிலவேளையில் தோன்றும் சொற்களும் சொற்றொடர்களும் அவர் காலத்தின் அடையாளங்களைக் காட்டுகின்றன. சிங்கம் தாங்கும் தூண்களையும், அகழி சூழ்ந்த வெளிநகர் இடைநகர் உள்நகர்களையும் கம்பன் பாடும்பொழுது அவர் பல்லவர் சிற்ப முறைகளில் ஈடுபட்டவர்கள் என்பதும் புலனாகக்கூடும். மேலும் வெளிநாடுகளில் கம்பராமாயணம் பரவிய காலமும், அந்நாடுகளில் கம்பாரமாயண நிகழ்ச்சிகள் செதுக்கப்பெற்ற காலமும் கம்பனின் காலத்தை ஒருவாறு சுட்டத்தக்கன என்பது ஒருதலை. தைலாண்டில் தங்கியகாலை தமிழனுக்கு ஏனைய தென் கிழக்கு நாடுகளில் வழங்கும் Kling எனும் சொல்லையே வழங்குகின்றனர். ஆனால் ‘தமிழ்’ என்ற சொல்லும் தை மொழியிலுண்டு, அதனைத் ‘தமின்’ என்று ஒலிக்கின்றனர். ‘தமின்’ என்ற சொல்லிற்குப் பொருள் யாதென்று வினவினால் அங்குள்ள பாமர மக்களும் ‘கொடியவன்’, ‘கொடூரமானவன்’ என்று பொருள் கூறுவர். பல்கலைக்கழகப் பேராசிரியர் ‘தமின்’ என்ற சொல்லிற்கு ‘a relentless man’ என்று பொருள் கூறினார். இன்னுமொருவர் ‘barbarous man’ என்றார். வேறொரு ஆங்கிலம் அறிந்த தொழிலாளன் கூறினான் By ‘தமின்’ ‘I understand a Indian who is cruel and hard’ நமக்கு இனிமையையும், சீரையும் சிறப்பையும் குறிக்கும் இச்சொல் தைலாண்டில் இத்தகைய பொருளைச் சோழர் காலத்தில் பெற்றதாகத் தெரிய வருகிறது. பத்தாம் நூற்றாண்டிலும் அதன் பின்னும் சோழர் இலங்கை மீது படையெடுத்த காலத்தில், அங்குள்ள புத்த குருக்கள் தைலாண்டிற்குச் சென்று சோழரின் படைகள் நிகழ்த்திய கொடுஞ் செயல்களைக் கூறி இப்பொருளை ‘தமின்’ என்ற சொல்லிற்குத் தைலாந்தர் அளிக்கக் காரணமாக இருந்தனர்.

தைலாண்டில் பரவிய தமிழ்ப் பண்பாடு பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னமே பரவியிருத்தல் வேண்டுமென்று துணிவது பொருத்தமுடையதென்பதற்கு இன்னும் வேறு சான்றுகளால் வலியுறுத்தப்படுதல் வேண்டும்.

கம்பனின் காலம் பக்தியின் காலமென்பதற்கோ ஐயமில்லை. இராமரின் வரலாறு புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களில் மேற்கோள் காட்டப்பெற்று இருப்பினும் பக்தி வெள்ளம் தமிழ்நாட்டில் பெருக்கெடுத்த காலத்திலே அவ்வரலாறும் பக்திக்குத் தித்திக்கும் பொருளாயிற்று. பல நூற்றாண்டுகளாக மக்களின் உள்ளங்களில் குடியிருந்த இராமரை. கம்பன் வால்மீகி அறியாத உணர்ச்சிகளுடன் பாடினான். இராமன் மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன், மக்களை

*தொடர்தல் 70ம் பக்கம்*

## தமிழ்த்தூது

# தனிநாயக அடிகளின் ஆய்வு நோக்கில் சங்க காலப் புலவர்கள்

- இ. பாலசுந்தரம் -

தனிநாயக அடிகள் இலக்கிய ஆய்வில் ஈடுபடும் போது பொதுவாக ஒப்பிலக்கிய அடிப்படையில் நோக்குவது அவரது ஆய்வு முறையாகும். அதற்கு அவரது பன்மொழிப்புலமையும் காரணமாயிற்று. அவ்வகையில் சங்க இலக்கியப் பொருள்மரபு, பாடல் அமைப்பு, புலவரது ஆளுமைகள் என்பன பற்றிய ஆய்வில் கிரேக்கம் - இலத்தீன் மொழிப் புலவர்களுடன் ஒப்பிட்டு நோக்குவதை அவதானிக்கலாம். சங்ககாலப் புலவர்கள் பற்றி ஆராயும் அடிகளார் அவர்களைக் கல்விச் சான்றோர்களாகவே கருதுகின்றார். சான்றாக, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

*உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே*

(புறம்.183:1-2)

எனத் தான் பாடிய பாடலிலே கல்விக்கு முதன்மை அளிப்பதை நோக்கலாம். புலவர்கள் சமூகச் சிற்பிகளாக, சமூகத்திற்கு நல்ல அறவூட்டுபவர்களாக இருப்பதைக் குறிப்பிட்டு, அவர்கள் கல்வியிற் சிறந்தோராகக் காணப்பட்டனர் என்கிறார். சங்ககாலத்தில் கல்வியும் கவிதையும் இளம் மாணாக்கருக்குப் புகட்டப்பட்டன. புலவர் சிலர் பேர்பெற்ற ஆசிரியர்களாகவும் விளங்கினர். புலவர்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியதால் தங்கள் சமகாலத்தவராலும் பாராட்டப்பட்டுள்ளனர். உதாரணமாக கபிலர் என்ற புலவரைப் பொருந்திலிளங்கீரனார் வருமாறு பாராட்டுகிறார்:

*செறுத்த செய்யுள் செய்செந் நாவின்*
*வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்..*

(புறம் -53:11-12)

'பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கிய செய்யுள்களை இயற்றும் செவ்விய நாவினையும், மிக்க கேள்விஞானத்தையும், விளங்கிய புகழையுமுடைய கபிலன்' எனப் பாராட்டப்படுதல் நோக்கத்தக்கது.

சங்கப்புலவர்கள் ஆண்பாற் புலவர்களாகவும், பெண்பாற் புலவர்களாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் பிறந்த இடங்கள் கிராமங்களாக, நகரங்களாக, பட்டிதொட்டிகளாக, பலவேறுபட்ட ஊர்களாக இருந்திருக்கின்றன. அவர்கள் செய்த தொழில்கள் வேறுபட்டனவாக உள்ளன. புலவர்கள் அரச குலத்திலிருந்தும், உழவர் குடியிலிருந்தும், வணிகவகுப்பிலிருந்தும், மற்றும் பல்வேறு தொழில்கள் புரிபவர்களாகவும் காணப்பட்டனர். புறநானூறு பாடிய புலவர்களின் எண்ணிக்கை மட்டும் 147 ஆக உள்ளது. இவர்களில் 15 பெண்பாற்புலவர்கள் உள்ளனர். 11 அரசர்கள் புலவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் மருத்துவர், மரவேலை செய்வோர், இரும்புவேலை செய்வோர், மட்பாண்டத் தொளிலாளர் இப்படி பல்வகைத் தொழில்கள் புரிவோர் கவிதை இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பது அக்காலத்துக் கல்வியையும் கவிதை இயற்றியோரின் ஆளுமைகளையும் வெளிப்படுத்துகின்றன.

சங்கப்புலவர்களைச் சான்றோர்கள் என வழங்குவது மரபாகும். அவர்களது சான்றாண்மைக்கும், உலக நோக்கிற்கும் காரணமாக அமைந்தவை, அவர்கள் பெற்றிருந்த இலக்கியக் கல்வியும் சமூக ஒப்புரவாண்மையும் ஆகும். சங்கப் புலவர் மன்னர்களையும் வள்ளல்களையும் சார்ந்து அவர்கள் வழங்கிய பரிசுப் பொருட்கள், சன்மானம் என்பவற்றின் அடிப்படையில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். ஆயினும் அவர்கள் அரசர்களாலும் பெரியோர்களாலும் உயர் இடத்தில் வைத்து மதிக்கப்பட்டனர். அரசர்களுக்கிடையே போர் - பகை ஏற்பட்டிருந்த போதெல்லாம் அவர்களைச் சமன்செய்து, சீர்தூக்கிச் சமாதானப்படுத்தும் பணியில் புலவர்கள் பெரிதும் ஈடுபட்டு வந்துள்ளனர். இப்புலவர்கள் உலகநோக்கில் கருத்தோட்டமுள்ள சிந்தனைகளை முன்வைப்பவர்களாகவும் செயற்பட்டனர் எனத் தனிநாயக அடிகள் கருத்துரைப்பர்.

பாணன் என்ற சொல் இசை, நடனம், நாடகம் என்ற பொருள்களைக் குறிக்கின்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். பாணர் காலத்திலே கலைகளும், வீர ஒழுக்கவியலும், இசைவளர்ச்சியும், நன்னெறிச்செல்வமும், அறிவில் நிறைவும் பேணப்பட்டு வந்தன. வீயுகர ஒழுக்கக்கோட்பாட்டிலிருந்து படிப்படியாக உயர்ந்த உலகச் சிந்தனைகள் வளர்ந்திருந்தன. பாணர்கள் எப்போதும் தம் குடும்பத்துடனும் தன் குழுவுடனும், கலைப்பயணத்தை மேற்கொண்டனர். பாணர் தம் குழுவுடன் அவையோரை மகிழ்வூட்டுவர், நடிப்பர், பாடுவர், நடனம்புரிவர், இசைக் கருவிகளுடன் எப்போதும் செல்வர். பாணர், சமூகத்தின் குரலாகத்தொனிப்பர். பாணர் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதையே குறிக்கோளாகக்கொண்டியங்கினர். பாணர் எப்போதும் மன்னர், வள்ளல், வீரர் ஆகியோரைப் புகழ்ந்து பாடுவதும், வீர அறிவுரைகளுடன் கூடிய வீர உணர்ச்சியைத் தூண்டும் இசைப்பாடல்களை இசைப்பதும் வழக்கம். பாணர் படை வீரர்களுக்கு ஊக்கத்தை ஊட்டப்போர்க்களத்திலும் காணப்படுவர்.



புலவர் என்ற சொல், பொதுஅறிவு, பகுத்தறிவு, கல்வி போன்ற பொருட்களைத் தருகின்ற வேர்ச் சொல்லில் இருந்து பிறந்ததாகும். புலவர்கள், பாணர் போலன்றித் தனித்தே தம் பணியை மேற்கொண்டனர். பாணர் பாட்டிசைத்து அவையோரை மகிழ்விக்கப் புலவரோ அதிகாரம் பெற்றவர் போன்று தம் செய்யுள்களால் மக்களுக்கு அறிவுரை புகட்டுவர். புலவர்கள் கல்வியிலும் அறிவிலும் சிறந்து காணப்பட்டனர். சிறந்த செய்யுள்கள் புனையும் திறன் பெற்று விளங்கினர். புலவர்கள் தம்பெயரை முன்னிறுத்தி தம் சொந்த அனுபவங்களையும் சமூகத்தில் தாம் கண்டறிந்த விடயங்களையும் அவதானித்து, மக்களுக்கு நல்லனவற்றைப் போதிக்கும் வகையில் செய்யுள்களை இயற்றி, மக்கள் மத்தியில் அவற்றைப்பரப்பினர். சொந்தப் பெயரிலேயே பாக்களை இயற்றினர். இவர்கள் பொதுவாக அரண்மனைகளிலேயே காணப்படுவர். சில சமயங்களில் தம்முடைய சக புலவர்களுடனும் அறிஞர்களுடனும் காணப்படுவர். புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்து பாடியபோதிலும், மனித ஒழுக்கத்திற்குச் சார்ந்ததையும், அறநெறிக்கு உகந்ததையுமே பாடினர். புலவர்களுக்குப் போர்க்களத்தில் இடமில்லை. ஆனால் சில வேளைகளில், அமைதியின் தூதுவர்களாக, அரசனின் நண்பராக, அரசனுக்குத்தம் விசுவாசத்தைக் காட்டும் முறையிலும் போர்க்களத்தில் காணப்பட்டனர்.

சங்கப்புலவர் வாழ்ந்த காலம் தமிழ்ப்பண்பாடும், கல்வியும் வளர்ந்திருந்த காலமாகவே அமைந்திருந்தது என்பதைச் சங்க இலக்கியத்திலுள்ள எட்டுத்தொகை மூலம் அறிகின்றோம். புலவர்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்பட்டனர். முதல் இரு சங்கங்களில் 4140 புலவர்கள் வாழ்ந்தனர் என இறையனார் களவில் குறிப்பிடுகிறது. கே.என். சிவராசபிள்ளை ஒரு தலைமுறைக்கு 40 புலவர் என்ற அடிப்படையில் 459 புலவர்கள் கடைச்சங்ககாலத்தில் வாழ்ந்ததாகக் கணித்துத்தம் நூலில் விளக்கியுள்ளார். தனிநாயகஅடிகள் புலவர்களின் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிடும்போது, அரண்மனைகளில் கூடிய புலவர்களின் எண்ணிக்கையையும், அக்காலத்தில் கல்வி கற்கும்முறை கவிதைக் கலையாக இருந்ததையும் நோக்கும்போது, ஒரு தலைமுறைக்கு 40 புலவர்கள் என்ற எண்ணிக்கை மிகக் குறைவாகும் என்றும், சங்க காலத்துப் புலவர்களின் இலக்கியத்தின் பகுதிகள் பல அழிந்ததையும் மனதில் கொள்ள வேண்டும் என்பர். எனவே, சங்க காலத்தில் 500 க்கும் மேற் பட்ட புலவர் வாழ்ந் திருக்கவேண்டும் என்பதே அடிகளாரின் கருத்தாகும். அண்மையில் மு. அப்பாஸ்மந்திரி (2006) என்ற இலக்கிய ஆய்வாளர், 552 சங்கப்புலவர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளமை அடிகளாரின் கருத்தை மேலும் வலியுறுத்துவதாகும்.

சங்ககாலத்தில் புலவர்களுக்குரிய பணிகளும் சமூகத்தில் மிகுதியாகவே காணப்பட்டன. புலவர்கள் தம் காலத்தில் சமுதாயத்திற்கு ஆற்றிய மரபுசார் கல்வியும், மரபுசார்பற்ற கல்வியும் ஏராளம். அவர்களுடைய மரபு சார்பற்ற கல்வி (Informal Education) அறநெறி வழிகாட்டியாகவும், சமுதாயத்தின் சட்டத்தை வழங்குவதாகவும், சமுதாயத்தின் ஆலோசகராகவும் அமைந்தன. 'தமிழ்ச் சமுதாயத்தில் தமிழ்ப்புலவர்கள் பெற்றிருந்த சிறப்பு இடங்களைச் சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறியலாம். அரண்மனைகளிலும் விருந்துகளிலும் அவர்களை வரவேற்று கௌரவித்தார்கள். அரசியல் விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டார்கள். எதிரிகளின் படைவலிமை கண்டும், போரால் விளையும் தீமைகண்டும் போரைத் தடுக்கும்படி அரசர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். தமிழ் அரசர் ஒற்றுமைக்காகப் பெரிதும் உழைத்தார்கள். அரசர்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்தார்கள்' எனவும் அடிகள் விளக்குவர். அரசர்கள் தவறிழைத்தபோது அதனைச் சுட்டிக்காட்டி தீர்வு கண்டார்கள். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் உழவர்களுக்கு எதிராக பளுவான வரியை விதித்திருந்தான். அந்த வரிச்சுமையைக் கண்டித்து, வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர் வரியைக்குறைக்கும்படி அரசனை வேண்டுவதை, '*நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே...* (புறம்:35) என்ற பாடல் விளக்குகிறது. மேலும் அரசர்களுக்கும் புலவர்களுக்கும் மிக நெருங்கிய நட்பும் உறவும் பேணப்பட்டன என்பதற்குக் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உண்ணாநோன்பிருந்து மாண்டான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும், அந்த அரசனது உற்ற நண்பரான பிசிராந்தையார் என்ற புலவரும் வடக்கிருந்து அவர் பொருட்டு உயிர்நீத்த செய்தியும் நெஞ்சைத்தொடுகின்றது.

(*புறம்: 214 -253*).

சங்ககாலத்தில் ஐவகை நில அடிப்படையில் முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்கள் பற்றிய செய்திகளும், முழுமுதற் கடவுளாகச் சிவனும் குறிப்பிடப்படுகின்றனர். இயற்கையை நம்பி இயற்கையோடு வாழ்ந்த மக்களுக்கு சமய நெறிகளைப் போதிக்கவேண்டிய தேவை அக்காலப்புலவருக்கு இருக்கவில்லை. அதனாலேயே சங்கப்புலவர்கள் மதம் சார்ந்த பாடலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதேபோன்ற நிலைப்பாடு தான் கிரேக்கநாட்டில் வாழ்ந்த புலவர்களுக்கும் இருந்தது என்பதைத் தனிநாயக அடிகள் சுட்டிக்காட்டுவர். கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்தில் இரு நாடுகளிலும் புலவர்களே மக்களுக்கு நன்னெறியைப் புகட்டினர் என்பதை அடிகளார் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். அவ்வகையில் அறம் சார்ந்த கருத்துக்களை சங்கப்புலவர்கள் மக்களுக்கு மிக எளிதில் விளங்கத்தக்கவகையில் அறிவுரைகளாக, பல்வேறு செய்யுள்களில் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது: உ-ம்:

*“இம்மைச் செய்தது மறுமைக்காம் எனும்..”*

(புறம் 134:1)

*“மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே...”*

(புறம் 165:1-2)

*“உண்டா லம்மஇவ் வுலகம்...”*

(புறம்: 182)


சங்ககாலப் புலவர்கள் எவ்வாறு அறத்தை மக்களுக்குப் போதித்தனர் என்பதற்குப் புறநானூற்றின் சில பாடல்வரிகள் மேலே தரப்பட்டுள்ளன. பல்லவர் காலத்துப் பக்திப் பாடல்களில் கடவுளின் திருவுருவம் மற்றும் அவரது அருட்செயல்கள் என்பன பாடப்பட்டமை போன்று சங்கப்புலவர் பாடவில்லை. திருக்குறள் நாலடியார் போன்று அறக் கருத்துக்களைச் சங்கச் சான்றோர் மக்களுக்குத் திணிக்கவும் இல்லை. அவ்வப்போது வாழ்வியல் பற்றிப் பாடும்போது மட்டுமே அறநிலை வாழ்க்கை பற்றிக் குறிப்பிடும்

தொடர்தல் 70ம் பக்கம்

# தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தூதுப்பணிகள்

## தமிழ்த்தூது

- றூபி வலன்ரீனா பிரான்சிஸ் -



“நான் உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்றதன் பயனாகவும் பிற மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் ஒருவாறு கற்றறிந்ததன் பயனாகவும் தமிழிலக்கியம், தமிழ்ப்பண்பு, தமிழ்க்கலை, தமிழ்வரலாறு முதலியவற்றை உலகில் எவ்வளவிற்குப் பரப்ப வேண்டுமென்று ஒரு சிறிது உணர்ந்துள்ளேன்.”

இது தனது பயணங்களின் பயன் குறித்து தனிநாயகம் அடிகள் கூறிய கூற்றாகும்.

தமிழின் சிறப்புக்களை உலகில் பரப்பவேண்டிய தமிழ்த்தூதின் அவசியத்தை அவருக்கு உணர்த்தியது அவர் மேற்கொண்ட உலகப்பயணங்களே.

தமிழ்த்தூது என்பது தமிழ்மொழியினதும் தமிழ் மக்களினதும் கலாசாரம், நாகரிகம், கலை மற்றும் இலக்கியம் முதலான பல்வேறு சிறப்புக்களை உலகின் பலநாடுகளிலும் வெளிநாட்டவரிடையே பரப்புதல் எனப் பொருள்படும். அதேவேளை பிறநாடுகளின் கலை இலக்கிய நாகரிக மற்றும் மொழிக்கூறுகளை தமிழ்மக்களுக்கு அறிமுகம் செய்வதையும் இது உள்ளடக்கும்.

தனிநாயகம் அடிகள் தமிழின் தனிச்சிறப்புக்களை உலகெங்கும் பரப்பியவர். தன் வெளிநாட்டுப் பயணங்களை தமிழின் சிறப்புக்களைப் பரப்புவதற்கான பயணங்களாக அவர் திட்டமிட்டுப் பணிபுரிந்தார். சென்ற இடங்களில் எல்லாம் தமிழ்மொழியினதும் தமிழரது கலை கலாசார சமூகப் பாரம்பரியங்களினதும் வேர்களும், கிளைகளும் இருக்கின்றனவா என்று தேடலானார்.

அந்த நாடுகளின் கலாசார விழுமியங்களுக்கும் மொழிப் பயன்பாட்டிற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்புகளை ஒப்பிட்டு ஆராய்ந்தார். இந்த அயராத தேடலும், ஆராய்ச்சிகளும், ஒப்பிட்டு நோக்கும் திறனும் தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் பெருமை சேர்ப்பனவாக அமைந்ததுடன் வேற்றுமொழி அறிஞர்கள் தமிழ்மொழிச்சிறப்பை இனங்காணவும் அவை பற்றிய ஆராய்ச்சியில் தூண்டப்பெறவும் காரணமாயின.

இதனால்தான் தமிழ்த்தூது என அவர் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் பெருமைக்கு உரிய-வரானார்.

பயணங்கள் எப்போதுமே அவரது விருப்புக்குரியனவாக இருந்தமையை ‘புது இடங்களுக்குச் செல்வதிலும், புது மக்களைக் காண்பதிலும் பழைய பண்பாடுகளின் நிலைக்களன்களைப் பார்வையிடுவதிலும் அளவற்ற இன்பத்தைப் பெற்றுவருகின்றேன்’ எனவும், ‘பிரயாணப் பழக்கம் அறிவை வளர்த்து விரிவடையச் செய்யும். ஆதலால் அதனை மேற்கொள்ள வேண்டும்’ என்ற கூற்றிலிருந்து உணர முடிகிறது.

21 வயதில் 1934ல் உரோம் நகரை நோக்கிய பயணம் அவரது வாழ்வில் பல ஏற்றங்களையும் மாற்றங்களையும் தரக் காரணமாய் அமைந்தது. தமிழ்த்தூது தனிநாயகமாக அவர் உருவாவதற்கான அடித்தளமாக இப்பயணம் அமைந்தது. குருத்துவப் படிப்பிற்காக, உரோமில் கற்றகாலத்தில் (1934 – 1939) அங்கு அப்போது பயின்று கொண்டிருந்த(எட்டுத்) தமிழர்களுடன் சேர்ந்து ‘வீரமா முனிவர் கழகம்’ ஆரம்பித்து நடத்தினார். அவ்வேளை வத்திக்கான் வானொலி நிலையத்திலிருந்து தமிழில் ஒலி பரப்பும் வாய்ப்பினைப் பலமுறை அவர் பெற்றார்.

இத்தாலி, மலேயா, ஜப்பான், ஐக்கியஅமெரிக்கா, தென்அமெரிக்காவிலுள்ள பனாமா, ஈக்வடோர், பெரு, சிலி, ஆர்ஜன்டீனா, உருகுவே, பிரேசில், மெக்சிக்கோ, மேற்கிந்திய தீவுகளான ட்ரினிடாட், ஜமேய்க்கா, மார்த்தீனிக் மற்றும் வட ஆபிரிக்கா, நடுஆபிரிக்கா, பலஸ்தீன், எகிப்து எனப் பல நாடுகளுக்கு அவர் சென்றுள்ளார். தான் சென்ற நாடுகளில் தமிழின் பெருமையைப் பறை சாற்றுவதில் அவர் பின்னின்றதில்லை. அத்துடன் தமிழ் தொடர்பான ஆவணங்களைத் தேடுவதிலும் அயராது உழைத்தார்.

வத்திக்கான் நூல் நிலையத்தில் பழைய இந்திய நூல்களை ஆராய்ந்தபோது அவரால் கண்டுபிடிக்கப்பட்டதே Flos Sanctorum புளசந்தோர் எனப்படும் ‘கத்தோலிக்க திருத்தொண்டர் வரலாறு’ நூலாகும். 16ம் நூற்றாண்டில் புன்னைக்காயலில் அச்சிடப்பட்ட இந்நூல், ஸ்பானிய முன்னுரையுடன் 660 பக்கங்களையுடையதாக இருந்தமையை அவர் வெளிப்படுத்தினார். இந்த நூலைக் கண்டுபிடித்தமையையிட்டு அவர் தனது மகிழ்ச்சியை பின்வருமாறு வெளிப்படுத்தினார்:

“நான் ஐரோப்பாவிற்குப் பன்முறை சென்றதால் ஏற்பட்ட பொருட்செலவிற்கும் எடுத்தமுயற்சிக்கும் இந்நூலொன்றைக் கண்டுகொண்டதே போதிய கைம்மாறாகும் என்று கருதுகின்றேன்’

தவிரவும் இதே நூலகத்தில் 17ம் நூற்றாண்டில் அம்பலக்காட்டில் அச்சிடப்பெற்ற போர்த்துக்கீசு தமிழ் - தமிழ்போர்த்துக்கீச அகராதியின் அச்சுப் பிரதியைக்கண்டார். அந்தாம் டி ப்ரேயென்சா (Antam De Proenca 1625 – 1666) என்னும் யேசு சபைத்துறவி இயற்றிய இவ்வகராதி பற்றி இதற்கு முன்னர் எவரும் குறிப்பிட்டிருக்கவில்லை என்பது முக்கியமானதாகும். இதே அகராதியின் கையெழுத்துப்பிரதியை பாரிசிலுள்ள தேசிய நூலகத்தில் கண்ட அடிகளார் இதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த விரும்பி மலேசியாவில் 1966ல் நடைபெற்ற முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் இவ்வகராதியினை ஒளிப்படப்பதிப்பு முறையில் வெளியிட்டார்.

தமிழின் பல அச்சு நூல்களை உலகிற்கு வெளிப்படுத்தியவர் அடிகளே. தமிழ்த்தூதினை முன்னிறுத்திய அவரது வெளிநாட்டுப்பயணங்களே அதனைச்சாத்தியமாக்கியது. இவற்றுள் கார்த்திலா (Cartilha), தம்பிரான்வணக்கம், கிறிஸ்தியானிவணக்கம் ஆகிய மூன்று நூல்கள் முக்கியமானவை.

கார்த்திலா என்னும் நூல், தமிழ் எழுத்துக்களைக்கொண்டு அச்சிடப்படாமல் தமிழ்ச்சொற்கள் போர்த்துக்கேய எழுத்துக்களில் ஒலி பெயர்த்து எழுதப்பட்டதாகவும் சொல்லுக்குச்சொல் போர்த்துக்கேய மொழிபெயர்ப்புடன் அமைந்ததாகவும் விளங்குவது. 1554ல் அச்சிடப்பட்ட இந்நூலை 1954ல் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் அடிகள் கண்டறிந்து வெளிப்படுத்தினார்.

Doctrina Christam என்ற தலைப்பில் (கிறிஸ்துவப்படிப்பினை) மார்க்கோஸ் ஜோர்ஜ் அடிகள் போர்த்துக்கேய மொழியில் எழுதிய நூலை ஹென்றிக் ஹென்றிக்கஸ் அடிகளும் பீற்றர் மனுவேல் அடிகளும் இணைந்து மொழிபெயர்த்தனர். தம்பிரான் வணக்கம் என மொழிபெயர்ப்பாளர்களால் இது குறிப்பிடப்பட்டுள்ளது. 16 பக்கங்களையுடைய இந்நூல் கேரளத்திலுள்ள கொல்லம் என்னும் ஊரில் 1578ல் அச்சிடப்பட்டது. இதன் ஒரேயொரு பிரதியாக அப்போது ஹவார்ட் பல்கலைக்கழக நூலகத்தில் பாதுகாக்கப்பட்டிருந்த பிரதியின் ஒளிப்படப்பிரதியை தனிநாயகம் அடிகள் பெற்று அது பற்றி கட்டுரை எழுதியபோதுதான் தமிழகம் இந்நூலைப் பற்றி அறிந்தது. இந்தியாவில் அச்சேறியமுதல் தமிழ் நூலாகக் கிடைக்கப்பெற்றுள்ள இந்நூலை வெளிக்கொணர்ந்த பெருமை அடிகளையே சாரும்.

கிறிஸ்தியானி வணக்கம் என்னும் நூல், 1579ல் கொச்சியில் ஹென்றிக்ஹென்றிக்கஸ் அடிகளால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டது. இதுவும் போர்த்துக்கேய மொழியிலேயே எழுதப்பட்டது. கிறிஸ்தவத்தின் அடிப்படை உண்மைகளை வினா விடை வடிவில் இது கூறுகின்றது. 122 பக்கங்களைக்கொண்ட இந்நூலின் பிரதி பிரான்சிலுள்ள சொர்போன் பல்கலைக்கழக நூலகத்திலிருந்து தொலைந்ததாகவும் ஏற்கனவே எடுக்கப்பட்ட ஒளிப்படப்பிரதியினை தூத்துக்குடி ஆயர் ரோச் ஆண்டகையிடமிருந்து பெற்று எடுக்கப்பட்ட பிரதியினை ஹவார்ட் பல்கலைக்கழகத்திற்கு அடிகளே கொடுத்து பிரதிகள் எடுக்கச் செய்தார் எனவும் அறிய முடிகின்றது.

எனவே தமிழின் ஒலிவடிவ முதல் அச்சுநூலையும் (காத்திலா), தமிழ்மொழியின் முதல் (வரிவடிவம்) அச்சுநூலையும் (தம்பிரான் வணக்கம்) அறிஞருலகத்திற்கு தெரியப்படுத்தியவர் அடிகளே.

ஜப்பானுக்கு அவர் மேற்கொண்ட பயணம், பல்வேறு வகைகளில் தமிழ்த்தூதினை வலுவுள்ளதாக்கியது.

ஜப்பானியமொழி தமிழைப்போல ஒட்டுநிலை மொழி என்பதை வெளிப்படுத்தி இது பற்றிய ஆய்விற்குத் தூண்டினார்.

ஹவாய்த் தீவிற்கான பயணம் தமிழ்த்தூதின் இன்னுமொரு மைல் கல்லாகும். சங்ககாலப் பழக்க வழக்கங்களுக்கு நிகரான வழக்கங்கள் அங்கு இடம்பெறுவதனை ஒப்பிட்டுக் கூறினார்.

தமிழ்த்தூதுப் பயணங்களின் மற்றுமொரு விளைவே அவரால் 1964ல் நிறுவப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமாகும். கீழைத்தேச நாடுகளின் மகாநாடு டில்லியில் கூடியபொழுது தமிழுக்கென உலகு தழுவிய வகையில் ஆய்விற்கான நிறுவனம் ஒன்றின் தேவையை அவர் உணர்ந்தார். தன்னம்பிக்கையுடனும் விடா முயற்சியுடனும் அதனைச்சாத்தியமாக்க உலகு தழுவிய நோக்கே காரணமாய் அமைந்தது. பொதுச் செயலாளராகவிருந்து இதன் மூலம் இவர் நடாத்திய அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகள் அடுத்துச் சிறப்பிடம் பெறுகின்றன.

முதலாவது மகாநாடு அடிகளின் தலைமையில் 1966ல் மலேயாவில் இடம்பெற்றது. 21 நாடுகளிலிருந்து அறிஞர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 1968ல் சென்னையில் இரண்டாவது மகாநாடும், 1970ல் பாரிசில் மூன்றாவது மகாநாடும், 1974ல் யாழ்ப்பாணத்தில் நான்காவது மகாநாடும், 1981ல் மதுரையில் ஐந்தாவது மகாநாடும் நடத்தப்பெற்றன. அடிகள் முதல் நான்கு மகாநாடுகளிலும் அர்ப்பணிப்புடன் பங்குகொண்டார்.

தமிழ்இலக்கியம், தமிழ்மொழி என்பன பற்றி ஆராயும் உரிமை தமிழர்க்கு மட்டுமே உரியது என்பதை தகர்த்தெறிந்து தமிழரல்லாதோரும் தமிழ்மொழி ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட களம் அமைத்துக்கொடுத்தமை, தமிழ் இலக்கியத்தையும் தமிழ் இலக்கணத்தையும் பற்றியதாகவே தமிழாராய்ச்சி கருதப்பட்டு வந்த நிலைமையை மாற்றி தமிழ்மக்களின் வரலாறு, பண்பாடு, சமயம், தத்துவம், தொல்பொருளியல், பிறநாட்டவர் தொடர்பு, மொழியியல் முதலான பல துறைகளிலும் தமிழாராய்ச்சி விரிந்து செல்ல வழி வகுத்தமை, இந்தியாவின் அடிப்படைப் பண்பாட்டையும் உயரிய கலைகளையும் புரிந்துகொள்ள தமிழ்மொழியைக் கற்க வேண்டிய இன்றியமையாமையை உணரச் செய்தமை, யாரும் செய்திராத பெரியளவில் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களிலுள்ள தமிழ்மொழி அறிஞர்களை ஒன்று கூட்டி உலகத் தமிழாராய்ச்சிக்கு வித்திட்டமை ஆகியன இந்த ஆராய்ச்சி மகாநாடுகளால் விளைந்துள்ள பயன்களாகும்.

ஆக தமிழ்நாட்டிற்கும் இந்திய எல்லைகளுக்கும் அப்பால் தமிழின் சிறப்பை கொண்டு சென்றதன் மூலம்தான் இவை நடந்தேறின. இதற்கு அவரது தூதுரைப்பணி மகத்தான பங்களிப்பை நல்கியிருந்தது.

அமெரிக்காவில் விரிவுரைகள் மூலமாகவும், வானொலி மூலமாகவும், செய்தித்தாள் மூலமாகவும் தமிழின் சிறப்புக்களைப் பரப்பினார். ஐக்கிய அமெரிக்காவில் ஓராண்டில் தமிழைப் பற்றி இருநூறு விரிவுரைகளை அவர் நிகழ்த்தியதாக அவரே குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்திற்குச் சென்றிருந்தபொழுது கோயி-லொன்றில் அவர்களுடைய மன்னரின் முடி சூட்டு விழாவில் பாடும் தமிழ்ப்பாக்கள் பற்றி வினவியபொழுது கிரந்தத்திலும் தாய் (Tai) மொழியிலும் எழுதப்பட்டிருந்த சில ஏடுகளை அவர் படித்துக்காட்டியதாகவும் அவை மாணிக்கவாசகரின் ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை’ எனத்தொடங்கும் திருவெம்பாவையின் முதலிரு செய்யுள்களுமாகும் எனத் தாம் அறிந்து கொண்டதாகவும் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்து. கம்போடியா போன்ற கிழக்காசிய நாடுகளுக்கும் தமிழகத்திற்குமுள்ள கலாசார,

தொடர்தல் 70ம் பக்கம்

# கம்பன் ஒரு பெருங்கடல்...

67ம் பக்கத் தொடர்ச்சி...

மீட்க வந்த திருமாலுமாகின்றார். தமக்கென வாழாப் பிறர்குரியாளன் எனும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்ந்த சிறப்பை இராமர் தம் வாழ்க்கையிலும் மொழிகளிலும் காட்டுகின்றார்.

*‘ஆவுக்காயினு மந்தணர்க் காயினும்*
*யாவர்க்காயினு மெளியவர்க் காயினும்*
*சாவப்பெற்றவரே தகை வானுரை*
*தேவர்க் குந்தொழுந் தேவர்களாகுவார்.’*

‘தவமெலாங் கொள்க’ எனும் தியாகமும் மனப்பான்மையும் எத்துணைச் சிறப்பாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது. இறைவணக்கமும் இறைவழிபாடும் இறையன்புமே தமிழ் மக்களுடைய மிகவும் உயர்ந்த செல்வங்கள். இவற்றை உருவாக்கிக் காட்டும் காப்பியமே இராமாயணம். நாத்திகம் நம் மக்களின் இயல்பிற்கு அப்பால் நடனம் புரியும் ஒரு கொள்கை. இக்காரணம் பற்றியே இறைவன் மாட்சி குன்றக்கூறும் புத்தமும் சமணமும் தமிழ்நாட்டில் நிலைபெற்றில.

யான் இளைஞனாகக் கல்வி கற்ற பொழுது ஒரு சிறிது ஹோமரையும் வெர்ஜிலையும் கற்றேன், ஆங்கிலம் படித்தக்கால் ஏதோ மில்டனையும் shakespeare ஐயும் கற்றேன், இத்தாலிய நாட்டில் குருமடக் கல்வியில் ஈடுபட்டபொழுது ஒருசிறிது தாந்தேயையும் தச்சோவையும் கற்றேன், பிரஞ்சு மொழியுடன் தொடர்புவைத்தக்கால் Chamon de Roland ஐப் புரட்டிப் பார்த்தேன், போர்த்துக்கீசிய மொழியைச் சிறிது கற்று Camoes cila Os Husiades எனும் காப்பியத்தைப் படித்துப் பார்த்தேன் எனினும்.

*‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்*
*வள்ளவர்போல் இளங்கோவைப்போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை*
*உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை’*

கம்பராமாயணமும் கீழ்நாட்டாரும் மேல்நாட்டாரும் வகுத்த பெருங்காப்பியத்தின் இலக்கணங்களை நன்றாகப் புலப்படுத்துகின்றது. தண்டியின் இலக்கணமும் Aristootle இன் இலக்கணமும் நம் காப்பியத்தில் இலக்கியம் காண்கின்றன. பண்டைக் காலத்து Beowulf, Chamson de Roland, வால்மீகியார் வரைந்த (heroic epic) வீரகாப்பியப் பண்பு கம்பராமாயணத்திலுண்டு: வீரத்தையும் வீரனையும் வீர முறையில் காட்டுவதே வீரகாப்பியம், தன் நிகரில்லாத தலைவனை மக்களுக்கு எடுத்துக் காட்டாகக் காட்டுவது வீர காப்பியம். (Authentic epic) அல்லது இயற்கைக் காப்பியம் என்பது மக்கள் தலைமுறை தலைமுறையாகப் பாடிவந்த பொருளையும் சொல்லையுங் கொண்டு இயற்றப்பெற்ற காப்பியம். ஹோமருடைய இலிபடும் odynesy உம் கிரேக்க மக்கள் பாடிவந்த பொருள் பற்றி எழுந்த காப்பியங்கள். புலவர் தம் திறமையால் நாட்டுப் பாடல்களையும் அவற்றின் சொற்றொடர்களையும் பயன்படுத்தியுள்ளார். இயற்கைக் காப்பியம் மக்களால் ஏட்டில் படித்ததன்று. காதால் கேட்டின்புறத் தக்கது. கம்பரும் தம் காப்பியத்தில் தமிழ் நாட்டில் இராம சரித்திரத்தைப்பாடும் பல செய்யுட்களைச் சேர்த்திருக்க வேண்டும். அவர் காப்பியம் பாடிக்கேட்கத் தக்கது, செவியால் நுகரத்தக்கது. Literay epic எனும் இலக்கியக் காப்பியம். திருத்தமாகப் புலவரால் படித்துச் சிந்தித்து அனுபவிக்கத் தக்கது. Vergil, Milton போன்றவருடைய காப்பியம் இலக்கியக்காப்பியம்: கம்பன் காப்பியமும் திருத்தமாக அமைக்கப்பெற்ற காப்பியம் தான். ஏனைய உலகக் காப்பிய ஆசிரியருடன் கம்பனை ஒப்புநோக்கிப் படிப்பதால் கம்பனுடைய பெருமையும் ஏனையோருடைய பெருமையுந் தோன்றும். மேலும் கம்பன் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றைப் பிரிக்கும் ஒரு பெருங்கடல், கம்பனின் காப்பியத்தில், அவர் முன்னோர் மொழியையும் பொருளையும் பொன்னே போல் போற்றியுள்ளார். அவர் பின்வந்த இலக்கிய ஆசிரியருக்கு அவரே பெருங்களஞ்சியமும் ஆசானுமானார். தாந்தே வெர்ஜிலைக் கண்டதும் ‘The Seimaestri’ நீவிர் என் ஆசானென்றும் அழைக்கின்றார். கம்பன் தமிழ்நாட்டின் ஆசான், கம்பனும் வள்ளுவனும், கம்பனும் இளங்கோவும், கம்பனும் சேக்கிழாரும், கம்பனும் நால்வரும் இன்னொரன்ன பொருள் பற்றி ஆராய்வது தமிழ் ஆராய்ச்சியில் புதிய முறைகளையும் வழிகளையும் காட்டும் என்பது ஒருதலை C.M. Bowra என்பார் எழுதிய ‘From Virgil to Milton’ எனும் நூலைப்போல் நம் காப்பியங்களைப் பற்றிய நூல்கள் நமக்கு வேண்டும்.

florence மாநகரில் ஒரு கோயிலுண்டு. அங்குள்ள தாந்தேயைப் பற்றிய ஓவியமொன்று என் நினைவிற்கு வருகின்றது. Florence நகர் இருள் சூழ்ந்து கிடக்கும் வேளையில் தாந்தே தம் நூலை விரித்துக் காட்டுகின்றார். அவ்வேளையில் அந்நூலிலிருந்து செல்லும் ஒளியால் நகர் புத்துயிர் பெறுகின்றது. கம்பர் தரும் இராமாயணம் அத்தகைய ஓர் ஒளிப்பிழம்பு. அதனால் தமிழ்நாடு புத்துயிர் பெறுதல் வேண்டும். அப்புத்துயிர் பெறுவதற்கு நம் அறிஞர் விளக்கத்திற்குப் புதுவிளக்கம் அளித்தல் வேண்டும்.

*நன்றி: கம்பமலர்*

■ ■ ■

## தமிழ்த்தூது

# தனிநாயக அடிகளின் ஆய்வு...

68ம் பக்கத் தொடர்ச்சி...

புலமைத்திறனே காணப்படுகிறது.

சங்ககாலப் புலவர்களுள்ளே ஔவையார் சிறந்தவர். அரண்மனைகளில் செல்வாக்குப் பெற்றவர். அரசர்களுடனும் குறுநில மன்னர்களுடனும் நட்புறவு கொண்டாடியவர். அவர் தமிழ்ச் சமூகத்தின் ஆற்றல் மிக்க கல்வியாளராகவும் திகழ்ந்தார். ஆண்பாற் புலவர்களதும் பெண்பாற் புலவர்களதும் பெயர்களும் தொழில்களும், தமிழ்நாட்டில் கல்வியும் கவிதையும் ஒரு தனி வகுப்பினருக்கோ, குறிப்பிட்ட தொழில் செய்கின்றவர்களுக்கோ மட்டும் சொந்தமல்ல என்பதை நிரூபிக்கின்றன. ஆனால் எல்லோரும் தங்கள் அறிவையும் சிந்தனையையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்ற, ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமாகச் செய்யுளைக்கையாண்டனர் என அடிகளார் கூறுவர். புலவர், பாணர், அரசர், குறுநில மன்னர் ஆகியோர் அடிக்கடி சந்தித்து, தமிழ் நாட்டில் பண்பாடு, மொழி, இலக்கிய ஒருமைப்பாடு என்பவற்றை நிலைக்கப்பண்ணினர். அரசர், குறுநில மன்னர் ஆகியோரிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் நிலையான அரசும் நிலவுவதற்குப் புலவர் பெரிதும் பாடுபட்டனர் என்ற கருத்தையும் அடிகள் குறிப்பிடுவர்.

சங்கப்புலவர்கள் பாடிப் பரிசில் பெறும் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தாலும் சமுதாயத்தில் கௌரவமான இடத்தைப் பெற்றிருந்தனர். அரசர்கள், வள்ளல்கள் என்போர் புலவர்களுக்குரிய மதிப்பையும் பரிசுகளையும் உரியவேளைகளில் கொடுக்காதுவிட்டால், புலவர்கள் அவர்களைக்கடிந்து கொள்ளும் அளவுக்குப் புலமையும் சமூக அங்கீகாரமும் பெற்றிருந்தனர் என்பதற்குப் புறநானூறு 162ம் பாடல் சான்றாகும்:

இளவெளிமான் என்னும் அரசனிடம் பாடிப்பரிசில் பெறச்செல்கிறார் பெருஞ்சித்தனார் என்ற புலவர். அரசனோ, புலவரை உரியவாறு மதித்துப் பரிசில் வழங்கவில்லை. அதனால் சீற்றம் கொண்ட புலவர் இன்னொரு அரசனை நாடினார். அம்மன்னன் பெரும் பொருட்களுடன் யானையையும் பரிசிலாக வழங்கினான். அவற்றை அப்படியே கொண்டுவந்து, தன்னை அவமதித்த இளவெளிமானின் காவல் மரத்தடியில் வைத்துவிட்டு யானையையும் காவல் மரத்தில் கட்டிவிட்டுச்சென்றார் அப்புலவர். இது அரசனை அவமதிக்கும் செயலாகும். இதுபோன்றே ஔவையாருக்கும் ஒரு சந்தர்ப்பம் நேரிட்டது. ஔவையார் ஒருநாள் அதியமான் நெடுமானஞ்சியிடம் பரிசில் பெறச்சென்றார். ஔவையார் மீதுள்ள மதிப்பும், அன்பும் காரணமாக மன்னன் அவரைத்தன் மாளிகையில் சில நாட்கள் தங்கவைக்க நினைத்து பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தினான். ஆனால் தன்னை உடனே அரசன் கௌரவிக்காதபடியால் ஆத்திரங்கொண்ட ஔவையார், அரச வாயிற்காப்போனை விளித்துப்பாடிய பாடலின் சில வரிகளை நோக்கலாம்:

*‘வாயி லோயே வாயி லோயே...*
*கடுமான் தோன்றல் நெடுமானஞ்சி*
*தன்னறி யலன்கொல் என்னறி யலன் கொல்...’*

(புறம்: 206)

இவ்வாறாகச் சங்ககாலப் புலவர்கள் தம் கல்வித் திறத்தாலும் புலமை ஆளுமையாலும் அரசருக்கும் அடங்காத வல்லமையுடன் வாழ்ந்தனர் என்பது புலப்படுகின்றது. மேலும் சங்கப் புலவர்களது வாய்ச் சொல் நன்மையும் தீமையும் விளைவிப்பதாகவும் அமைந்திருந்தமையை அறியக்கூடியதாக உள்ளது: புலவரால் புகழ்ந்து பாடப்படுவோர் விண்ணுலக நல்வாழ்வு பெறுவர் என்ற செய்தியும் (புறம். 27) பேசப்படுகிறது. இவ்வாறு சங்கப் புலவர்களின் ஆற்றல்களை நன்கு உணர்ந்துகொண்ட தனிநாயக அடிகள், சங்கப்புலவர்களை எபிரேய நாட்டுப்புலவர்களுடன் ஒப்பிடுகிறார். “எபிரேய இறைவாக்கினர்கள் ஒழுக்கத்தையும் சமூக நீதியையும், உண்மையையும் நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டார்கள். தமிழ் நாட்டுப்புலவர்களும் இத்தகைய பணிகளையே செய்துவந்தார்கள். சங்கப் புலவர்களான இறை வாக்கினர்களின் பணிகளை எபிரேய நாட்டில், தொடக்க காலத்து ஆற்றல் மிக்க குருக்களின் பணி வளர்ச்சி அடைந்ததற்கு ஒப்பிடலாம். ஆற்றல் மிக்க குருக்களின் பணி தமிழ்ச் சமுதாயத்தில் புலவர்களின் பணியாக வளர்ச்சி அடைந்தது” என அடிகள் ஒப்பிட்டுக்கூறுவது நோக்கத்தக்கது.

குடும்ப வாழ்க்கையே ஒரு சமூகத்தை நிலைபெறச்செய்வதாகும் என்பதை அனைத்துப் பண்பாடுகளிலும் புலவர்கள் எடுத்துரைத்து வந்துள்ளார்கள். இதனையே திருவள்ளுவரும்,

*‘பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த*
*மக்கட்பேறு அல்ல பிற.’*

*(குறள்-61)*

என்ற குறளில், மனிதர் பெறவேண்டிய நற்பேறுகளில் நன்மக்கட்பேறு பற்றிக்குறிப்பிட்டார். சங்கப் புலவர்களும் இவ்வகையில் பெற்றோரியம் புகட்டும் ஆசிரியர்களாகக் காணப்படுகின்றனர். பாண்டியன் அறிவுடைநம்பி இதுதொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தும் *‘படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும் உடைப்பெருஞ் செல்வர் ஆயினும்...’* எனவரும் புறநானூற்றுப் பாடல் (188) எல்லோராலும் படிக்கத்தக்கதாகும்:

மனித வாழ்க்கையில் பிள்ளைச் செல்வத்தின் அருமையையும், தேவையையும் இச்செய்யுள் வலியுறுத்துகின்றது. சங்கப்புலவர் பொன்மொழிகளாகப் பல வரிகளைத் தம் செய்யுள்களில் தந்துள்ளனர். அவற்றட் சிலவற்றைக் இங்கு நோக்கலாம்:

*‘இம்மைச்செய்தது மறுமைக்காம்..’*

*(புறம் : 134)*

*‘எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே’*

*(புறம் : 187)*

*‘புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழி யெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்...’*

*(புறம் : 182)*

*‘யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர் தரவாரா...’*


*(புறம் : 192)*

என்பன குறிப்பிடத்தக்கவை.

இவ்வாறாகத் தனிநாயக அடிகளார் சங்க காலத்துப்புலவர்களின் சமூக நோக்கும், அவர்கள் எவ்வாறு மக்களுக்கும் மன்னருக்கும் பயன்படும் வகையில் தம் செய்யுள் திறன்களைப் பயன்படுத்தி உள்ளனர் என்பதும் ஈண்டு ஆராயப்பட்டன. உலகநோக்கும் மனிதநேயமுங்கொண்டு சங்கப்புலவர்கள் செய்யுள் இயற்றியதோடு, அவை காலங்கடந்தும் நிலைபெற்றுள்ளமையும் படித்து இன்புறத்தக்கதாகும்.

**உசாத்துணை:**

- *டாக்டர் வே.ஆ.நடதனிஜான் அழகரசன், தனிநாயக அடிகள் வாழ்வும் பணியும்*
- *S. Thaninayagam, Landscape and Poetry- A Study of Nature in Classical Tamil Poetry.*



*balasundaram@thaiveedu.com*

# தனிநாயகம் அடிகளாரின் தமிழ்...

69ம் பக்கத் தொடர்ச்சி...

மொழித்தொடர்புகளைப் பற்றி எடுத்துரைத்து ஆய்வுக்குத் தூண்டினார்.

இதுமட்டுமின்றி தமிழரின் கலைகள் தொடர்பான விடயங்களையும் தம் பயணங்களில் அவர் வலியுறுத்தத் தவறவில்லை. கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை முதலானவற்றின் சிறப்புக்களையும் வெளிநாட்டுப்பயணங்களில் பரப்பி வந்தார்.

தமிழ்த்தூதிற்கென்று வேற்று நாடு செல்வோர் இயற்கையான அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப்பொலிவும், பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட தெளிந்த கல்வியும் என மூன்றிலும் சிறந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற வள்ளுவரின் கருத்தினை வலியுறுத்தும் அடிகள் இவற்றுடன் தாம் செல்லும் அவ்வேற்று நாடுகளில் அவ்வேற்றுமொழியை நன்றாகப்பேசத் தெரிந்தவராகவும் மேடைக்கலை வல்லுநராகவும் இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

மேற்கூறிய பண்புகளை அடிகள் பெற்றிருந்தமை தமிழ்த்தூதுப்பணிக்கு அவருக்குப் பேருதவியாக இருந்தன. இப்பண்புகள் அவரது ஆளுமையை விருத்தி செய்து பரந்த நோக்குடன் செயற்படவும் உலக அரங்கின் பல்வேறு மொழி பேசும் தேசங்களுக்கு தமிழின் பெருமையைப் பரப்பவும் அவருக்குக் கை கொடுத்தன.

“அயல்நாட்டுத் தொடர்பாலும் அயல்மொழிப் பயிற்சியாலும் நம் நாட்டு மொழிப்பற்று நனி சிறந்து வளர்கின்றது. பிறமொழிகளுடன் தமிழைச் சீர் தூக்கிப் பார்க்கும் பேற்றினையும் அடைகின்றோம்.” என அவர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

“இன்று இது அவசியமானது. தமிழுக்கு இன்று ஏற்பட்டுள்ள இன்னல்கள், பகைமை இவற்றைப் புறங்காணும் கருவி தமிழ்த்தூது முரசின் ஒலி ஒன்றே என நம்புகின்றேன்.” என தமிழ்த்தூதின் அவசியம் பற்றி அடிகளார் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் இப்பணி தொடரப்பட வேண்டியது என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

‘உலகம் பெருவாழ்வு அடையுமாறு நாமனைவரும் ஒருங்கு சேர்ந்து உழைப்பதே இவ்வழகிய மொழியை நமக்குத் தாய்மொழியாகத் தந்த இறைவனுக்கு நாம் காட்டும் நன்றித் தொண்டாகும்.’ என்ற அவரது பொன் மொழி உலக நோக்குடையது.

உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களையும் தமிழ்மொழி ஆராய்ச்சியாளர்களையும் ஒன்று திரட்டி உலகத்தமிராய்ச்சி மகாநாடுகளை நடத்திய தனிநாயகம் அடிகளுக்கு இன்று உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் அறிஞர்களாலும் தமிழ் ஆராயச்சியாளர்களாலும் நூற்றாண்டு நினைவு கொண்டாடப்படுகின்றமை அவரது பணிக்குக் கிடைத்த பயனாகும்.



*ruby.francis@thaiveedu.com*



தமிழ்த்தூது

# தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்

## - தமிழ்ப்பேரறிஞர் தனிநாயக அடிகள் -

**இவ்வாண்டு உலகம் எல்லாம் பரவியிருக்கும் தமிழ் ஆர்வலர்கள் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி அவரை நினைவு கூர்கின்றனர்.**

**கிறிஸ்துவப் பணிக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பின் தமிழைத் துறைபோகக் கற்று, தமிழ்மொழியின் தொன்மையையும் செழுமையையும் உலகறியச்செய்து, தமிழ் முனிவராக மலர்ந்தவர் தனிநாயகம் அடிகளார். பட்டங்கள் பலபெற்று, பல மொழிகளறிந்து, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி அர்த்தமுள்ள மாநாடுகளை நடத்தித் தமிழ் செழுமையுறத் துணை நின்றவர். Ambassador for Tamil என இந்தியப் பத்திரிகைகளால் பாராட்டப் பெற்றவர். இவர் எழுதிய ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகளை இன்றைய தமிழ் வாசகர்கள் எல்லோரும் வாசித்தோர் என்றில்லை.**

**தாய் வீடு வாசகர்களுக்காக பேரறிஞர் தனிநாயக அடிகளின் ஆக்கங்களையும் அவர் பற்றிய ஆக்கங்களையும் தொடர்ந்து வெளியிட எண்ணியுள்ளோம்.**

இவ்வாண்டின் மூதறிஞர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் நினைவுச் சொற்பொழிவுகளை என்னை நிகழ்த்துமாறு அழைத்தமைக்குச் செல்வநாயகம் நினைவுக் குழுவினர்க்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அடியேன் ஓய்வுபெற்றிருப்பதாலும், என் கண்பார்வை குன்றியிருப்பதாலும், நூற்கூடம் என்னிடம் இப்பொழுது சிறிதாயிருப்பதாலும், ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்த வாய்ப்புகள் குறைந்திருப்பதாலும், இப்பெருந்தகையின் நினைவிற்கு அடியேனும் அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற விருப்பினால் இச்சொற்பொழிவுகளை நிகழ்த்த உடன்பட்டேன்.

முப்பது ஆண்டுகளாகத் தமிழினத்தின் ஈடேற்றத்துக்காக ஓர் இயக்கத்தை உருவாக்கி அவ்வியக்கத்தின் பயனாக இந்நாட்டிலுள்ள தமிழரின் மொழி, பண்பாடு, அரசியல் உரிமைகள் காப்பாற்றப்படல் வேண்டுமென உழைத்த பெருமகனாரின் நினைவாகத் தமிழ்த்துறைகளைப் பற்றிய இரு சொற்பொழிவுகளை நிகழ்த்த எண்ணியுள்ளேன். அன்னார் தொடக்கிவைத்த இயக்கம் இன்னும் வலுப்பெற்று இந்நாட்டில் நாம் முழு உரிமைகளுடன் வாழ வழிவகுக்க வேண்டுமென்று இறைவன் திருவருளை இறைஞ்சி நிற்கின்றேன்.

இன்றைய கூட்டத்திற்கு என் நண்பர் துணை வேந்தர் வித்தியானந்தன் தலைமைதாங்குவது பற்றியும் மகிழ்ச்சி கொள்கின்றேன். அவர்கள் இந்நாட்டில் தமிழர் பண்பாட்டின் சில துறைகள் வளர்ச்சிபெற வேண்டுமென அரும்பணியாற்றியுள்ளார். மேலும் அவரியற்றிய ‘தமிழர் சால்பு’ எனும் நூல் தமிழர் பண்பாட்டுத் துறையில் எழுதப்பெற்ற சிறந்த முதல் நூல்களில் ஒன்று. இன்னும் இவ்விரிவுரையின் இறுதியில் தமிழ்த் தலைவர் உயர் திருவாளர் அமிர்தலிங்கம் நன்றியுரை வழங்கப்போவதாக அறிகின்றேன். மூதறிஞரின் இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துபவர் அவர். அவர் தலைமையில் நம்மியக்கங்கள் அனைத்தும் வெற்றிபெறல் வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

### பண்பாடு என்பது யாது?

மக்களியல் வல்லுநர் (Anthropologists) பண்பாடு எனும் சொல்லைக் கையாளும் பொருள்களைப் பற்றி நாம் குறிக்க வேண்டியதில்லை. அவர்களின் கருத்தின்படி பழைய மக்களின் வாழ்க்கையை விளக்கும் எல்லாத் துறைகளும் பண்பாடு என்னும் சொல்லில் அடங்கும். சென்ற நூற்றாண்டில் மத்தியு ஆர்ணல்ட் (Mathew Arnold) எனும் நூலாசிரியர் தாம் எழுதிய ஒரு நூலில் இக்காலத்திற்கு ஏற்றவாறு பண்பாட்டுத் துறையை விளக்கினார். இந்த நூற்றாண்டில் டி.எஸ்.எலியட் (T.S.Eliot) எனும் ஆங்கிலப் புலவர் ‘பண்பாட்டின் வரையறை பற்றிய குறிப்புகள்’ எனும் நூலில் பண்பாட்டை இன்னும் விரிவாக விளக்கினார். பண்பாடு என்பது இனிமையும் ஒளியும் என்றும், சிந்தனையின் தொழில் என்றும், அழகிலும் மனித உணர்ச்சியிலும் ஈடுபாடு என்றும் கூறியுள்ளார். நம்மிலக்கியத்தில் பண்பாடு என்னும் சொல் இந்நூற்றாண்டில்தான் ஆங்கிலமறிந்த தமிழறிஞரால் உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இன்று நாம் பண்பாடு எனும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புள்ள பொருள்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது. கலித்தொகையில் ‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது’ என்றும், வள்ளுவத்தில் ‘பண்புடையார் பட்டுண்டு உலகம்’ என்றும் வருவதைக் காண்க. பண்பாடு உடையவரைச் சான்றோரென்றும், ஒழுக்கமுடையோரென்றும், ஒளியோரென்றும்,

*தொடர்தல் 67ம் பக்கம்*

மாசற்ற காட்சியுடையோரென்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் Culture எனப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச் சொல் எவ்வாறு இலத்தீன் சொல்லாகிய Cultura Agri நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து பிறந்ததோ அதுபோல தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். உழவுத் தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும், மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர் பயன்படுத்தி-யுள்ளனர்.

பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு விளையாட்டுகள் இவற்றையெல்லாம் குறிக்கும். ஓர் இனத்தாரின் பண்பாட்டை நாம் அறிந்து கொள்வதற்கு உயர்ந்த இலக்கியம் பயன்படுவதுபோல, நாடோடி இலக்கியமும் பயன்படுகின்றது. அதனை நாட்டுப் பாடல்களிலும், நாடோடி இலக்கியங்களிலும், பழமொழிகள் முதுமொழிகளிலும், இசையிலும், நாடகத்திலும், நாட்டியத்திலும், செந்தமிழ் கொடுந்தமிழ் அமைப்பிலும், வளர்ச்சியிலும் காணலாம். மேலும் ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை முதலிய கலைகளிலும் ஓரினத்தாரின் பண்பாடு தோன்றும்.

தமிழர் பண்பாட்டை ஈராயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் வளர்த்துவந்த இலக்கியங்களும் கவின்கலைகளும் எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும் ஒரு சில நூல்களை மட்டும் தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்களாகக் குறிப்பிட வேண்டுமாயின் ஐந்து நூல்களைக் குறிப்பிடுவேன். அவை தொல்காப்பியப் பொருளதிகாரம், குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் என்பன. தமிழர் பண்பாடு கால அடைவில் சிறிது மாறி வந்துள்ளது. ஆனால் அதனுடைய அடிப்படைக் கொள்கைகள் இத்துணை நூற்றாண்டுகளாக மாற்றங்கள் அடையவில்லை. ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்தில், சிறப்பாக அவர்களுடைய சமய – சமூகக் கொள்கைகள் தமிழ்நாட்டிலும் பரவின. சமணர், புத்தர், ஐரோப்பியர் தமிழ் நாட்டுடன் கொண்ட தொடர்பாலும் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் பிறநாட்டுச் சமயங்களும் மக்களும் தமிழ்நாட்டில் புகுந்த காலத்தில் தமிழ் மரபைக் காத்துவரப் பயின்றனர். தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சமணர். தமிழொ-ழுக்கத்தின் களஞ்சியமாகிய வள்ளுவத்தை இயற்றியவர் சமணர் என்று சிலர் கூறுகின்றனர். தொல்காப்பியரும் சமணரென்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் கருத்து. ஆனால் அக் கருத்துக்கு அவர் போதிய சான்றுகள் தரவில்லை. இந்நூலாசிரியரும் வீரமாமுனிவர் போன்ற மேனாட்டாரும் தமிழ் மரபையே தழுவி வாழவும் பாடவும் முயன்றனர்.

நம் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே எக்காலத்திலும் புலவர்கள் பாடியிருக்கின்றனர். பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டில் தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த எழுத்தாளர் பலர் ஆங்கிலத்தை நன்கு அறிந்திருந்தாலும், மேல்நாட்டு இலக்கியங்களையும், வரலாற்றையும் நன்கு பயின்றிருந்தாலும் அவர்கள் தமிழ்ப்பண்பாட்டை இழக்கவில்லை மாற்றவில்லை. மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை, சுந்தரம்பிள்ளை, வி.ஜி.சூரியநாராயண சாஸ்-திரி என்னும் பரிதிமால் கலைஞன், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் மு.வரதராசன் போன்றவர்கள் தம் ஆங்கிலப்பயிற்சியால் தமிழர் பண்பாட்டை விளக்கினாரொழிய அதனை மாற்றவில்லை.

நாகரிகம் என்னும் சொல்லும் பண்பாடு எனும் பொருளில் இக்காலத்தில் கையாளப்பட்டு வருகின்றது. திருக்குறளிலும், நற்றிணையிலும் முதல் முதல் தோன்றுமிச்சொல் நகரவாழ்க்கையின் அமைப்பையும் பயனையும் குறிக்கிறது. ஆங்கிலத்தில் Civilization என்று கூறப்படும் பொருளைத்தான் நாகரிகமும் குறிக்கின்றது. Coty, Citizen, Civilization என்ற சொற்கள் இலத்தீன் மொழியின் Civitas, Civis, Civilisatio எனும் சொற்களிலிருந்து தோன்றியவை. அதேபோல இந்த இலத்தீன் சொற்கள் எக்காலத்தில் தோன்றினவோ அக்காலத்திலேயே நகர், நகரநம்பியார், நாகரிகம் என்ற சொற்களும் தோன்றின. சங்க இலக்கியத்தில் நகர், நகரைக் குறிப்பதுடன் ஒரு பெரும் இல்லத்தையும் குறிக்கும். நகரில் சீரடைந்த மக்களை நகரநம்பியர் குறிக்கும். சிலப்பதிகாரத்திலும், மணிமேக-லையிலும் நகரநம்பியர் வருவதைக் காண்க. நகர் என்ற சொல் திராவிடச் சொல்தான் வட மொழிச்சொல் அன்று. ஆரியர் வட இந்தியாவைக் கைப்பற்றிய காலத்தில் திராவிட மக்கள் பெரும் நகர்களில் வாழ்வதைக் கண்டு வியப்பு அடைந்தனர். திராவிட மக்களிடமிருந்தே நகர்களை அமைக்கவும் ஆரியர் கற்றுக்கொண்டனர்.

இந்நூற்றாண்டில் நாகரிகம் என்னும் சொல்லையும் பண்பாடு என்ற பொருளில் கையாளுவது மரபாயிற்று. ஆனால் நாகரிகம் நகரவாழ்வையும், நகர வாழ்க்கையால் பெறப்படும் நலன்களையும் குறிப்பதுடன் அறிவியல் துறையால், பொருளியல் துறையால் மக்கள் அடைந்து வரும் மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் குறிக்கத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். சில வேளைகளில் பண்பாடு எது, நாகரிகம் எது என்று பிரித்துக் கூறுவது எளிதாக இராது. ரேணர் (Turner) என்பவர் The Great Culture Traditions என்ற நூலில் உலகின் பெரிய நாகரிகங்களையும், பண்பாடுகளையும் விளக்கியுள்ளார். ஆர்ணல்ட் ரொயின்பி (Arnold Toynbee) என்பவர் The Great Civilizations எனும் நூலில் பண்பாட்டையும் நாகரிகத்தையும் சேர்த்து விளக்கியுள்ளார். இவ்வாறு தமிழர் பண்பாடும் நாகரிகமும் என்று கூறுவதும் இயல்பாயிற்று.



“தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும், ஆழத்திலும், பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன்.”

பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் இந்து நாகரிகம் (Hindu Civilization), கிறிஸ்துவ நாகரிகம் என்று கூறும்பொழுது பெரும்பாலும் பண்பாட்டையே கருதுகின்றனர். ஆதலால்தான் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் Culture and Civilization என்று இணைத்துப் பாடத்திட்டத்தின் தலைப்பை வெளியிடுகின்றனர். ஆனால் இயன்றமட்டும் இவ்விருதுறைகளையும் பிரித்து நோக்குவது பண்பாட்டினை ஆழ்ந்து ஆராய்வதற்கு வழி வகுக்கும்.

## தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள் சில:

தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன். அவற்றை நம்மிலக்கியங்கள் பலவற்றில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை. ஆதலால்தான் புறநானூற்றில் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்றும், வள்ளுவத்தில் ‘யாதானும் நாடாமால் ஊராமால்’ என்றும் குறிப்பிட்டுள்ளன. விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என் கடன் பணிசெய்து கிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளென்றே கூறலாம்.

இவ்விலட்சியங்களைத் தமிழ் இலக்கியங்களில் பன்முறை தேற்றம் கொடுத்து வற்புறுத்துவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் வரும் ‘உண்டாலம்ம இவ்வுலகம்’ என்ற செய்யுளும், ‘இம்மைக்காவது மறுமைக்காமென’ என்ற செய்யுளும் குறிப்பிடத்தக்கவை.

நம்மிலக்கியங்களை நன்கு ஆராய்ந்தால் அவை பண்பாட்டுத்துறைகளை நன்கு பயன்படுத்துவதைக் காண்கின்றோம். தொல்காப்பியர் கருப்பொருளில் பண்பாட்டுத் துறைகள் சிலவற்றைக் கூறுகின்றார். அவற்றுள் வழிபாடும், இசையும், இசைக் கருவிகளும் சில. அகத்திணையியலில் 20ம் சூத்திரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

*‘தெய்வம் உணாவே மாமரம் புட்பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகை,*
*அவ்வகை பிறவும் கருவென மொழிவ’*

இவ்வாறே பண்பாட்டின் கொள்கைகளும், இலட்சியங்களும் எல்லாக் காலத்து இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வடஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர், ஐரோப்பியர் ஆசிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக்கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும், ஐரோப்பியக் கிறிஸ்தவரும், மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம்பெற்றன. வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன. சுநீதி-குமார் சட்டர்ஜி இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு திராவிடப் பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். சமணரியற்றிய சிலப்பதிகாரத்தையும் புத்தரியிற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவரியற்றிய தேம்பாவணியையும், உமறுப் புலவர் இயற்றிய சீறாப்புராணத்தையும் ஆராயுங்காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுளாரென்பதும் புலனாகின்றது.

இவை நிற்க, தமிழர் பண்பாட்டின் சிறப்பு இயல்புகள் சிலவற்றை ஒரு சிறிது ஆராய்வோம்.

## உலக மனப்பான்மை:

பண்டைக்காலம் தொடங்கி தமிழ் மக்கள் மேற்றிசை நாடுகளோடும், கீழ்த்திசை நாடுகளோடும் இந்தியாவின் வடபாகத்தோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் தமிழ்நாட்டின் பட்டையும், மிளகையும், முத்தையும் இன்னும் பல பொருள்களையும் உலகம் விரும்பியுள்ளது. தமிழ்நாட்டின் புவியியல் அமைப்பு, அதனை பண்டமாற்றத்திற்கு ஏற்ற இடமாக அமைத்துள்ளது. கீழ்த்திசை நாடுகட்குச் செல்லவேண்டிய மேற்றிசைப் பண்டம், தமிழ்நாட்டில் இறக்கப்பெற்று வேறு மரக்கலங்களில் கீழ்த்திசை நாடுகட்கு அனுப்பப்பட்டது. இவ்வாறே கீழ்த்திசைப் பண்டமும் தமிழ் நாட்டில் வைத்து மரக்கலங்களில் மெற்றிசை நாடுகட்கு அனுப்பப்பட்டது. மேற்றிசை நூல்களே சங்க இலக்கியத்தைப் போல் இவ்வணிகத்துக்குச் சான்று தருகின்றன. எனவே இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக்வாதிகள் (Stoic) உரோமப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலகமனப்பான்மையை வளர்த்தார்களோ அவ்வாறே சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ்நாட்டில் பரவியுள்ளது. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்றும், ‘யாதானும் நாடாமால் ஊராமால்’ என்றும் கூறுவதற்கு இம்மனப்பான்மை ஊக்கமளித்தது.

மேலும் சமணம், புத்தம் போன்ற சமயங்களும் தமிழ்நாட்டில் வரவேற்கப்பட்டதால் இம்மனப்பான்மை விரிவாகியது. பார்ப்பனர், மொழிபெயர்தேயத்தார், யவனர், புலம்பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள். இம்மனப்பான்மை ஒரு சில காலங்களில் சமயக்காழ்ப்பால் மாசு அடைந்ததாயினும், அது எக்காலத்திலும் தமிழ் மக்களிடம் வளர்ந்தே வந்துள்ளது. பிற மக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்னும் தன்மை இச்சிறப்பை மேலும் வளர்த்தது. இம்மனப்பான்மை வடஆரியர், கிரேக்கர் போன்றோருடைய பண்டைக் கொள்கைகளுடன் முரண்பட்டேயிருந்தது. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும், பிற மக்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் கூறிவந்தனர். வட ஆரியர் இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையேயுள்ள நிலம்தான் புண்ணியபூமி என்று கருதினர்.

## கண்ணோட்டம்:

உலக மனப்பான்மையில் இருந்து தோன்றிய வேறொரு இயல்பினை கண்ணோட்டமென்று (Toleronce, Ecumenism) அழைக்கலாம். தமிழ்நாட்டிற்கு அப்பாலிருந்து வந்த சமயங்களெல்லாம், தத்துவங்களெல்லாம் தமிழ்நாட்டில் தடையின்றிப் போதிக்கப்பட்டன. பெரும் விழாக்களில் தத்துவவாதிகள், சமயவாதிகள் தத்தம் கொடிகளைப் பறக்கவிட்டுத் தம் கருத்துகளைப்பற்றி உரை நிகழ்த்தினர். திருவள்ளுவர் தம் கருத்துக்களைப் பல மூல நூல்களிலிருந்து எடுத்திருக்க வேண்டும். சங்க நூல்கள் பல்வேறு கருத்துக்களுடைய புலவர்களின் இலக்கியப் படைப்புகளைக் கொண்டுள்ளன. சமணராகிய இளங்கோ அடிகள் தமிழர் தழுவிய பல பழக்கவழக்கங்களையும், வழிபாட்டு முறைகளையும் விரித்துக் கூறியுள்ளார்.

சமணரும், புத்தரும் இசைக்கலை, நடனக்கலை போன்ற கலைகளை வெறுத்தாராயினும் இளங்கோ அடிகள், திருத்தக்கதேவர் போன்றோர் தமிழ்க்கலைகளை நன்கு விரித்துக் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவர் சமணராக இருந்திருப்பார் என்ற கூற்றுக்கு அவருடைய காமத்துப்பாலும், இல்லறத்தைப் போற்றும் முறையும் முரண்பாடாக இருக்கின்றன. நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணிக்கு உரையெழுதியது போல சமணர் எனக் கருதப்படும் இளம்பூரணர், அகத்திணையியலுக்கு உரை-யெழுதியுள்ளார்.

இடைக்காலத்தில் வைணவர், சைவர் ஆகிய பார்ப்பன உரையாசிரியர் சமணநூல்களை எத்துணை ஆர்வத்துடன் அவை இலக்கிய நூல்களெனக் கருதி, அவற்றின் மூலங்கட்கு நுட்பமான உரைகளை எழுதியிருக்கின்றனர். பிற்காலத்தில் சமயசமரசக் கீர்த்தனைகள் என்றும், சமரசக் கொள்கைகள் என்றும் எங்கு உண்மையும் அழகும் உள்ளதோ அங்கிருந்து கருத்துக்களை நூலாசிரியர் எடுத்துத் தந்திருக்கின்றனர். பேராசிரியர் சேதுப்பிள்ளை திருக்காவலூர்க் கலம்பகத்தைப் பற்றியும், தேம்பாவணியைப் பற்றியும், சீறாப்புராணத்தைப் பற்றியும், தந்த கருத்துக்களைப் போல வேறு எவரும் எழுதியதாக நான் அறியேன். திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், கிறிஸ்துவின் அருள் வேட்டல், புத்தரின் அருள்வேட்டல் போன்ற இலக்கியங்களைப் பாடி இன்புற்று வாழ்ந்தார். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இயேசு-வைப்பற்றி, புத்தரைப் பற்றிப் பாடியுள்ளார்.

பிற நாடுகளிலிருந்து வந்த சமயக் குரவர் தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடித்து, இக்கண்ணோட்டத்துடன் தமிழர் மரபின்படியே இலக்கியங்களையும் இலக்கணங்களையும் யாத்தார்கள். வீரமாமுனிவர், கால்டுவெல்ஐயர், போப்பையர் போன்றவர்கள் இம்மனநிலையைக் கடைபிடித்து வாழ்ந்தவர்கள்.

தொடர்தல் 68ம் பக்கம்

# தமிழ்த்தூது

## பக்தி:

தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறிவருகின்றேன். ஏனெனில் தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும், ஆழத்திலும், பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன். பரிபாடல் முதலாக, இராமலிங்க சுவாமிகளும் விபுலானந்த அடிகளும் ஈறாக, பக்திப் பாடல்களைப் பாடிய புலவர்கள் எண்ணிறந்தவர்கள். பரிபாடலின்,

யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால் அன்பும் அருளும் அறனும் மூன்றும்.

விபுலானந்தருடைய...,
வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலரு மல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

அப்பர் சுவாமிகளின்...,
மாசில் வீணையும் எனும் பாக்களைப் பாடி இன்புறாத தமிழ் மக்கள் இல்லை.

இந்தப் பக்தி இலக்கியம் உண்டாகுவதற்கு நம் அகத்திணை இலக்கியம் ஒருவாறு துணையாக இருந்திருத்தல் வேண்டும். இன்று தமிழ் மொழியை ஆராயும்பொழுது பக்தியை உணர்த்தும் சொற்கள் பல அமைவதைக் காண்கின்றோம். ஆதலால் சமயப் பொருளற்ற பிற நூல்களிலும் இந்த மொழி ஒலிக்கிறது. எடுத்துக்காட்டாகப் பாரதிதாசன் பாடிய தமிழ் மொழி பற்றிய பாடல்கள் பக்திச் சொற்களை மிகுதியாகக் கொண்டவை. நாயன்மார், ஆழ்வார், சேக்கிழார், கம்பர் போன்றவர்களுடைய பக்திப்பண்பு உலகிலேயே நிகரற்றது.

இப்பக்திப் பண்பினை ஏனைய தமிழ்க் கலைகளிலும் காணலாம். தஞ்சாவூர்ப்பெரியகோவில், கங்கை கொண்ட சோழபுரம், இசைக்கலை, பரதநாட்டியம் போன்றவை பக்தியால் இயற்றப்பெற்றவை அல்லது பக்தியால் வளர்ச்சியுற்றவை. இப்பக்தி பிறநாடுகட்கும் பரவியது. இந்தோனீசியாவிலிருக்கும் பிறம் பாணான்பானாத்தரான் கோயில்கள், கம்புச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள், தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவைத் திருநாள் இத்தமிழ்ப் பக்தியின் பயனென்றே கூறவேண்டும். உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம் இப்பக்தியின் பயனென்பதை யார் மறுப்பார்? தமிழர் பண்பாடு பிறநாடுகட்குப் பரவுவதற்குப் பல்லவ சோழர் படைவீரம் மட்டுமல்ல இப்பக்தியும் காரணமாக அமைந்தது.

## ஒழுக்கம்:

தமிழர் பண்பாட்டில் பக்தி எங்ஙனம் சிறந்து விளங்கியதோ நீதியும் அவ்வாறு சிறந்து விளங்கியுள்ளது. பாரதியாரின் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்னும் கூற்றைச் சிந்திக்கும் பொழுதெல்லாம் அதன் உண்மையை உணர முடிகின்றது. உலகநீதி இலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்து அரும்பெரும் நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் என்னும் மகாத்மா, திருக்குறளைப் பற்றி எழுதும்பொழுது 'திருக்குறளைப்போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது' என்று குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளை அவர் ஜெர்மன் மொழிபெயர்ப்பில் படித்தார். தமிழ் மொழியில் அதனைப் படித்திருந்தால் இன்னும் பன்மடங்கு அதிகமாக அதன் பெருமையை உணர்ந்திருப்பார். திருக்குறளுக்குப்பின் தோன்றிய ஏனைய நூல்களைப்பற்றி நான் குறிப்பிடவேண்டியதில்லை. தமிழை முதற்கற்ற மேனாட்டார் அனைவரும் நம் நீதி நூல்களையே முதலில் மொழிபெயர்த்துக் தமிழ் மக்களுடைய வாழ்க்கை ஞானத்தைப் போற்றினார்கள். ஒழுக்கமென்பது தமிழர் பண்பாட்டின் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்து, இன்றும் தமிழர் வாழ்க்கைக்குப் பெரும் அழகையும் மனநிறைவையும் நல்குகின்றது. தமிழ் மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாகத் தனிநாடுகளில் வாழ்ந்து செழித்தோங்குவதற்கும், அரசியல் வாழ்க்கைக்கும் இவ்வொழுக்கமே துணையாக அமைந்தது. எனவேதான் போப்பையர் இத்துணை நீதிநூல்களை இயற்றிய மக்களுக்குக் கடவுளின் சிறப்பான அருள் இருத்தல் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் நலக் கொள்கை:

இம்மக்கள் நலக் கொள்கையை ஆங்கிலத்தில் Humanism என்று அழைப்பர். ரெறன்ஸ் (Terence) என்னும் இலத்தீன் புலவர், 'நான் மனிதன். மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை', எனக்கூறிய கூற்றை மேல்நாட்டார் இம்மக்கள் நலப்பண்பின் குறிக்கோளாகப் போற்றுவர். இப்பண்பு நம் பண்பாட்டில் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது. மனிதனை என்றும் பேணவேண்டுமென்றும், ஒரு செயலால் வரும் பிற நலன்களைக் கருதாமல் நன்மையை, நன்மைக்காகவே செய்யவேண்டுமென்றும் உணர்ந்த தமிழ்ப் புலவர்கள் பலர்.

*'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும் அறவிலை வணிகனாயல்லன்'* (புறம். 134)
என்றும்,

*'மேலுலகம் இன்றெனினும் ஈதலே நன்று'*
என்றும் வற்புறுத்தியுள்ளனர் நம் புலவர்.

பண்டைக்கால இலக்கியங்களில் இவ்வுலக வாழ்க்கையும், மக்களோடு இன்புற்று ஒழுகுவதும், இல்லறத்தின் இனிய நலன்களைக் காண்பதும், வாழ்க்கையின் நோக்கங்களாகக் கருதப்பட்டன. புறநானூற்றில்



> மக்கள் நலப் பண்பில் சிரிப்பென்பது மக்களின் சிறந்த ஓர் இயல்பு. ஆதலால்தான் புலவர்கள் நட்பைப் பற்றியும், சிரிப்பைப் பற்றியும் எப்பொழுதும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

*உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்*
*தமியரும் உண்டுலுமிலரே முனிவிலர்*
*துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்*
*அன்ன மாட்சி அனையராகித்*
*தமக்கென முயலா நோன்றாட்*
*பிறர்க்கென முயலுந ருண்மையானே*
(புறம். 182)

என்ற செய்யுளில் தமிழர் பண்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளைக் காணலாம். சங்க இலக்கியத்துக்கும், வடமொழியில் இயற்றப்பெற்ற பழைய இலக்கியங்கட்கும் உள்ள பெரும் வேற்றுமை இம் மனித நலக் கொள்கையே. ஆதலால்தான் மேல்நாட்டு அறிஞர் தமிழ் இலக்கியத்தின் 'Life Affirmation' வாழ்க்கை வலியுறுத்தல் எனும் பண்பைப் போற்றுகின்றனர்.

மக்கள் நலப் பண்பில் சிரிப்பென்பது மக்களின் சிறந்த ஓர் இயல்பு. ஆதலால்தான் புலவர்கள் நட்பைப் பற்றியும், சிரிப்பைப் பற்றியும் எப்பொழுதும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இந்நூற்றாண்டின் ஆங்கலப் புலவர் ஒருவர் பாடுகின்றார்.

*'From quiet homes and first beginning*
*Out to the undiscovered ends*
*There's nothing worth the wear of winning*
*But laughter and the love of friends'*

திருவள்ளுவர் சிரிப்பைப் பற்றிக்கூறும் இடங்கள் நமக்கு வியப்பைத் தருகின்றன.

*'நகல்வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம் பகலும்பாற் பட்டன்று இருள்.'*
(திரு.999)

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் எந்நாட்டுப் புலவரும் இவ்வாறு கூறியிருப்பரோ என்பது ஐயம் தான்.

## பிறர் அன்பு:

மனிதநலப் பண்பிலிருந்து பிறக்கும் ஓர் இயல்பு பிறரன்பு. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் இலட்சியம் எக்காலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுவே சான்றோருடைய பெரும் இயல்பு. என் கடன் பணி செய்து கிடப்பதே எனப் பிற்காலத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வுலகம் உறுதியாக நிலைத்திருப்பதற்கு இத்தகைய கொள்கையுடைய சான்றோர் இருப்பதே காரணம். இந்நூற்றாண்டில் சாதி வேற்றுமைகளை ஒழிக்க வேண்டுமென்றும், மக்களினத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்த வேண்டுமென்றும் விளக்கும் இயக்கங்கள் இக்கொள்கையிலிருந்தே தோன்றின. பிறருக்குப் பணி செய்யும் மனநிலை இப்பண்பின் பயனே.

## இயற்கை:

தமிழ் மக்களுக்கு இயற்கையிலிருந்த ஈடுபாடும், இயற்கையை செய்யுளுக்குப் பின்னணியாக அமைக்கும் முறையும், நமக்குப் பெரும் வியப்பைத் தருகின்றது. சங்க இலக்கியத்தையும், இடைக்கால இலக்கியத்தையும் பயில்கின்றவர்கள் தமிழரின் இயற்கை ஈடுபாட்டை ஆழமாக உணர்வார்கள். தொல்காப்பியப் பொருளதிகாரம் இத்துணை நுணுக்கமாக இயற்கையைப் புலநெறி வழக்கிற்கு அமைத்தது போல வேறெந்த இலக்கியத்திலும் அமைந்ததாகத் தெரியவில்லை. ஐந்திணைக்குப் பண்டைத் தமிழர் கொடுத்த பெயர்கள் அவர்கள் எத்துணை அளவிற்கு இயற்கையோடு வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது.

மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்று அழைப்பதற்கு எத்துணை காலம் சென்றிருக்க வேண்டும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மலைச்சாரலில் பூக்கும் இச்செடியை மலைப்பகுதிகட்குப் பொருத்தமான ஒரு பெயராகக் கருதினார்கள். இவ்வாறே பிற நிலங்கட்கும் பெயரிட்டனர். மலர்களையும், மாலைகளையும் அவர்கள் பயன்படுத்திய முறை அவர்களுடைய அழகு ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. அன்பிற்கும் மலர்களைக் கையுறையாகக் கொடுத்தனர். போரின் வெவ்வேறு பிரிவுகட்கும் வெவ்வேறு அடையாளப் பூக்களைக் கையாண்டனர். நம் பழைய இலக்கியங்களில் முல்லையைப் பற்றியும், காந்தளீர் பற்றியும், கொன்றையைப் பற்றியும் புகழும் செய்யுட்கள் பெருமின்பம் தருகின்றன. முல்லை சார்ந்த கற்பினள் என்றும், முல்லை நாறும் கற்பினள் என்றும் வருமடிகளில் முல்லை மலர் எவ்வாறு கற்பிற்கு அடையாள மலராக அமைந்தது என்பதைக் காட்டுகின்றது. முல்லை மலரை அணிசெய்யப்பலமுறைகளைக் கையாண்டனர். புறநானூற்றில் வருமிந்தச் செய்யுள் நம் நினைவில் என்றும் நிலைத்திருக்கத் தகுதி வாய்ந்தது.

*இளையோர் சூடார், வளையோர் கொய்யார்*
*நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்*
*பாணன் சூடான், பாடினி அணியாள்*
*ஆண்மை தோன்ற ஆடவர்க்கடந்த*
*வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை*
*முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே*
(புறம்.242)

தமிழின் மறுமலர்ச்சிக்காலத்திலும் இவ்வியற்கை ஈடுபாடு குறையவில்லை. பாரதியார், பாரதிதாசன், தேசிக வினாயகம்பிள்ளை போன்றோருடைய இயற்கை ஈடுபாடு அவர்கள் பாடல்களில் தெளிவாகத் தோன்றுகின்றது. வேதநாயகம்பிள்ளை மிக அழகாக இயற்கையையும் இறைவனையும் இணைத்துப் பாடியுள்ளார்.

*கதிரவன் கிரணக் கையாற்*
*கடவுளைத் தொழுவான் புட்கள்*
*சுதியோடும் ஆடிப் பாடித்*
*துதிசெயும் தருக்கள் எல்லாம்*
*பொதிஅலர் தூவிப் போற்றும்*
*பூதம் தம்தொழில் செய்தேத்தும்*
*அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்*
*அகமேநீ வாழ்த்தா தென்னே.*

நம் மக்கள் நம் பண்பாட்டிலும் இயற்கை ஈடுபாட்டினை இழந்துவிடுதலாகாது. மலர்களையும் மாலைகளையும் இறை வழிபாட்டிற்கும், வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகட்கும் தொடர்ந்து பயன்படுத்தி வரவேண்டும். நம்மில்லங்களில் மல்லிகை, முல்லை மலர்ச்செடிகளை வளர்த்துப் பேணுதல் வேண்டும்.

## நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்:

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளாக இயங்கித் தமக்குள் சில வேளைகளில் போரில் ஈடுபட்டிருந்த போதிலும், தாம் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவரென்றும், தமிழ் இணைப்பதாகவும் கருதிவந்தனர். பெருநில மன்னரும் குறுநில மன்னரும் தம் எல்லைகட்குள் அரசு செலுத்தி வந்தாலும் தம்மனைவரின் நாட்டையும் தமிழகமென்றும், பொதுமை சுட்டிய மூவருலகமென்றும் அழைத்தனர். தமிழ்மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்தது. தமிழ்நாட்டின் எல்லைக்கப்பால் இருந்த நாடுகளை 'மொழிப்பெயர் தேயம்' என்று அழைத்தனர். புறநானூறும் சிலப்பதிகாரமும் இவ்வாற்றலைப் புலப்படுத்தும் இடங்கள் பல. கனக விஜயர் தமிழர் வீரத்தை ஏளனம் செய்தகாலை,

'தென்தமிழாற்றல் அறிந்திதிலராங்கு'

என்று கூறிச் சேரர் வடநாட்டின்மீது படையெடுத்தனர். தமிழ் மக்களுக்குத் தம் சொந்த அரசின் பற்றோடு, தமிழ்நாட்டுப் பற்று என்னும் எல்லாத் தமிழ் அரசுகளையும் அடக்கிய பற்று இயல்பாக அமைந்திருந்தது. தமிழ்ப் பாணரும், புலவரும் குறுநில மன்னரிடமும் பெருநில மன்னரிடமும் சென்று அன்னாரை வாழ்த்திப் பரிசில் பெற்றனர். இளங்கோ அடிகள் மூவேந்தரின் ஒவ்வொரு நாட்டின் சிறப்பையும் பாடியுள்ளார். நாயன்மார், ஆழ்வார் வடமொழி இலக்கியத்திலிருந்து, சமயக்கொள்கைகள் சிலவற்றைப் பயின்றாலும் தமிழ்நாட்டுப் பற்றையும் அவர்கள் தெளிவாகத் தம் பாடல்களில் காட்டியுள்ளனர். இவ்விருவகைப் பற்று நமக்கும் ஒரு பாடமாக அமைகின்றது. ஈழநாட்டில் வடபகுதியும், கிழக்குப்பகுதியும், மலைநாட்டுப்பகுதியும் தம் தனித்தனி இயல்புகளைப் பாராட்டி வந்தாலும், தமிழ் மக்கள் என்ற முறையில் பண்டைக்கால ஒற்றுமை முறையை நாம் தழுவ வேண்டும். தமிழ் மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாகத் தழுவிய சமயங்கள் பல. ஆயினும் எச்சமயத்தைச் சார்ந்தாலும் தாம் தமிழ் மக்கள் என்று தமிழர் பண்பாட்டையும் கொள்கைகளையும் அவர்கள் கடைப்பிடித்தே வந்தனர். இன்றும் கடைப்பிடித்தே வருகின்றனர்.

நம்மிலக்கியத்திலும் கலைகளிலும் தோன்றும் தாய்மொழிப் பற்றினைப் பற்றி நான் விரிவாகக் கூறவேண்டியதில்லை. சேக்கிழாருடைய பெரிய புராணத்தை நான் படிக்கும்பொழுதெல்லாம் அவருடைய உருக்கம் நிறைந்த தமிழ்ப்பற்று என்னுள்ளத்தைக் கவர்கின்றது. தமிழ் என்ற சொல் வருமிடங்களிலெல்லாம் அழகும் அன்பும் நிறைந்த அடைமொழிகளை அமைத்தே கூறுவார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கிய மறுமலர்ச்சி, இம்மொழிப்பற்றை இன்னும் விளக்கமாக எடுத்துக்காட்டியுள்ளது. வேதநாயகம்பிள்ளை, பரிதிமால்கலைஞன், சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள் போன்றவர்கள் இப்பற்றினைத் தம் நூல்களில் தெளிவாகக் காட்டுகின்றனர். பேராசிரியர் சேதுப்பிள்ளையின் நூல்களில் தமிழின் இனிமை பக்கந்தோறும் இனிக்கின்றது. ஆயினும் இம்மொழிப்பற்றினை பாரதியாரும் பாரதிதாசனும் என்றும் மறக்க முடியாத செய்யுட்களில் பாடியிருக்கின்றனர்.

தொடர்தல் 69ம் பக்கம்

பாரதியாரின் ‘செந்தமிழ் நாடென்னும்’ செய்யுள் வரலாற்று உண்மை நிறைந்த அரிய செய்யுள். அவருடைய ‘யாமறிந்த மொழிகளிலே’ என்னும் செய்யுள் தமிழர்கட்கு எழுச்சி தரும் செய்யுள். இவ்விரு செய்யுட்களையும் நம் சிறுவருடைய பாடநூல்களிலே எதுகாரணம் பற்றிச் சேர்க்காமலிருக்கிறார்களோ நானறியேன். நம்மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் குறைப்பதற்காகவே இவ்விருட்டடிப்பு ஒரு சூழ்ச்சி என்று கருதுகின்றேன்.

## அரசியலாட்சி:

தமிழ்நாடும் தமிழ் அரசுகளும் இத்துணை நூற்றாண்டுகளாக உலக வரலாற்றில் சிறந்து விளங்குவதற்குக் காரணமாக இருந்தது தமிழரின் நீதி தழுவும் ஆட்சிமுறையே. ‘நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்’ – என்ற குறிக்கோளும், ‘மாதவர் நோன்பும், மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றாம்’ – என்ற கொள்கையும் ஆட்சிக்கு அடிப்படையாக இருந்த கொள்கைகள். தமிழராட்சி முறைகளைக் கூறுவதென்றால் இச்சொற்பொழிவு நீளும். ஆயினும் ஆட்சியமைப்பும் பண்பாட்டின் ஒரு பகுதியாதலால் அதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மார்க்கோபோலோ என்ற இத்தாலியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்தில் சோழருடைய ஆட்சியையும், தமிழ்நாட்டு வணிக வளத்தையும் கண்டு “சோழநாடு இந்தியாவின் மிகப் பெருமை வாய்ந்த உன்னத அரசு” என்று குறிப்பிட்டார்.

## கவின்கலைகள்:

கவின்கலைகள் பண்பாட்டில் சிறந்த இடம் பெறுகின்றன. தமிழ் மக்கள் எழுப்பிய கோயில்கள், அமைத்த கோபுரங்கள், செதுக்கிய சிலைகள், வளர்த்த இசையும் நாட்டியமும் அவர்களுடைய அழகுக்கலையின் ஈடுபாட்டுக்குச் சான்றுகளாக மிளிர்கின்றன. ரொடான் (Rodin) என்னும் பிரான்சிய நாட்டுச் சிற்பி ஆடவல்லாரின் சிலையை வியந்து போற்றியுள்ளார். இவ்வாறு நம்மெல்லாக் கலைகளும் உலகின் மதிப்பைப் பெற்றுள்ளன. நம்மக்களின் கலையீடுபாடு குறைந்து வருவதற்கு நாம் ஒரு போதும் இடமளித்தல் ஆகாது. ஈழ நாட்டில் எத்தனையோ கட்டடச் செல்வங்களை அந்நியராட்சிக் காலத்தில் நாம் இழந்துள்ளோம். மீண்டும் அழகுச் சின்னங்களை நிறுவுவது ஒரு பெரும் தொண்டாகும். அத்தகைய ஒரு சின்னத்தைத் தந்தை செல்வாவின் நினைவுக்கு நம் தலைநகரில் நிறுவியது போற்றத்தக்கது.

## சிந்துவெளி நாகரிகம்:

தமிழர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் சிந்துவெளி நாகரிகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் இந்திய வரலாறு தெளிவான விளக்கத்தை அடைகின்றது. ஒரு காலத்தில் சிந்துவெளி நாகரிகம் என்றும் நாம் அழைக்கும் நாகரிகம் இந்தியா எங்கும், இலங்கை எங்கும் பரவியிருந்தது என்பதை ஆராய்ச்சி மேலும் மேலும் காட்டுகின்றது. தமிழர்சமயம், தமிழர்கலைகள், பிற்காலத்தில் காட்டும் இயல்புகள், மொகஞ்சதாரோ, ஹாரப்பா நகர்களின் கலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெளிவாகின்றன. சென்ற சில ஆண்டுகளாக இந்தியப் பண்பாடும் நாகரிகமும் பெரும்பாலும் திராவிட மக்களுடைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் அடிப்படையாகக் கொண்டவை என்ற கருத்து இன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சுநீதிகுமார் சட்டர்ஜி தம்மிறுதி நாட்களில் இந்தியாவின் பண்பாடு எழுபத்தைந்து விழுக்காடு திராவிடப் பண்பாடு என்று கூறியுள்ளார். அவ்வாறே பிரான்ஸ் நாட்டு அறிஞர் பேராசிரியர் ஜாண் பீலிபோசா இந்தியாவிற்குத் திராவிட மக்களால் கொடுக்கப்பட்ட நன்மைகள் இன்னும் முற்றாக ஆராயப்படவில்லை என்று எழுதியுள்ளார்.

தமிழருடைய பண்பாட்டைக் கிரேக்கர், உரோமர் போன்றோருடைய பண்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க நம் மக்கள் விரும்புகின்றனர். நம் பண்பாட்டினைப் பிறருடைய பண்பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அத்துணை எளிதன்று. நம்மிலக்கியங்கள் பலவற்றையும், வரலாற்றுச் சின்னங்கள் பலவற்றையும் நாம் இழந்துவிட்டோம். தமிழர் பண்பாட்டின் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு இன்னும் எவ்வளவோ இடமுண்டு நாகரிகங்களை ஒப்பிடுவது எளிது. பண்பாட்டை ஒப்பிடுவது அத்துணை எளிதன்று. கிரேக்கர் இயற்றிய நாடகங்களைப் போல் நமக்கு நாடகங்கள் கிடைக்கவில்லை. அவர் சில காலத்தில் நிறுவிய குடியாட்சியைப் போல் நம் தமிழ்நாட்டில் நாம் நிறுவியதாகத் தெரியவில்லை. அவர்களுடைய சிந்தனையாளர் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் எழுதிய உரைநடை நூல்களைப் போல் நமக்கு நூல்கள் கிடைக்கவில்லை. உரோமர் சட்டத்தை வளர்த்தவர்கள். மாபெரும் பேரரசை நிறுவியவர்கள்.

ஆயினும் நாமும் சோழராட்சியையும், திருவள்ளுவர், இராமனுஜர் போன்ற தத்துவஞானிகளையும் எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

பண்பாடு காலக்கிடையில் மாற்றம் அடைவதா என்றும் பலர் வினவக்கூடும். பண்பாட்டைப் பேணிவராதிருந்தால் அது மாற்றம் அடைதல் கூடும். தமிழ் மக்களோடு அக்காலத்தில் தொடர்பு கொண்டு வணிகம் செய்த எத்தனையோ மக்களின் பண்பாடும் நாகரிகமும் அழிந்துபட்டன. எகிப்தியர், பாபிலோனியர், அசிரியர் போன்றோருடைய பண்பாடு எங்கே? நாகரிகம் எங்கே? கீழ்த்திசை நாடுகளில் சாம்பர் என்ற இனத்தவர் மாபெரும் மாளிகைகளையும் அரண்மனைகளையும் தமிழர் மரபினைத் தழுவி நிறுவினர். ஆனால் கம்புச்சியா இன்று இந்நிலையில் உள்ளது. தமிழரோ ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகத் தம் பண்பாட்டைக் காப்பாற்றி வந்துள்ளனர். அவர்களுடைய நாகரிகம் மேல் நாட்டுச் செல்வாக்கால் மாற்றமடைந்திருந்தாலும் பண்பாடு சிறிய அளவில்தான் மாற்றமடைந்துள்ளது.

## நம் வருங்காலப் பணி:

இருபத்தைந்து ஆண்டுகட்குமுன், 1956ம் ஆண்டு கொழும்பு நகரமண்டபத்தில் ‘தமிழர் பண்பாடும் அதன் சென்றகால நிலையும் - இக்கால நிலையும் - வருங்கால நிலையும்’ என்ற பொருள் பற்றி விரிவுரையொன்று நிகழ்த்தினேன். அந்நாட்களில் தமிழ் மொழியை ஒதுக்கி, தனிச்சிங்களமே அரசியல் மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் நிறுவப்படல் வேண்டுமென்ற இயக்கம் பரவி வந்தகாலம். நாட்டின் ஒற்றுமையை விரும்பித் தமிழுக்கும் சமஉரிமை அளிக்கவேண்டுமென்று தமிழ் மக்களனைவரும் ஒரே குரலெழுப்பினர். இன்று இருபத்தைந்து ஆண்டுகட்குப்பின் நாம் எல்லாத் துறைகளிலும் ஒதுக்கப்பட்டுள்ளோம். நம் உரிமைகள் அனைத்தையும் இழந்து வாழ்கின்றோம். தந்தை செல்வா, ஈழத்தனிநாட்டை – தமிழ் ஈழத்தை – அக்காலத்தில் கேட்கவில்லை. ஆனால் நமக்கு இத்துணை ஆண்டுகளாக இழைத்து வந்த தீமைகளால் தனிநாடு கேட்கத் தூண்டப்பட்டுள்ளோம்.

நம்மிலக்கியம், நம் கலைகள், நம் வாழ்க்கை வாழ வேண்டுமாயின் - வளரவேண்டுமாயின், பண்பாட்டிற்கு ஏற்ற அமைதியான சூழ்நிலை வேண்டும். நம் அன்றாட வாழ்க்கைக்கும் உரிமைகட்கும் இடையறாது போராடிக் கொண்டிருக்கும் வேளையில் நம் பண்பாட்டைப் பேண உரிய வாய்ப்புகள் கிடையா.

கலைகள் வளர்வதற்கு அரசின் ஆதரவும் தேவை. தனிப்பட்ட முறையில் மக்கள் எவ்வளவு உழைத்தாலும் இத்தகைய ஆதரவு இல்லாவிடில் மக்கள் தளர்ச்சி கொள்வார்கள். நம் நாடாளுமன்ற உறுப்பினர் எத்தனைமுறை அரசு காட்டும் பாகுபாட்டைப் பற்றி முறையிட்டிருக்கின்றனர். தமிழ் மாவட்டங்களில் புதைபொருளாராய்ச்சி பற்றி அரசு விரும்புவதில்லை. நம் கல்விக் கழகங்களில் தமிழர் வரலாறு பற்றிப் பாடநூல்கள் கூறுவதில்லை. எத்தனையோ முறைகளில் நம் பண்பாட்டைக் கைவிட மறைவாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நம் மக்கள் விழிப்பாயிருந்து நம் சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தமிழிலக்கியத்தின் சிறப்பையும், கலைகளின் சிறப்பையும் உணர்த்துதல் வேண்டும். தமிழருடைய வரலாற்றைக் கற்பித்தல் வேண்டும். நம் பண்பாட்டின் பழக்கவழக்கங்களைக் குடும்பங்களில் கைவிடாது வளர்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் ஈழவளநாட்டில் விஜயன் வருமுன்னரே வாழ்ந்து வந்தனர். விஜயன் வந்த பொழுதே பெரும் நாகரிகமடைந்த மக்கள் ஈழநாட்டில் வாழந்தார்கள் என்பதற்கு மகாவம்ச நூலே சான்று. தமிழர் பண்பாடு இந்த நாட்டில் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் தொடங்கித் தனிப்பண்பாடாக வளர்ந்துள்ளது. தமிழ் மக்கள் இந்நாட்டில் தனி இனமென்றும், இரு இனங்கள், இரு மொழிகள் கொண்ட நாடு இதுவென்றும் கூறுவதற்கு 1956ம் ஆண்டு பல வாய்ப்புகள் கிடைத்தன. அவ்வாண்டில் அடியேன் எழுதிய கட்டுரைகள் ‘Language and Liberty in Ceylon’ என்னும் சிறு நூலில் இக்கருத்து வற்புறுத்தப்பட்டுள்ளது. தனிச்சிங்களம் சட்டமாக இருக்குமட்டும் இவ்விரு இனங்களின் ஒற்றுமை வாழ்க்கை கைகூடாது. தமிழ் மொழி இந்நாட்டில் ஆட்சி மொழியாகவும் இருந்தால்தான் தமிழ் மக்கள் ஒருவாறு ஆறுதலடைவர்.

வரலாறு வாழ்க்கையின் ஆசிரியன். ஜரிஷ் மக்கள் நானூறு ஆண்டுகளாகத் தம்பண்பாட்டைக் காப்பாற்றப் போராடி இறுதியில் வெற்றி பெற்றனர். வெல்ஷ் மக்கள் நானூறு ஆண்டுகளாகத் தம்மொழிக்காகவும், பண்பாட்டிற்காகவும் இயக்கங்களை வளர்த்து இன்று ஒருவாறு சில துறைகளில் விடுதலையை அடைந்துள்ளனர். இவ்வாறே பெல்சியத்தில் பிளெமிஸ் மக்களும், பின்லாந்தில் பினிஸ் மக்களும், ஸ்பெயினில் பாஸ்க் மக்களும் இன்னும் பல இனத்தாரும் பண்பாட்டு உரிமைக்காக விரக்தி மனப்பான்மையின்றி உரிமை இயக்கங்களை நிறுவிச் செயற்பட்டு வருகின்றனர். நம் தந்தை செல்வா காட்டிய அகிம்சை வழியில் நாம் செயற்பட்டால் வெற்றி காண்போமென்பது திண்ணம்.

■ ■ ■

தமிழ்த்தூது

# தனிநாயக அடிகள்

**தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராகப் பணிபுரிந்த வ. அய். சுப்பிரமணியம் தனிநாயகம் அடிகளைப் பற்றி எழுதிய நினைவுக் குறிப்புக்களே இந்தக் கட்டுரை.**

**வ. அய். சுப்பிரமணியம் (1926-2009), தமிழ் மொழி, இலக்கியம், மொழியியல் ஆகிய மூன்று துறைகளிலும் பேராசிரியராக விளங்கியவர். திருவனந்தபுரத்தில் திராவிட மொழிகள் ஆய்வு நிறுவனத்தை நிறுவியவர். அவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகமும் மதிப்பார்ந்த முனைவர் பட்டம் வழங்கிப் பெருமை பெற்றன.**

**தனிநாயகம் அடிகளால் சுப்பு என அன்போடு அழைக்கப்பட்டவர்.**

- வ. அய். சுப்பிரமணியம் -



1944ம் ஆண்டு, கோடைகால விடுமுறையின் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வகுப்புகள் துவங்கின. நான்காம் தமிழ்ச் சிறப்பு வகுப்பில் பாதிரி உடையணிந்து மிடுக்கான நடையுடைய ஏறத்தாழ முப்பது வயதினர் ஒருவர் என் அருகே அமர்ந்தார், வகுப்பு துவங்கியது, கேள்வியும் விடையும் தொடர்ந்தன. திரு.பூவராகம் பிள்ளை தமக்கே உரிய நகைச்சுவையுடன் தமது வகுப்பை நடத்தினார். வகுப்பின் இறுதியில், 'தாம் தனிநாயகம்' என்றும் தமிழ் படிக்க வந்திருப்பதாகவும் கூறினார். உடனிருந்த மாணவர்களிற் பலர் எதுவும் அவரிடம் பேசவில்லை. சிலர் வணக்கம் கூறி அகன்றனர். நான் அருகிலிருந்ததால் அடுத்த வகுப்பு ஆரம்பமாவது வரை அவருடன் என் பேச்சு தொடர்ந்தது.

'இலக்கண இலக்கியங்களை இனிமேல்தான் நன்கு படித்தறிய வேண்டும்' என்றார். 'இங்குள்ள பலரும் அந்த நிலையில்தான் இருக்கிறோம்' என்றேன். 'உங்கள் கேள்விகள் அதனைப் பொய்யாக்குகின்றன' என்றார். அவ்வாறு ஆரம்பமான நட்புறவு எங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது.

சனி, ஞாயிறுகளில் நான் நூல் நிலையம் சென்று படிப்பது வழக்கம். அதனைக் கவனித்த அடிகள் புதுச் செய்திகளிருப்பின் அவற்றைத் தன்னுடன் விவாதிக்க அழைப்பார். அப்போது பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் அவர் தங்கியிருந்தார். ஒரு சிற்றாள் அவருக்கு உதவியாக எடுபிடிவேலை செய்தான். அவன்தான் என் அறைக்கு வந்து ஏதேனும் அவர் குறித்து அனுப்பும் செய்திகளை என்னிடம் கொடுத்துவிட்டுச் செல்வான். ஒருநாள் மதிய உணவிற்கு அழைத்திருந்தார். நான் அறையிற் சென்றதும், 'சுப்பு என்று உங்களை அழைக்கலாமா!' என்றார். 'தாராளமாக' என்றேன். அன்று ரிக்வேதத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை அவர் படித்து முடித்திருந்த சமயம்.

'தரமான பாக்கள் ரிக் வேதத்தில் குறைவாகக் காணப்படுகின்றன. அவற்றை நோக்க சங்க இலக்கியப் பாக்கள் எவ்வளவோ மேல்' என்றார். அவற்றின் உண்மையை நான் அப்போது தெரிந்திடவில்லை. பின்னர் தான் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களையும் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பு வழி படித்தறிந்து கொண்டேன். ஆனால் என் கேள்வியனைத்தும் 'கிறித்துவப்பாதிரியான அவர், இந்து வேதங்களைப் படிக்க அனுமதிக்கப்படுகிறாரே' என்பது பற்றித்தான் இருந்தன. 'எல்லா மதங்களின் அடிப்படை நூல்களையும் நாங்கள் படித்துத் தெளிவோம். அது மட்டுமன்று பிரம்மசரியம் மேற்கொள்ளும் நாங்கள் மனிதக் காதல்நிலை பற்றிய பல நூல்களையும் படிக்க வேண்டிய கட்டாயம் உண்டு. பல துறைகளைத் தெரிந்த பின் துறவு பூண்பது, தெரியாமல் துறவு பூண்பது என்ற இரண்டில், முதல் முறையை நாங்கள் கடைப்பிடிப்போம். தேவாரம், திருவாசகம் முதலிய நூல்கள் மனதை உருக்குவனவாக இருக்கின்றன. இறைவனை வழிபடும் எந்த மதமும் அந்த நூல்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது' என்றார். தனிநாயக அடிகளின் பரந்த படிப்பும் பிற மதங்களைப் புறக்கணிக்காத நிலையும் என்னைக் கவர்ந்தன. கிறித்துவ மதத்தில் ஆழமான பற்று உடையவராயினும் தமிழ் மொழி மீதும் தமிழ்க்கலாச்சாரத்தின் மீதும் அளவற்ற மதிப்புடையவராக இருந்தார். அவர் பேச்சிலும் தமிழ் எழுத்திலும் இலங்கை வழக்குப் பளிச்சிடும். ஆங்கில எழுத்து எடுப்பான நடையில் இருக்கும். அவருடைய பின்னணிக்கும் என் படிப்பிற்கும் எவ்வளவு வேறுபாடு!

வகுப்பறைகளில் பாடம் நடந்த பின்னரும் உடன் உணவு உண்ணும் வேளைகளிலும் அடிகளின் பேச்செல்லாம் தமிழின் இலக்கிய வளத்தை உலகறியச் செய்ய வேண்டும். தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் சமுதாயத்தில் பிறருடன் ஒன்றாமல் தனித்து நிற்பது நன்றன்று. எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும். தமிழாய்வின் தரம் உயரவேண்டும். பல நாடுகளுக்குத் தமிழ் ஆய்வாளர்கள் சென்று தமிழ் இலக்கியச் செல்வங்களை உலகறியச் செய்திட வேண்டும் என்பன பற்றித்தாம் இருந்தன.

அந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையிலிருந்து வெளியான சைமன் காசி செட்டி ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் புளுட்டார்க் என்ற நூலை (தமிழ்ப் புலவர்களைப் பற்றிய செய்திகளை அகவரிசைப்படி ஆங்கிலத்தில் தொகுத்துத் தருவது) பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரைக் கொண்டு கூடுதல் செய்திகளைச் சேர்த்துப் பிழை களைந்து வெளியிட ஏற்பாடு செய்தார். அதற்கு கணிசமான தொகையொன்றையும் தெ.பொ.மீக்குப் பெற்று அளித்தது நினைவிருக்கிறது.

அடிகள் அண்ணாமலைக்கு வருவதற்கு முன்னர் ரோமில் உள்ள வத்திக்கானில் குருமார்களுக்குரிய வகுப்புகளில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் பயின்று தெய்வ தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்றிருந்தார். அவரது ஆய்வறிக்கை கிறித்துவத் தொண்டர் பலரைப் பற்றியது. பின்னர் வெளிநாட்டில் வெளியிடப்பட்டது. அதன் படியொன்றையும் பல ஆண்டுகள் கழித்து தமது கையெழுத்திட்டு எனக்குத் தந்தார். ஸ்பானிய மொழி, ரோமமொழி, போர்த்துக்கீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவர். உயர் மட்ட மக்களிடம் எளிதில் பழகி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று தமிழிற் காணும் அறக்கருத்துக்களின் உலகளாவிய தன்மையையும் அதன் சங்க இலக்கியச் செல்வத்தையும் அவர்களிடையே விளக்கித் தமிழ்ப்பண்பாட்டில் பற்றுக் கொள்ளுமாறு செய்வதற்கு அவரால் முடிந்தது.

1944 - 46 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அடிகளுடன் பழகிய நாட்களில் என்னுள் பல மாற்றங்கள் தோன்றுவதற்கு மிகவும் துணை செய்தன. என் பார்வை அகன்றது. மறைந்து கிடந்த என் இலட்சியமும் பெரும் சக்திக்கனலாக மாறியது.

அவர் கிறித்துவப் பாதிரியாயினும் என்னிடம் கிறித்துவ மதத்தின் பெருமையையும் இந்து மதத்தின் பெருமையையும் இந்து மதத்தின் குறைபாடுகளையும் என்றும் கூறியதில்லை. அதற்கு நேர்மாறாகத் தேவார திருவாசகத்தின் பெருமையைக் கூறிப் பாராட்டியது இன்றும் நினைவிருக்கிறது. அடிகள் தன் சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறிய செய்திகள் மிகக் குறைவு.

கிறித்துவக் குருமார்களுக்கு இரு நிலைகளுண்டு. ஒன்று மதத் தளம். மற்றொன்று மதச் சார்பற்ற தளம். இரண்டாவது பிரிவைச்சேர்ந்தவர்களுக்குக் கட்டுப்பாடு மிகக் குறைவு. பிற நிலையங்களில் பணி செய்து அந்த வருவாயின் ஒரு பகுதியைத் தன் செலவுக்கும் மீதத்தைக் கிறித்துவ சபைக்கும் கொடுத்துவிடுவர். வாரம் ஒருநாள் கிராமங்களில் மதப் பிரச்சாரத்திற்குச் செல்வர். படிப்பிற்காக ஈழத்திலிருந்து மலே நாட்டிற்கோ இந்தியாவிற்கோ செல்லும் போது பயணச் செலவு, தங்கல் செலவு முதலியவற்றைத் திருச்சபை ஏற்கும். எனவே அடிகள் சுதந்திர வாழ்க்கையை விரும்பி இரண்டாவது பிரிவை ஏற்று உழைத்தார் என்று பிறர் கூறக் கேட்டிருக்கிறேன்.

அடிகள் அண்ணாமலையில் சேர்வதற்கு முன்னர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வடக்கன்குளம் கிறித்துவப்பள்ளியில் நாலாண்டு ஆசிரியராகப் பணி செய்தார். அப்போது தமிழில் போதிய அடிப்படை அறிவு பெறும் வாய்ப்புக் கிடைத்ததாகக் கூறினார்.

ஒருமுறை இராஜா முத்தையாச் செட்டியார் அவர்கள் கொழும்பு சென்றிருந்தபோது அவரை அணுகித் தான் தமிழ் படிக்க அண்ணாமலை செல்ல விரும்புவதாகவும் அதற்குத் துணை நிற்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டபோது விதிவிலக்காக, மூன்றாம் ஆண்டு சிறப்பு வகுப்பில் சேர அனுமதியும், அந்த ஆண்டு நடக்கும் ஆங்கிலத் தேர்வை அடிகள் எழுதவேண்டாமென்றும், விருந்தினர் விடுதியில் தங்கிப்படித்திட அனுமதியும் அடிகளுக்கு வழங்கப்பட்டன என்று கூறியது நினைவிருக்கிறது. அப்போது துணைவேந்தராக இருந்த இரத்தினசாமி ரோமன் கத்தோலிக்கர். அவர் குடும்பத்தினர் அனைவரும் கடவுள் பக்தி மிக்கவர்கள். எனவே அடிகள் அந்தக்குடும்பத்தில் நெருங்கிப் பழகும் வாய்ப்பு மிகுத்து இருந்தது. எனினும் துணைவேந்தருடன் தாம் கொண்டுள்ள தொடர்பை அளவு மீறிப் பயன்படுத்தியதில்லை. அகலாது அணுகாது அதிகாரிகளுடன் நடந்துகொண்டார். அவர் காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒன்றிரண்டு பாதிரிமார்களும் கன்னியாஸ்திரிகளும் படித்து வந்தனர். கிறித்துவக் கோயிலில் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுவார்கள். அதன் பின்னர் அவர்கள் ஒன்று சேர்ந்து பழகுவதை நான் கண்டதில்லை. எனவே அடிகளாரின் மதச்சார்பு மிகக் குறைவாக இருந்ததால் இந்து மதத்தில் பற்றுள்ள என்போன்றோர் அடிகளாருடன் நெருங்கிப் பழகத் தடையேதும் ஏற்படவில்லை.

1948ம் ஆண்டு முதல் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக நான் பணியாற்றியபோது தூத்துக்குடிக்கு வரவேண்டுமென்று அடிகள் தந்தி ஒன்று அனுப்பியிருந்தார். ஒரு ஞாயிறன்று அங்கு சென்றேன். விசாலமான ஒரு பங்களாவில் தமிழ் ஆய்வுக் கழகம் ஒன்றை உருவாக்கிப் பல நூல்களை அச்சிட்டு வெளியிடும் பணியில் முனைந்து நின்றார். வெளிநாடு சென்று, குருமார் ஒவ்வொருவரும், தமது அறப்பணிக்குப் பொருள் திரட்டலாம் என்றும், அதன் படி திரட்டிய பொருளால் அந்தப் பெரும் வீட்டைச் சொந்தமாக வாங்கி, பல வெளியீடுகளைக் கொண்டு வரும் தமது திட்டத்தை விரிவாகக் கூறினார். அப்போது பாளையங்கோட்டையில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. மாசிலாமணி அவருக்குத் துணையாக நூல்களைச் செப்பனிட்டு வந்தார். 1961ம் ஆண்டு வாக்கில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் ஒன்று சென்னையில் நிறுவித் 'தமிழ்ப் பாண்பாடு' என்ற அரையாண்டு இதழை வெளியிட ஏற்பாடு செய்தார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளராகப் பதவி வகித்து ஓய்வு பெற்ற அ. சுப்பையா அந்த அகாதமி நிறுவுவதற்கும் ஆங்கில அரையாண்டு இதழ் ஒன்றை வெளியிடவும் மிகவும் துணை நின்றார். அதன் பதிப்பாசிரியர் குழுவில் நானும் உறுப்பினராக நியமிக்கப்பட்டேன். எனது கட்டுரைகள் சில அதில் வெளியிடவும் வாய்ப்பு ஏற்பட்டது. கல்வெட்டு பற்றிக் கட்டுரையொன்றை அடிகள் எழுதுமாறு கூறி, அதன் நகலை அடிகளே செம்மை செய்து என் பெயரில் மட்டும் வெளியிட்டதும் மறக்க இயலாத நிகழ்ச்சி. அந்தச் சஞ்சிகை வெளியானதும் ஆங்கிலம் அறிந்த தமிழர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

சிலமுறை என்னைச் சந்திக்கத் திருநெல்வேலி இந்துக் கல்லூரிக்கு வருவார். சுருக்கமாகத் தனது கருத்தைக் கூறி விடைபெற்றுச் சென்றுவிடுவார். எங்களிருவர் நட்புறவும் நம்பிக்கையும் மேலும் வலுப்பெற்றன.

ஒருமுறை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைப் பேட்டி கண்டு அவருடைய கவிதை பிறந்த நிகழ்ச்சியைப் பற்றி எழுதுமாறு அடிகள் கேட்டுக் கொண்டார். அதன் பொருட்டு கவிமணியைச்சந்தித்து செய்தி திரட்டினேன். ஆனால் அக்கட்டுரை பெரும்பாலும் மொழிபெயர்ப்புச் செய்திகளைப் பற்றி அமைந்ததால் எனக்கும் கவிமணிக்கும் அந்த வரைவு மனத்திருப்தி தரவில்லை. எனவே வெளியிட அனுப்பாமல் கோர்ப்பிலேயே தங்கிவிட்டது.

1950ம் ஆண்டு வாக்கில் ஒருநாள் திரு.பால்நாடாருடன் அடிகள் பாளையங்கோட்டையில் எனது இல்லத்திற்கு வந்து குற்றாலத்தில் என்னையும் டி.கே.சி.யைக் காண அழைத்துச் சென்றார். நான் வாழ்ந்த வீடு சிறிது. என் வருவாய்க்குள் வாழ நினைத்ததால் அந்தச் சிறிய வீடு தான் வாடகைக்கு அமர்த்த முடிந்தது. எனினும் அந்தச் சிறிய வீட்டில் திரு.பால்நாடாரும் அடிகளும் மகிழ்ச்சியுடன் சிறிது நேரம் தங்கி, காப்பியருந்திவிட்டுப் புறப்பட்டனர். அடிகள் தான் கார் ஓட்டினார். தென்காசியில் அப்போது முன்சீப்பாகப் பணி செய்த திரு.மகாராஜன் வீட்டிற்கு முதலில் சென்றோம். அன்புடன் வரவேற்ற அவர் இரவு அங்கு உண்டுவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தவே அங்கேயே உண்ட பின்னர் குற்றாலம் சென்றடைந்தோம். திரு.மகாராஜன், டி.கே.சியை மிகவும் மதிப்பவர். அவர் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். இரவு டி.கே.சியைக் கண்டபோது எடுப்பான தோற்றமும் முறுக்கிய அடர்ந்த மீசையும் குழந்தையின் சிரிப்பும் உடைய ஒரு ஞானியைக் கண்ட உணர்வு என்னுள் ஏற்பட்டது. அடிகளை அன்புடன் வரவேற்றார். அடுத்துத் திரு.பால்நாடாரை, அதன்பின் வயதில் சிறியவனான என்னை

தொடர்தல் 71ம் பக்கம்

# தமிழ்த்தூது

டி.கே.சியிடம் அறிமுகம் செய்யவே அவர் வீட்டில் ஒருவனாக உடனே என்னை ஏற்றுக் கொண்ட உணர்வு என்னுள்ளே தோன்றியது. செட்டி நாட்டு அரசர் பங்களாவில் நாங்கள் இருநாள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதல்நாள் இரவு தூங்குவதற்கு முன்னர் அடிகள் தந்த தமிழ்க் கல்ச்சரின் கட்டுரைகளைப் படித்து அதிற் காணும் பிழைகளைக் கூறினேன். அச்சடித்த பின்னர்தான் சிலருக்குப் பிழைகள் கண்ணில் படும். அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவன் நான். எனவே சற்று வருத்தத்துடன் அடிகள் என் விமர்சனத்தைக் கேட்டுக்கொண்டார். இரண்டு நாள் அங்குத் தங்கினோம். அந்த நாட்களில் டி.கே.சி கூறிய தமிழ்ப் பாடலின் விளக்கங்கள் சுவையாக இருந்தன. அவரிடம் புலமைச் செருக்கில்லை. இலக்கண நுணுக்க விளக்கமில்லை. ஆனால் அவர் விளக்கம் மனதைத் தொட்டு எழுச்சியூட்டியது. இறுதியில் நாங்கள் பிரியும்போது என்னை நோக்கி, 'தமிழ் உலகில் தோன்றிய கோடரிக்காம்பு' என்று சிலாகித்தது நினைவிருக்கிறது. நான் அந்த உவமையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் 'சப்புச் சவறுகளை அகற்றித் தமிழ் நிலத்தைத் திருத்த வந்திருக்கும் காம்பு என்று டி.கே.சி. கருதுகிறார்' என்றார் அடிகள். அந்தத் தகுதி எனக்கு இல்லாததால் அந்தக் கௌரவத்தைப் பற்றிய உணர்வு இல்லாதிருந்தது. ஊர் திரும்பினோம். டி.கே.சி. யுடன் ஏற்பட்ட தொடர்பு அது முதல் நிலைத்தது. இலக்கிய நயமிக்க பல எழுத்துகளை நான் அவரிடமிருந்து பெற அது வழி செய்தது. அடிகள் அறிமுகம் செய்திராவிட்டால் அந்த வாய்ப்பு கிடைத்திராது.

1951ம் திருவனந்தபுரத்திலுள்ள தமிழ்த் துறையில், எஸ். வையாபுரிப்பிள்ளை பேராசிரியராக நியமிக்கப்பட்டதால் நான் அங்கு ஆய்வு மாணவனாகச் சேர்ந்தேன். அப்போது திருவனந்தபுரத்தில் வாழும் அறிஞர்கள் சிலரிடமிருந்து கட்டுரைகளைப் பெற்று நான் அனுப்பினால் அவை தமிழ்க் கல்ச்சரில் உடனே அடிகள் வெளியிடுவார். ஒருமுறை பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைக் காண வந்திருந்தார். அப்போது மகிழ்வுந்து ஒன்றை வாங்கியிருந்தார். தூத்துக்குடியிலிருந்து தாமே அதனை ஓட்டி இரவில் திருவனந்தபுரம் இரயிலடியில் வந்து சேர்ந்ததாகவும் அறையெதுவும் அமர்த்தாது காரினுள்ளே தூங்கிப் பக்கத்துக் கடைகளில் விசாரித்து என் மாமனார் வீட்டை அடையாளங்காண அங்குள்ள ஒரு சிற்றாள் துணையுடன் தேடிப்பிடித்து வந்தார். அவரை அன்று காலையில் காண மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இருவரும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைக் காணச் சென்றோம். போகும் வழியில், 'ஏன் உற்சாகமில்லாமல் இருக்கிறாய் சுப்பு' என்றார். 'விரிவுரையாளராக இருந்த போது மாதம் 150 ரூபாய் சம்பளம். இப்போது இங்கே கிடைக்க இருக்கும் தகமை முப்பது ரூபாய் மட்டும்தான். அதுவும், இதுவரை கிடைத்திடவில்லை. எனவே பணமுடையின் கடுமை. ஆய்வாளனின் வறுமையின் கூர்மை இப்போது என்ன என்று தெரிய வருகிறது' என்றேன். அப்போது ஒன்றும் பதில் சொல்லவில்லை. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் ஆய்வு முடிவுகளை அடிகள் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அவருடைய ஆய்வுத் திறமையையும் வாதத் திறமையையும் மிகவும் மதித்தார். எனவே அவர்களிடையே நடந்த உரையாடல் மிகவும் மதிப்பைத் தெரிவிப்பதாக இருந்தது. லக்னோவில் நடந்த கீழ்த்திசை மாநாட்டுத் திராவிடப் பிரிவில் நிகழ்த்திய தலைமை உரையை தமிழ்க்கல்ச்சரில் வெளியிடுவதற்கு எஸ். வையாபுரிப் பிள்ளையிடம் அனுமதி பெற்றார். அன்று மாலையே நாகர்கோவில் திரும்ப வேண்டியதால், விடை பெறும்போது இருநூறு ரூபாய்க்கு ஒரு காசோலையை அடிகள் எழுதித் தந்தார். பின்னர் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்ற உறுதியால் அதனைப் பெற்றுக்கொண்டேன். நிலையறிந்து உதவும் மனநிலையை உள்ளூரப் பாராட்டினேன். 1964ல் டெல்லியில் அகில உலகக் கீழ்த்திசை ஆய்வு மாநாடு நடந்தது. அதற்கு ஏறத்தாழ இரண்டாயிரம் பேராளர்கள் உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்திருந்தனர். மாநாடு துவங்குவதற்கு முன்னர் விஞ்ஞான பவனமுகப்பில் பேராளர்கள் பெருங்கூட்டம் கூடியிருந்தது. பலவாண்டு காணாத நண்பர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து மகிழ்ந்து பேசி நின்றனர். அங்கு தனிநாயக அடிகளை எதிர்பாராத விதமாகக் காண நேர்ந்தது. இருவருக்கும் சொல்ல முடியாத பெருமகிழ்ச்சி. பழைய நட்புறவு மீண்டும் தளிர்விட்டது. அந்த மாநாடு நடந்த நாலைந்து நாளும் அடிக்கடி சந்தித்தோம்.

முன்னர் சென்னையில் தோற்றுவித்த தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும் அதன் வெளியீடான தமிழ்க் கல்ச்சரும் மிகவும் செயலிழந்துவிட்டன என்றார். தமிழ்க் கல்ச்சர் பணமுடையால் நிறுத்திவிட அன்று பொறுப்பு வகித்த செயலாளர் தமது அறையில் கூடுமாறு எழுத்து ஒன்றை எழுத பதில் எழுதியதும் நினைவிற்கு வந்தன.

'சுப்பு நாம் தமிழுக்கென உலக மாநாடு ஒன்று நடத்த முயல வேண்டாமா? அதற்குரிய கூட்டம் ஒன்றைக் கூட்டி ஒரு நிறுவனம் அமைக்க வேண்டாமா?' என்றார்.

'செய்ய வேண்டியதுதான், டெல்லியில் ஜுன்பிலயோசா (பிரான்சு), டி.பர்ரோ (இங்கிலாந்து), எல்.பி.ஜே. கைப்பர் (நெதர்லாந்து), ஹெர்மன் பெர்கர் (ஜெர்மனி), கமில் ஸ்வலபில் (செக்கோஸ்லோவாகியா), ஆர். ஆஷர் (பிரிட்டன்) முதலிய அயல்நாட்டு ஆய்வாளர்கள் பலரும் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மு. வரதராசன், மொ.அ. துரை அரங்கசாமி முதலியவர்களும் மாநாட்டிற்கு வந்திருப்ப



தாகத் தெரிகிறது. அவர்களிடம் எல்லாம் கலந்து கொள்க' என்றேன்.

ஓரிரு நாட்களில் அந்தத் திட்டத்தைப் பற்றி பிறரிடம் உசாவிய அடிகள், 'தமிழ்நாட்டிலிருந்து வந்த அறிஞர்களுக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உடன்பாடில்லை. எனவே விண்ணப்பம் ஒன்றில் நீ கையெழுத்திட்டு, கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்குரிய அறிவிப்பு ஒன்றை எல்லோருக்கும் அனுப்புவோம்' என்றார். இந்தியாவிலுள்ள தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அதில் கையெழுத்திட வேண்டுமென்று உறுதியாக நினைத்திருந்தார். ஆனால் மற்றுள்ளவர்கள் அதற்கு ஊக்கமளிக்கவில்லை. மனம் தளர்ந்து அடிகள் அன்று காணப்பட்டார்.

'நீங்கள் மேற்கொள்ளும் எந்த முடிவிற்கும் என் துணையும் ஒத்துழைப்பும் உண்டு. எனவே நீங்கள் முதல் கையெழுத்தாக அந்த விண்ணப்பத்திலிட வேண்டும். அதன் பின்னர் நான் இடுகின்றேன்' என்றேன். அவரும் மறுப்புக் கூறாது ஒப்புக்கொண்டார். விஞ்ஞான பவனில் சுற்றுப்புறத்திலிருக்கும் அறைகளிலுள்ள அலுவலர் பெயர்ப் பலகை ஒவ்வொன்றையும் நடந்து கவனித்தோம். திரு. இராமன் துணைச்செயலாளர் (அந்தப் பெயர் சரியாக இருக்கும் என நம்புகிறேன்) என்ற ஒரு பெயர்ப்பலகையைக் கண்டோம். அவர் தமிழராக இருப்பார், உதவி செய்வார் என்ற எண்ணத்துடன் அவர் அறைக்குச் சென்று, எழுதி வந்த ஒரு விண்ணப்பத்தில் இருநூறு படி எடுத்துத் தருமாறு இருவரும் வேண்டினோம். அவரும் அதற்கு இசைந்து மதியம் பன்னிரண்டு மணிக்குள் தருவதாகக் கூறினார். அவ்வாறே கூறியபடி பன்னிரண்டு மணியளவில் தந்தார். தமிழ் ஆய்வாளர்கள், பற்றாளர்கள், நண்பர்கள் முதலியவர்களுக்கு அந்த அறிவிப்பு வழங்கப்பட்டது. எல்லோரும் குறிப்பிட்ட அறையொன்றில் ஏறத்தாழ மாலை நான்கு மணியளவில் கூடினர். தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரைத் தலைமை ஏற்குமாறு வேண்டிக் கொண்டு உலகளாவிய தமிழ் ஆய்வு மையம் ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டிய தேவையை அடிகள் விளக்கினார். கூட்டத்திலுள்ள உறுப்பினர்கள் பலர் அந்தக் கருத்தை வரவேற்றனர். சிலர் மௌனமாக ஒப்புக்கொண்டனர். ஜுன்பிலயோசா (பிரான்சு) தலைவராகவும் தெ.பொ. மீனாட்சி சுந்தரம், டி. பர்ரோவும் எவ்.பி.ஜே. கைப்பர், எம்.பி. எமனோ முதலிய நால்வர் துணைத்தலைவர்களாகவும், தனிநாயக அடிகள் செயலாளராகவும் கமில் ஸ்வலபில் துணைச்செயலாளராகவும் இருக்கலாம் என்றார். பின்னர் என்னைச் சந்தித்த போது 'உன் பெயரைக் கூற மறந்து விட்டேனே'' என்றார். அதற்குத் தேவையில்லை நீங்கள் இருக்கிறீர்கள் அது போதும், பதவியின்றி பிறருக்குத் துணை நிற்பதுதான் என் குறிக்கோள் என்றேன். அக்கூட்டத்தில் கையெழுத்திட்டவர்களின் நிழற்படம், விண்ணப்பத்தின் நகல் முதலியவற்றை கோலாலம்பூரில் நடந்த முதல் மாநாட்டு நிகழ்ச்சிப் பதிவின் பின்னிணைப்பாக அச்சிட்டுள்ளார். அந்த நிறுவனம் தோன்றுவதற்குத் தாம்தான் காரணம் என்று பின்னர் உரிமை கொண்டாடியவர்கள் அந்த ஆவணத்தைக் காண முற்படவில்லை.

அக்கூட்டத்தில் எவ்.பி.ஜே. கைப்பரை முதன் முதலாகக் கண்டேன். அதன் முன்னர், புறநானூற்றுப் பாட பேத அடிப்படையில் அதன் பூர்வ உச்சரிப்பை மீட்டுரு அளித்து எழுதிய என் கட்டுரையொன்றின் உருளச்சுப்படியைப் பார்த்து ஏறத்தாழ பத்துப் பக்க அளவில் விரிவாகத் தடைகளை எழுப்பிக் கடிதம் எழுதியிருந்தார். என் கட்டுரையை ஆழமாகப் படித்தாரே என்ற மகிழ்ச்சியுணர்வு மேலோங்கியிருந்தது. அவரெழுப்பிய தடைகள் சில எளிதில் மறுக்கத்தக்கன. பல ஏற்கத்தக்கன. அன்று முதல் அவருடன் கடிதத் தொடர்பு இருந்ததேயொழிய நேர்முகத் தொடர்பில்லை. அம்மாநாட்டில் அவரைக் கண்டு அளவளாவியது பெரும் வாய்ப்பாக அமைந்தது. ஒரு நாள் டி. பர்ரோவையும் எவ்.பி.ஜே. கைப்பரையும் என்னையும் அசோகா ஓட்டலில் இரவு விருந்திற்கு அடிகள் அழைத்திருந்தார். கமில் ஸ்வலபில்லும் அதற்கு வந்திருந்தார். அன்று மொழி ஆய்வு பற்றிய பேச்சு விரிவாக நடந்தது. டி.பர்ரோவின் எளிமையான போக்கு அன்று எல்லோருக்கும் தெளிவானது.

மகாநாடு முடிந்ததும் அன்றிரவு நான் தங்கியிருந்த லோடி ஓட்டலில் என் அறைக்குரிய வாடகையைக் கொடுத்துவிட்டு ஊர் திரும்பப் பணம் எதுவும் இல்லாமல் கலங்கினேன். விமானச் சீட்டுக் கையிலிருந்ததால் பணமில்லாமை ஒரு தடையாக மாறவில்லை. டெல்லி விமானத்தளத்தில் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரைக் கண்டபோது, 'துணைத்தலைவர்களுக்கு என்ன என்ன பொறுப்பு'' என்று வெளிநாட்டுப் பொறுப்பாளர்கள் தம்மிடம் கேட்டதாகக் கூறினார். 'புதிதாகத் தோற்றுவித்த ஆய்வுக் கழகத்தைப் பலப்படுத்தும் பெரும் பொறுப்பு அவர்களது' என்று கூறியது நினைவிருக்கிறது.

உலகக் கீழ்த்திசை மாநாடு முடிவடைந்த ஒருசில மாதங்களுக்குள் முதல் உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. மலேயர்களும் சீனர்களும் பெரும்பாலும் வாழும் அந்த நாட்டில் அத்தகைய மாநாடு நடத்த ஒப்புக்கொண்டது பெரும் வெற்றியாகும். தனிநாயக அடிகள் பிறரிடம் தன் கருத்தை விளக்கும் ஆற்றலும் அவர்களைத் தன் திட்டத்தில் ஈடுபடுத்தும் சக்தியும் எல்லோருக்கும் அப்போது தெளிவாயிற்று. திரு. பக்தவத்சலம் தமிழக முதலமைச்சராக அப்போது இருந்தார். இந்தி எதிர்ப்பு இயக்கம் வலுவாக நடந்து முடிந்த சமயம், தமிழ் ஆசிரியர்கள், எதிர்க்கட்சிகள் ஆகியவர்களிடையே கசப்பு மனப்பான்மை குறையாத நேரம். எனவே, தென்னகத்திலிருந்து தமிழ் அறிஞர்கள் பலரை மாநாட்டுக்கு அரசுச் செலவில் அனுப்புவது பற்றி முதலமைச்சரிடம் எளிதில் ஒப்புதல் பெறப்பட்டது. அவரும் கலந்துகொள்வதாக ஒப்புக்கொண்டார். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக வி.ஆர். நெடுஞ்செழியன் இருந்தார். அவரும் மாநாட்டில் பெருந்தன்மையுடன் பங்கு கொண்டார். மலேசியா செல்லும் பேராளர் குழுவில், மதிப்புறு அரசியல் வாதிகளில் பலர் இடம்பெற்றிருப்பது மாநாட்டிற்குத் துணை செய்யாது என்று நான் அ. சுப்பையாவுக்குக் கடிதம் எழுதியது நினைவிருக்கிறது. அதனை அன்று கல்விச் செயலாளராக இருந்த திரு. க.திரவியத்திடம் காட்டி அரசியலாளரின் எண்ணிக்கையைக் குறைக்கக் கேட்டுக் கொண்டதாகப் பின்னர் சுப்பையா தெரிவித்தார். அரசுச் சார்பில் அ.ச. ஞானசம்பந்தன் (தமிழ்ப் பண்பாட்டு இயக்குநர்), கார்த்திகேயன் (தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலாளர்), கி.வா. ஜகந்நாதன், கல்வி இயக்குநராக இருந்த நெ.து.சுந்தரவடிவேறு முதலியவர்களும் இடம் பெற்றிருந்தனர். இரு நூல்கள்: ஒன்று பிற நாட்டில் தமிழ்ப் படிப்பு, இரண்டாவது தியரி ஆவ் லிட்டரச்சர் (வாரன்வெல்லா ஆஸ்டினும் இருவரும் சேர்ந்து செய்த தரமான ஆங்கில விமர்சன நூலைத் தமிழாக்கம் செய்தல்) ஆகிய இரண்டு பொறுப்பையும் நான் ஏற்றுக் கொண்டேன். முன் கூறிய நூல் மலேயாவில் அச்சிடப்பட்டது. பின்னுள்ளதைச் சென்னைப் பாரி நிலையம் வழி அச்சேற்றி ஐந்து படிகளையும் எடுத்துச் செல்லும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டது. சம்ஸ்கிருத மகாபாரதத்தில் தென்னக ஏடுகளில் காணும் பிரதிபேத மாற்றங்களைப் பற்றிய என் கட்டுரை ஒன்றையும் நான் அந்த மாநாட்டில் படித்திடவும் ஒத்துக்கொண்டேன். நானும் சில நண்பர்களும் மாநாடு துவங்குவதற்கு மூன்று நான்கு நாட்களுக்கு முன்னர் கோலாலம்பூர் போய்ச் சேர்ந்தோம். அப்போது பேராளர்கள் தங்குவதற்குரிய விடுதிகள் தயாராக இராததால் அங்குள்ள ஓட்டலில் இரண்டு நாள் தங்கினோம். அடுத்த நாள் அடிகள் தன் துறைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள ஆய்வுப் பணியை விளக்கினார். மாநாட்டு ஏற்பாடுகளையும் கூறி அதிற் காணும் குறைபாடுகளையும் தெரிவித்தார்.

மாநாடு கூடுவதற்கு ஒரு நாள் முன்னர் என்னென்ன ஆய்வுக் கட்டுரைகளை உருளச்சிட்டுள்ளனர், அவை ஒழுங்காகப் பேராளர்களின் கோர்ப்பில் வைக்கப்பட்டுள்ளனவா என்று பார்த்த போது பல உருளச்சிடாமல் இருப்பதைக் கண்டேன். தனிநாயக அடிகளிடம் ஆலோசித்தபோது அதன் பொறுப்பாளர் வரலாற்றுத் துறை நண்பர் என்று தெரிந்தது. அவர் இல்லத்திற்குச் சென்று நிலையை விளக்கினேன். கீழ்மட்டத்திலுள்ளவர்கள் செய்திடவில்லை என்று அவர் பொறுப்பைத் தட்டிக் கழித்தார். எனவே மாநாட்டு அலுவலகத்திற்குத் திரும்பிச் சென்று எந்தெந்த ஆய்வுக் கட்டுரை முதல் நாள், இரண்டாம் நாள் படித்திடுவதற்குரியன என்று பிரித்து அவற்றை உருளச்சிட்டு கோர்ப்பில் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். அந்தப் பணி முடிவது வரை அந்த அறையினிலேயே இருந்து கவனித்தேன். அடிகள் அகல இருந்து கவனித்து நின்றிருந்தார்.

ஒருவரைப் பற்றி தனிநாயக அடிகள் நேராகக் குறை கூறுவதில்லை. மற்றுள்ளவர்களிடம் கூறி மாற்றுவழி காணக் கேட்டுக் கொள்

தொடர்தல் 72ம் பக்கம்

## தமிழ்த்தூது

வார். பல பொழுது அதனால் பணிமுடக்கம் ஏற்பட்டு அவர் தத்தளிப்பதைக் கண்டிருக்கி றேன். "நேராகச் சொல்லுங்களேன்" என்று நான் கூறுவேன். "அது என் பழக்கமில்லை. உன்னைப் போன்றவர்களிடம் சொன்னால் மன ஆறுதலும் மாற்று வழியும் பிறக்கும் என்று கருதித்தான் சொல்கிறேன்" என்றார்.

அடுத்த நாள் காலை மலேசியப் பிரதமர் மாண்புமிகு துங்கு அப்துர் ரஹ்மான் மாநாட் டைத் திறக்க ஒப்புக்கொண்டிருந்தார். பேராளர் கள் எல்லோரும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள காலை ஒன்பதரை மணிக்கு, கோலாம் பூர் டவுன் ஹாலுக்கு வந்துவிட்டனர். அழைப் பும் நுழைவுச் சீட்டும் சிலருக்குக் கிடைக்க வில்லை. எனவே காவலர்கள் உள்ளேவிட சிலரை மறுத்தனர். எனது கோட்டில் மாநாடு முக்கிய அழைப்பாளர்களுக்குரிய தங்க முலாம் பூசிய சின்னம் குத்தப்பட்டிருப்பதால் என் பின்னே வந்தவர்களனைவரும் உள்ளே தடங்கலின்றி நுழைந்தனர். மேடையில் மலேசி யப் பிரதமருடன், தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு.பக்தவத்சலம், மாநாட்டுத் தலைவர் டாக் டர் பிலயோசா அடிகள், அ. சுப்பையா ஆகி யவர்களிருந்தனர். கூட்டத்தில் தமிழ் நாட்டி லிருந்து வந்தவர்களில் சிலரிடையே, 'என்ன, நமக்கு மேடையில் இடமில்லையே' என்று முனகல் எழுந்தது. 'அந்த மாநாடு நடப்பதற்கு மிகவும் துணை நின்ற சுப்பிரமணியமே பொது மக்கள் வரிசையில் இருந்தாரே! எனவே குறுகிய மேடையில் எல்லோருமிருக்க இய லாதாகையால் சிலரை, குறிப்பாக முதியவர் களை மேடையில் இருத்தியிருந்தோம்' என்று அடிகள் பதில் கூறியதாக நண்பர்கள் சொன் னார்கள்.

அடுத்த நாள் காலையில். 'எனக்கும் பொன் முலாம் பூசிய சின்னம் வேண்டும். வாழ் நாள் முழுவதும் தமிழுக்காக உழைத்த எனக்கு அது தராவிட்டால் நான் மகாநாட்டில் கலந்து கொள்ளமாட்டேன்' என்று எப்பொழுதும் அன் பாகப் பழகும், ஆனால் சற்று முன்கோபமு- டைய முதிய நண்பர் ஒருவர் அடம்பிடித்தார். ம.பொ.சிவஞான கிராமணியார், 'அவர் அடம் பிடிக்கிறார். சமாதானப்படுத்துங்கள்' என்று என்னிடம் கூறினார். நான் என்னால் ஆனமட் டும் முயன்றேன். 'முலாம் பூசிய என் முத்தி ரையைத் தங்கள் தோள்பட்டையில் குத்திவி டுகிறேன். தமிழ் நாட்டிலிருந்து திரளாக வந்து, கோலாலம்பூர் நண்பர்களிடையே மன- உளைச்சல் ஏற்படுமாறு நடப்பது நன்றல்ல' எனக் கூறினேன். அவர் என் சொற்களைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இறுதியில் தனிநாயக அடிகள் அவரிடம் சில சமாதானச் சொற்கள் கூறியிருக்க வேண்டும். அடம் பிடித்த நண்பர் கருத்தரங்கில் முதல் வரிசையிலிருப் பதைப் பின்னர் கண்டேன்.

அந்த மாநாடு ஆய்விற்கு முதலிடம் கொடுத்து, ஒவ்வொரு நாளும் பிற நிகழ்ச்சிகள் நடப்ப தற்கும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. ஒருநாள் இரவு தனிநாயக அடிகள் விருந் தொன்று கொடுத்து மாநாட்டில் முனைப்பாக உழைத்தவர்களைப் பாராட்டிச் சிறு மது அருந் திய நிகழச்சி ஒன்றும் நடந்தது.

மாநாடு நடக்கும்போது ஒருநாள் காலை அடிகள் நான் தங்கும் அறையில் வந்து, 'முக்கியமான ஒன்றிரண்டு பேரை நாம் சென்று சந்திப்போம், நீயும் என்னுடன் வா' என்றார். 'போவோம்' என்று கூறி 1935ம் ஆண்டு வாக்கில் திருவனந்தபுரத்தில் நடந்த அகில இந்திய கீழ்த்திசை மாநாட்டுப் பேராளர்கள் தங்கியிருந்த ஒவ்வொரு அறைக்கும் சென்று, அன்று திவானாக இருந்த சர்.சி.பி. இராம- சாமி ஐயர் குசலம் விசாரித்ததும் அதனால் பேராளர்கள் மிக மகிழ்ந்ததையும் கூறினேன். எனவே, எல்லா அறைகளுக்கும் சென்று ஒவ்வொருவருடைய நலனையும் அவர் விசா ரிக்க முற்பட்டார். நான் அவர் பின்னே புன் முறுவலுடன் சொல்லாடாமல் நின்றிருந்தேன். அன்று நடந்த நிகழ்ச்சியால் பேராளர்கள் தமக்கிருந்த ஒருசில குறைகளைக்கூட மறந்து விட்டனர். ஆட்களுடன் எளிதில் பழகும் ஆற்றல் அடிகளுக்கு வாய்த்த பெருங்குணம். துறவை மேற்கொண்டிருந்ததால், பழகுபவர் கள் மிக மதிப்புடன் அவரோடு உரையா டினர். நீடிக்கும் நட்புறவைப் பலருடன் அடி கள் கொண்டிருந்ததற்கு அவைதாம் காரணம்.

மாநாடு நடந்து முடிந்ததும் பேராளர்கள் ஈப்போ போன்ற அயல் நகரங்களுக்கு அழைத் துச் செல்லப்பட்டனர். நானும் சில நண்பர்களும் கோலாலம்பூர் மாணவர் விடுதியிலேயே தங்கி விட்டோம்.

அந்த இடைவேளையில் ஒருநாள் ஒரு மலையிடத்தில் உல்லாசப் பயணத்திற்கு ஏற் பாடு செய்திருந்தனர். அங்கு மலைக்காட்சிக ளைப் பார்ப்பதுடன் பன்னாட்டுத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் (ஐஏடிஆர்) வருங்கால வளர்ச்சி ஆய்வு நிறுவனம் ஒன்றை நிறுவுவது, தமிழ் ஆய்வுக்கென ஓர் அரையாண்டு இதழ் ஒன்றை வெளியிடுவது போன்ற திட்டங்கள் உருவா யின. பிறர் கருத்தைக் கேட்பதும், அவர்கள் கேட்டால் அவற்றை எவ்வாறு செயற்படுத்து வது என்பதை நானறிந்த மட்டில் தெரிவிப்ப தும் என் போக்காக இருந்தது.

நான் ஊர் திரும்பும்முன் ஒரு நாள், 'சுப்பு! உன் செலவிற்கு மலேசிய டாலர் தரட்டுமா?' என்றார் அடிகள்.

'இலக்கியக் கொள்கை என்னும் நூலை மொழிபெயர்த்த திருமதி.குளோறியா சுந்தர- மதிக்கு முந்நூறு ரூபாய் சிறப்பு ஊதியம் கொடுக்கத் தீர்மானித்திருப்பதால் அந்தப் பணம் மட்டும் தந்தால் போதும். கடன் பெற் றுச் செலவு செய்வது நன்றன்று' என்றேன். எனது கையில் ஏறத்தாழ எழுநூறு ரூபாய் இருந்ததால் எனக்குப் பொருள் ஏதும் தேவைப்



படவில்லை.

சென்னையில் 1968ல் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்கான ஆரம்ப ஏற்பாடுகள் துவங்கின. அதற்குச் சற்றுமுன் நடந்த பொதுத் தேர்த லில், மாநாட்டுக்கு அழைப்பு விடுத்த திரு. பக்கவத்சலமும் காங்கிரஸ் கட்சியும் தோல்வி- யுற்றன. திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரும் வெற்றியைப் பெற்றது. எனவே தமிழ் மீதும் தமிழ்ப் பண்பாடு மீதும் புத்துணர்வும் எழுச்சியும் அன்று வெளிப்படையாகத் தெரிந்தன.

அன்று முதலமைச்சர் திரு. அண்ணாதுரையும் அமைச்சர்களும் தமிழக அரசின் மாநாடு நடத்துவதில் முனைப்புடன் செயல்பட்டனர். அரசியலும் பிரச்சாரமும் கலவாத ஆய்வு மாநாடு ஒன்றை நடத்தப் பன்னாட்டுத் தமி ழாய்வுக் கழகம் விரும்பியது. அரசியல் பேச் சாளர்கள் தாங்கள் தாம் தமிழ் வளர்ப் பவர்கள், பாதுகாவலர்கள் எனவே, தாம் முன் னின்று நடத்த வேண்டும் என்று அடம் பிடிக் கவே மாநாடு இரண்டு பிரிவாகப் பிரிக் கப்பட்டு பொதுமக்களுக்குத் தீவுத்திடலிலும் ஆய்வாளர்களுக்குப் பல்கலைக்கழக நூற் றாண்டு மண்டபத்திலும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. பொதுமக்கள் விரும்பும் ஆரவாரப் பேச்சுக்கள், கேளிக்கைகள் முதலி யவற்றை ஆய்வாளர்கள் விரும்புவதில்லை. பல நாட்டிலிருந்து மாநாட்டிற்குப் பேராளர்கள் வந்திருந்தனர். விழாக்கோலம் கொண்டிருந்த சென்னையில் ஆய்வுக் கட்டுரைகள் படைக் கும் நூற்றாண்டு மண்டபத்தில் தேர்ந்தெடுத் தவர்கள் மட்டும் நுழைவு அட்டைகளுடன் அனுமதிக்கப்பட்டனர். எனவே அறிஞர்களும் ஆய்வாளர்களும் மட்டும் கூடிய கூட்டமாக நூற்றாண்டு மண்டபக் கூட்டம் அமைந்தது.

'ஒரு கொள்கையாக்கச் சொற்பொழிவாற்ற வேண்டும்' என்றும் அமைப்பாளர் குழுவின் சார்பில் அ. சுப்பையா என்னைக் கேட்டுக் கொண்டார். 'தமிழ் இலக்கியத்தில் சில மைல் கற்கள்' என்பது என் தலைப்பு. என் கட்டுரை 1960 முதல் 1965 வரை நடந்த ஆய்வைச் சீர்தூக்கிய பின்னர் சில புதுச் செய்திகளை யும் கொண்டிருந்தது. திரு. அ. சுப்பையாவுக்கு அந்தக் கட்டுரையின் போக்கு பிடிக்காததால் கட்டுரையில் வேறுசில செய்திகளையும் சேர்த் திடுமாறு அப்போது செயலாளராக இயங் கிய கமில் ஸ்வலபில் வழி எனக்குக் கடித மொன்றை எழுதச் செய்தார். 'என் கட்டுரையில் எந்தவித மாற்றத்தையும் செய்ய இயலாது. மாநாட்டில் அதனைப் படைத்திட வேண்டும் என்ற எண்ணமும் எனக்கில்லை' என்று எழு தினேன். நான் பதில் எழுதுவதற்கு முன்னர் கமில் ஸ்வலபில் தமது கையெழுத்தில் தான் கருத்தாக, 'அது நல்ல கட்டுரை, அதை மாற்ற முனையாதீர்கள்' என்று எழுதியிருந்தார். அவருடைய பரிந்துரையைப் பாராட்டினாலும், 'திரு.அ.சுப்பையாவிடம் அதனைக் கூறியிருக் கலாமே' என்று எனக்குத் தோன்றியது. எனவே மாநாட்டுக்குச் செல்லும் உள்ளுந்தல் எனக்கு இல்லாமலிருந்தது. திருவனந்தபுரத் திலுள்ள தமிழ்த் துறையிலும் மொழியியல் துறையிலும் பணிசெய்யும் எல்லா ஆய்வாளர் களையும் பங்கு பெறுமாறு அனுப்பிவிட்டு நான் மட்டும் செல்ல மனமில்லாமல் ஊரில் தங்கினேன். அதனையறிந்த அடிகள், மாநாட் டிற்கு உடனே வருமாறு தந்தியொன்றை அனுப்பினார். செய்தித்தாள்கள் தமிழ் மாநாட்டு ஏற்பாடுகளை மிக விரிவாக ஒவ்வொரு நாளும் வெளியிட்டு வந்தன. தமிழ் அபிமானிகளுக்கு அந்தச் செய்திகள் எழுச்சியூட்டின.

எனது கட்டுரை அரங்கேற்றுவதற்கு மாநாடு நடக்கும் புதன்கிழமை ஒதுக்கப்பட்டது என்று நினைவு. நான் அன்று அதன் நகலொன்றைக் கையில் எடுத்துச் சென்றிருந்தேன். திரு.வி. எஸ்.தியாகராய முதலியார். அந்தக் கட்டுரையை அலுவலகத்தில் தேடியும் கிடைக்கவில்லை என்று வருத்தத்துடன் கூறும்போது. என் கையில் அதன் நகல் இருக்கிறது என்றேன். கருத்து வேறுபாட்டால் என் கட்டுரையை அலுவலகம் அச்சேற்றவில்லை. அந்தக் கட்டுரை சுருக்க மானதாக இருந்ததால் இருபது நிமிட நேரந் தான் நீடித்தது. ஆனால் கேள்வியும் அதற்கு ரிய பதிலும் ஏறத்தாழ ஒன்றரை மணியளவு நீண்டு நின்றது. அதன் முழு விவரங்களை ஈழ நண்பர் டாக்டர் கைலாசபதி இலங்கை நாளிதழ் ஒன்றில் பலநாள் வெளியிட்டு எனக் குத் தொகுத்துப் பின்னர் அனுப்பி இருந்தார். தினமணி ஆசிரியர் ஏ.என். சிவராமன் இந்தி யன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் 'காமான முற் போக்கான கட்டுரை' என்று பாராட்டியிருந்தார்.

கட்டுரை படிக்காமல் விடப்பட்டிருந்தால், மாநாட்டு நல்ல நிகழ்ச்சி ஒன்று, பிறர் கண் ணில் படாமல் போயிருக்கும் என்று அடிக ளும் திரு. சுப்பையாவும் பின்னர் கூறினர். அந்த மாநாட்டில் இந்தியத் தேசிய அமைப் பின் செயலாளராக என் பெயரை அடிகளும், சுப்பையாவும் செயற்குழுக் கூட்டத்தில் கூறிட அதனைப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் எதிர்த்தாராம். நான் அந்தக் கூட் டத்திற்குப் போகவில்லை. எனவே அடுத்த நாள் உலகக் குழுவின் பொதுச் செயலா ராக என்னை உயரிடத்தில் நியமித்தனர். அன்று இரவு எக்ஸ்பிரஸ் செய்தித்தாளின் உரிமையாளர் திரு. கோயங்கா அளித்த விருந்திடத்தில் கண்ட அடிகள், 'என்னுடன் நீயும் பன்னாட்டுத் தமிழாய்வுக் கழகத்தின் செய லாளர் ஆக்கப்பட்டுவிட்டாய். இருவரும் சேர்ந்து பணி செய்வோம்' என்றார். பதவியால் எதுவும் சாதித்துவிட முடியாது என்ற எண்ணம் உறு தியாக என் மனதில் பதிந்திருந்ததால், அடக் கத்துடன் அவர் கூறிய செய்திகளனைத்தை யும் கேட்டுக் கொண்டேன். ஒருநாள் மாலை, தீவுத்திடலுக்கு அடிகளுடன் நானும் சென்றேன். அங்குச் சென்ற நேரம் மாலை ஆகையால் நிகழ்ச்சி எதுவும் அப்போது நடைபெறவில்லை. பல கடைகள் (டீ ஸ்டால், வெற்றிலை பாக் குக்கடை) முதலியவை அரசியல் தலைவர்க ளின் பெயரில் அங்கே இயங்கின. அவற் றைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

ஆய்வு மாநாடு எது, இலக்கிய விளம்பர மாநாடு எது என்பது பிரித்தறிய அன்று, வாழ்ந்த அறிவுச் செல்வர்கள் முயலவில்லை. தமிழ் செய்தித் தாள்களில் சில, பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டப நிகழ்ச்சிகளையும் அதன் அமைப்பாளர்களையும் விமர்சித்துச் செய்திகளை வெளியிட்டன. ஆனால் பன்னாட் டுத் தமிழ் ஆய்வுக்கழகம் எவ்விதப் பதிலும் அவற்றிற்கு அளிக்க முயலவில்லை. புறக்க ணித்துவிட்டது. மாநாடு முடிந்தபோது அடி கள் வேலைப் பளுவால் களைப்புடன் ஆனால் உற்சாகமாகக் காணப்பட்டார். நானும் அடுத்த நாள் ஊர் திரும்பினேன்.

அந்த மாநாட்டில் முடிவு செய்த தீர்மானங் களுள் ஒன்று உயர் ஆய்வு மையமொன் றைத் துவக்குவது. ஆங்கிலத்தில் அரையாண்டு இதழுக்கு அடிகள் ஆசிரியர், நான் இணை யாசிரியர், திரு.அ. சுப்பையா பொருளாளர் என இவ்வாறு பொறுப்பு ஒதுக்கப்பட்டது.

தமிழ் ஆய்வு நிறுவனத்திட்டம் சென்னையில் செயல்படுத்தப்பட்டது. மாறுபட்ட சூழ்நிலை காரணமாகத் தனிநாயக அடிகள் மலேசியா விலுள்ள பேராசிரியர் பதவியை விட்டு வில கிவிட்டார். 'அவரைப் புதிதாக அமையவி ருக்கும் தமிழாய்வு நிறுவனத்தின் இயக்கு நராக நியமித்தால் மிகச் சிறப்பாக நடத்து வார்' என்பது எனது உறுதியான நம்பிக்கை. 'ஆய்வில் உனக்கு அடிகளைவிடக் கூடுதல் அனுபவமும் உலகோர் ஒப்புதலும் உண்டு' என்று பன்னாட்டுத் தமிழாய்வுக் கழகத்தில் பெரும் பொறுப்பு வகித்த நண்பர் ஒருவர் என்னிடம் ஒருநாள் கூறினார். 'எங்கள் நட்பு பலவாண்டுகள் நீடித்து வரும் ஒன்று. பல துறை அறிஞர்களைக் கவரும் தெய்வசக்தியும் தமிழின் ஏற்றத்தைப் பல மொழியாளர்க ளிடம் கூறி ஒப்புதலைப் பெறும் வல்லமையும் அடிகளிடம் உண்டு' என்று கூறி அவலச் சொற்களை மீண்டும் கூறக் கேட்க நான் விரும்பவில்லை என்று தெரிவித்து விட்டேன். மலேசியா பதவியை விட்டு அடிகள் விலகிய போது, சென்னை ஆய்வு நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க அழைக்கப்படுவார் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. ஆனால் நாளா வட்டத்தில் அந்த நம்பிக்கை குறைந்தது. நானும் அந்த நிறுவனப் பணியிலிருந்து மெள்ள மெள்ள அகலத் துவங்கினேன்.

ஆய்வு நிறுவனத்திற்கு மைய அரசு ஏதேனும் நல்கை தந்திடவேண்டும் என்று அ.சுப்பையா முயன்றார். அதற்காக சி.சுப்பிரமணியம் உடன் வர அ.சுப்பையா, அன்று கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் வி.கே.ஆர்.வி. இராவை டெல் லியில் சென்று சந்தித்தனர். அவர் தமிழ் வளர்ச்சிக்கு ஐந்தாண்டுகளுக்குத் தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒருகோடி ரூபா யிலிருந்து செலவிடுக என்று கூறிவிட்டார். அன்று வி.கே.ஆர்.வி.இராவ் நடந்துகொண்ட முறை எரிச்சல் ஏற்படுத்தியதாகவும் அ.சுப்பையா கூறினார். வி.கே.ஆர்.வி. இராவ் நேரத்திற் கேற்ப மனம் மாறும் நிலையினர். அறிஞர்க ளுக்கு இயற்கையாக ஏற்படும் பெரும் சின மும் அதன்பின் சினத்தணிவும் அவரிடமுண்டு. ஆனால் மொழி வளர்ச்சியில் நல்லெண்ணம்

தொடர்தல் 73ம் பக்கம்

உடையவர். தாமே வகுத்துக்கொண்ட திட்
டப்படிச் செயல்படுவர். பிறர் கூறுவதை அனு
சரிப்பது மிகவும் குறைவு. எனினும் அவரைக்
கண்ட பின்னரும் அதிக ஆதரவு கிடைக்க
வில்லையே என்று சுப்பையா வருந்தினார்.

பன்னாட்டுத் தமிழாய்வுக் குழுவுடன் நான்
கொண்ட தொடர்பு படிப்படியாகக் குறைந்
தது. பாரீசில் நடந்த மூன்றாம் உலக மாநாட்டின்
பின் அந்தத் தொடர்பு அறவே குறைந்து
விட்டது. உள்ளேயிருந்து ஒரு நிறுவனத்தின்
அமைப்பை எதிர்ப்பதைவிட அதனை விட்டு
விலகுவது தான் என் வழக்கம். எனவே 1970ம்
ஆண்டுவாக்கில் என் பொறுப்புகள் அனைத்
திலிருந்தும் விலகிக்கொண்டேன். அதன் பின்
னர் டாக்டர் மு.வரதராசனார் ஈடுபடுத்தப்பட்
டார். தனிநாயக அடிகளும் தொட்டுத் தொடாம
லும் அதில் தொடர்ந்தார்.

பாரீசில் நடந்த உலகக் கீழ்த்திசை மாநாட்டில்
அடிகளைச் சந்தித்த போது மிகவும் தன்
னம்பிக்கை இன்றிக் காணப்பட்டார். தமிழாய்வு
நிறுவனம் வேறொரு வழியில் இயங்குவது
பற்றியும் குறிக்கோள் அனைத்தும் நிலை-
குலைந்து போவதையும் கூறினார். அப்போது
தான் யாழ்ப்பாணத்தில் வாழ்வதாகவும் நீரி
ழிவு நோய் இருப்பதாகவும் பல குருக்கள்
மார் முதுமையில் சித்த பிரமையால் அவதிப்
படுவது போன்று தாமும் அவதிப்படாமல்
பார்த்துக் கொள்வதாகவும் கூறினார். கேட்ப
தற்கு வருத்தமாக இருந்தது. அவர் செய்த
பெருந்தொண்டினைக்கூறி அவரைத்தேற்றினேன்.

1971ம் ஆண்டில் திராவிட மொழியியல் கழகம்
உருவானது. எதிர்பாராத இடங்களிலிருந்து
ஆதரவு அதற்குக் கிடைத்தது. அது வலுவுற்
றபோது இலங்கையிலிருந்த அடிகள் எழு
திய எழுத்துக்கள் மிகவும் ஊக்கம் தந்தன.
ஒரு கடிதத்தில், 'தன்னைச் சேர்த்துக் கொள்
ளாதது ஏன்?' என்று கேட்டிருந்தார். 'மொழி
யியல் ஆய்வில் மட்டும் ஒதுங்கி நிற்கும் அந்த
நிறுவனத்தில் அடிகளைச் சேர்ப்பது பொருந்
தாது. அதுமட்டுமன்று, நானிருக்கும் இடங்க
ளில் எல்லாம் அடிகள் அல்லவா இருக்கிறார்'
என்று தேற்றினேன். அடிகள் வயது முதிர்
வில் எழுதிய கையெழுத்துக் கடிதங்கள்,
தெளிவாக நடுக்கம் எதுவுமின்றி இருந்தன.
அவருடைய அன்பு ஒரு துளியளவுகூட குறைந்
திடவில்லை. அக்காலக் கட்டத்தில் இருவரும்
சந்திப்பது மிகக் குறைவாகவே நடைபெற்றது.

திருவனந்தபுரத்தில் வாழும் மார் கிரிகோரியஸ்
திருமேனியைச் சில ஆண்டுகளுக்கு முன்
சந்தித்தபோது தனிநாயக அடிகள் திருவனந்
தபுரம் டையோசிஸில் சேர்ந்தவர் என்று கூறி
அதற்குரிய பின்னணியை விளக்கினார்.
இலங்கை பிஷப் இத்தாலியில் சென்று தனி-
நாயகம் படிக்க அனுமதிக்காததால் திருவனந்
தபுரம் மலங்கரை சர்ச்சின் டையோசிஸில்
உறுப்பினராக்கி, அதன் பின்னர் ரோமுக்குக்
கல்வி பயில அனுப்பப்பட்டார் என்றார். பின்
னர் மலங்கரை சர்ச்சிலிருந்து பிரிந்து தூத்
துக்குடி பிஷப் ரோச்சு அவர்கள் ஆதரவில்
தூத்துக்குடி டையோசிஸில் தனிநாயக அடி
கள் சேர்ந்து பணி செய்தார் என்று நண்
பர்கள் கூறினர். பிஷப் ரோச்சுதான் அடிகளுக்கு
ஆசிரியராகவும் ஆய்வுப் பணியிலும் கலந்து
கொள்ளும் முழு உரிமையை அளித்தவர்
என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு நான் 1983ல் சென்ற போது
அங்குள்ள அரசப் பிரதிநிதியின் தந்தை
திரு. நேசையா, அடிகளைப் பற்றியும் பல
நுணுக்கச் செய்திகளைத் தெரிவித்தார். சிங்
களவரின் ஆதிக்கம் மேலோங்கியதும் தமிழர்
களின் இன்னல்களைப் பொறுக்காத தனிநா-
யக அடிகள் அரசுக்கு எதிராகத் தமது கருத்
தைத் தெரிவித்தார் என்றும், காவல் கண்கா
ணிப்பு மிகவே பல்கலைக்கழகத்தில் தான்
தங்கியிருந்த அறையைப் பூட்டி திரு.நேசையா
கையில் சாவியைக் கொடுத்து நூல்களை
யும் ஏனைய உடைமைகளையும் தனது வீட்
டில் எடுத்துச் சென்று காக்குமாறு கூறி
விட்டுத் தமிழகத்திற்குத் தனிநாயக அடிகள்
வந்து தங்கிய செய்தியைத் தெரிவித்தார்.

அடிகள் தனிமனித சுதந்திரத்தைப் போற்
றியவர். பிறர் சுதந்திரத்தைத் தடை செய்யும்
எந்த முயற்சியையும் எதிர்த்தவர். அதற்காக
அவர் மேற்கொண்ட இன்னல்கள் சிறிதல்ல
என்று பிறர் கூறக்கேட்டேன். ஆனால் இலங்கை
நிகழ்ச்சி பற்றி என்னிடம் எதுவும் சொன்ன
தில்லை.

1981ம் ஆண்டு ஜனவரி மாதம் மதுரையில்
நடைபெறவிருந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு
ரிய அமைப்புக் குழுவில் என்னையும் ஓர்
உறுப்பினராகத் தமிழக அரசு நியமித்திருந்
தது. அங்கும் ஆய்விற்கும், பொதுமக்கள்
பங்கெடுப்பதற்கும் இருகூறாக மாநாடு நடத்த
முடிவெடுத்திருந்தனர். ஆய்வு மாநாடு மதுரைப்
பல்கலைக்கழக வளாகத்திலும் பொதுமக்கள்
பங்கெடுக்கும் பிரச்சார மாநாடு தமுக்கம்
மைதானத்திலும் நடத்த ஏற்பாடாகியிருந்தது.
1980ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடந்த
ஆய்வு மாநாட்டு அமைப்புக் குழுக் கூட்டத்
திற்குத் திரு. ஆர்.எம். வீரப்பன் தலைமை
தாங்கினார். சென்னை இந்திரா நகருக்கு
அருகாமையிலுள்ள வெங்கடரத்தின நகரிலுள்ள
ஓர் இல்லத்தில் அதன் அலுவலகம் இயங்
கியது. நான் பயணம் செய்த விமானம் காலந்
தாழ்த்திச் சென்னை சென்று சேர்ந்ததால்
சற்று நேரம் கழித்துத் தான் கூட்டத்தில் பங்
கேற்க முடிந்தது. என்னைக் கண்ட வ.சுப.
மாணிக்கனார், 'தனிநாயக அடிகள் காலமா
கிவிட்டதாக நேற்று ஒரு தந்தி வந்திருந்தது.
நீங்கள் தெரிந்திட வேண்டும் என்று அதனை
இப்போதே கூறுகிறேன்' என்றார். ஒரு கணம்
அந்தச் செய்தியைக் கேட்டு நிலையிழந்து
விட்டேன். நாவறண்டது. 'என்னவிட என்
அருகிலிருந்த அ. சுப்பையா அவர்கள் மிக
வும் வருத்தமடைவார்' என்றேன். எனினும்
கூட்டம் நடந்து முடிந்தது. நான்கு உலக
மாநாடுகளுக்கு அடிகோலி, வழிகாட்டியாக
விளங்கிய அடிகள் இல்லாமல் மதுரை
மாநாடு பொலிவிழந்துவிடப் போகிறதே என்ற
வருத்தம் என்னை வாட்டியது. எனினும் மாநாடு
தோற்றுவிடக் கூடாதே என்ற எண்ணத்தால்
அன்றைய கூட்டத்திலும் அதன் பின்னர் நடந்த
கூட்டத்திலும் பங்கேற்றேன். அதன்பின் நடந்த
மதுரை மாநாட்டில், மூன்று நாள் கலந்து
விட்டு ஊர் திரும்பினேன்.

தனிநாயக அடிகளின் உருவச் சிலையைக்
கல்வியமைச்சர் செ.அரங்கநாயகம் மாநாட்
டின் முதல் நாள் திறப்பதாக அறிவிக்கப்பட்
டது. அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வது
என் கடமையாகக் கருதி அந்தக் கூட்டத்
திற்குச் சென்றிருந்தேன். ஈழத்து நண்பர்கள்
பலர் வந்திருந்தனர். நண்பர் மதுரை நெடு-
மாறன் அங்கிருந்தார். என்னைப் பேசுமாறு
அவர் கேட்டுக்கொள்ள, கல்வியமைச்சர் அழைத்
தார். எதிர்பாராத அழைப்பு அது. 'உல-
கோர் பலர் தமிழ் மொழியைப் போற்றுமாறு
செய்த பெரும் தொண்டை மேற்கொண்டவர்
அடிகள். பிறரைத் தன் வயப்படுத்தும் செய்வ
சக்தியைக் கொண்டவர். தமிழுக்கு ஏற்றம்,
தமிழுக்கு நல்வாழ்வு ஆகியவற்றைத் தமது
வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர்' என்று
கூறியது நினைவிருக்கிறது. அதன் பின்னர்
தான் மதுரைப் பல்கலைக்கழக ஆய்வு மா-
நாட்டில் கலந்துகொள்ளச் சென்றேன். அந்த
மாநாடு நடப்பதற்குப் பெரும் பொருள் செல-
வாயினும் ஆய்வில் பெரும் முன்னேற்றம்
ஏற்பட்டுள்ளதாக ஆய்வுக்கட்டுரைகள் தெளி
வாக்கவில்லை. அந்த மாநாட்டில் தான்
தமிழுக்கு என ஒரு தனிப் பல்கலைக்கழகம்
அமைக்கும் முடிவை முதலமைச்சர் எம்.ஜி.
இராமச்சந்திரனார் இறுதி நாள் முடிப்புச்
சொற்பொழிவில் தெரிவித்தார் என்று செய்
தித்தாள்கள் தெரிவித்தன. அந்தப் பல்க
லைக்கழகம் துவங்கியபோது முதன்மைச்
செயலாளர் க. திரவியம், துணை வேந்தரா
கப் பொறுப்பு ஏற்க இசைவு தரவேண்டு
மென்று தொலைபேசியில் என்னை அழைத்
துத் தெரிவித்தார், எதிர்பாராத அமைப்பு.
அதன் பின்னர் முதலமைச்சர் எம்.ஜி.இரா-
மச்சந்திரனார் 1981ம் ஆண்டு செப்டம்பர் 15ம்
நாள் தஞ்சையில் நடக்கும் பல்கலைக்
கழகத் துவக்க விழாவில் கலந்திட வேண்டு
மென்று அழைத்தார். எல்லாம் விரைவாக
எதிர்பாராத விதமாக நடந்தன. ஓரிரு ஆண்
டுக்குள் பட்டமளிப்பு விழா நடத்த ஏற்பாடாகி
இருந்தது. அந்தப் பல்கலைக்கழகக் குழுக்
கள் செய்யும் பரிந்துரைப்படி நடக்கும் நான்,
அன்று விதிவிலக்காக அடிகளுக்குச் சிறப்பு
முனைவர் பட்டம் அளிக்கும் தீர்மானத்தைக்
கூறவே ஆளுநர் குழுவும் ஒரு மனதாக
ஒப்புக்கொண்டது. அடிகளின் மருமகன் மலே
சியாவிலிருந்து வந்து அந்தப் பட்டத்தை,
மேன்மை தங்கிய ஆளுநர் குரானாவிடமி
ருந்து பெற்றார். தமிழ்மொழி பழமையானது.
அதன் சங்க இலக்கியம் ஏற்றமுடையது.
அதன் பக்தி இலக்கியம் மனதை உருக்கும்
இயல்புடையது. சிலப்பதிகாரகாவியம் உலக
இலக்கியங்களில் சிறப்பிடம் பெறத்தக்கது
என்று பிறநாட்டார் அறிந்திடச் செய்தவர்
அடிகளாவார். உலக மாநாடு மலேசியாவில்
நடத்தியதும், அதன்பின்னர் சென்னை,பாரீஸ்,
யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நடத்துவ
தற்கு வழிகாட்டியாகநின்றவரும் அடிகளாவார்.
அதன்பின்னர்தான் சமஸ்கிருதம், தெலுங்கு,
கன்னடம், மலையாளம், இந்தி முதலிய
மொழிகள் உலக மாநாடுகளை நடத்த
முயன்றன. அவற்றிற்கெல்லாம் முன்னோடி
அடிகளாவார். தமிழகம் அவர் செய்த பெருந்
தொண்டை முழுமையாக உணர்ந்திடவில்லை.
அவரால் உலக அரங்கில் தமிழுக்கு ஏற்
பட்ட சிறப்பை, இதுவரை விலை மதித்திட
வில்லை. தமிழ்நாட்டில் நல்ல தொண்டுக
ளைச் சீர்தூக்கிப் பாராட்டப் பலவாண்டுகளா
கும். வளராத மனநிலை உடையவர்கள்
பலராகையால் அந்த மனநிலை மாறப் பல
வாண்டு நீடித்திடும். ஆனால் விரைவில்
அந்த நிலை மாறாமல் இருக்காது. அன்று
தனிநாயக அடிகளைச் சிரமேற்கொண்டு தமிழர்
போற்றுவர்.

■ ■ ■

தமிழ்த்தூது



# வள்ளுவரும் புத்தரின் ஒழுக்க இயல்பும்

## - தமிழ்ப்பேரறிஞர் தனிநாயக அடிகள் -

**இவ்வாண்டு உலகம் எல்லாம் பரவியிருக்கும் தமிழ் ஆர்வலர்கள் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி அவரை நினைவு கூர்கின்றனர்.**

**கிறிஸ்துவப் பணிக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பின் தமிழைத் துறைபோகக் கற்று, தமிழ்மொழியின் தொன்மையையும் செழுமையையும் உலகறியச்செய்து, தமிழ் முனிவராக மலர்ந்தவர் தனிநாயகம் அடிகளார். பட்டங்கள் பலபெற்று, பல மொழிகளறிந்து, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி அர்த்தமுள்ள மாநாடுகளை நடத்தித் தமிழ் செழுமையுறத் துணை நின்றவர். Ambassador for Tamil என இந்தியப் பத்திரிகைகளால் பாராட்டப் பெற்றவர். இவர் எழுதிய ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகளை இன்றைய தமிழ் வாசகர்கள் எல்லோரும் வாசித்தோர் என்றில்லை.**

**தாய் வீடு வாசகர்களுக்காக பேரறிஞர் தனிநாயக அடிகளின் ஆக்கங்களையும் அவர் பற்றிய ஆக்கங்களையும் தொடர்ந்து வெளியிட எண்ணியுள்ளோம்.**

புத்தருடைய அறவுரைகளும் அவற்றை விளக்கிய ஏனைய நூல்களும் துறவறமே ஈடேற்றத்திற்கு ஒப்பற்றவழி என்ற வலியுறுத்துவதை நாம் காண்கிறோம். வள்ளுவரோ தம்முடைய நூலின் பெரும் பகுதியில் இல்லறமே ஒப்பற்ற வழி என்று வலியுறுத்துவதாகப் பலர் நம்புகின்றனர். துறவறத்தை வள்ளுவர் இணையற்ற வாழ்க்கை நிலையாகக் கூறினாராயினும் இல்லறத்தையே நன்றாக விளக்கி இல்லறமே துறவுக்கும் உறுதுணையாக நிற்பது என்பதை நிலைநாட்டுகின்றார்.

புத்தரின் சமயம் தமிழ்நாட்டில் எக்காலத்தில் பரவியது என்பது பற்றி அறிஞர் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கின்றனர். சங்க இலக்கியத்திலிருந்து இளம்போதியார், சிறுவெண் தேரையர் எனும் தமிழ்ப் புலவர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் பெரும்பாலும் புத்தராக இருந்திருத்தல் கூடும் என்றும் கருதுவதற்கு இடமுண்டு. சங்ககாலப் பாடல்கள் சில புத்த கொள்கைகளை ஆதரிப்பவை போல் தோன்றுகின்றன.

*நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவ ராடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே*

*(புறம் - 187)*

187வது புறப்பாட்டு, சுத்த நிபாடத்தில் உள்ள தம்மபதத்தின் 98ம் சுலோகத்தை நினைவூட்டுகின்றது.

'அருகத்துக்கள் (முனிவர்கள்) எங்கே வசிக்கிறார்களோ, அது நாடாயினும் காடாயினும், பள்ளமாயினும் மேட்டு நிலமாயினும் அதுவே இரமணியமான இடம்'.

மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள குகைகளில், கழுகுமலைப் பக்கங்களில் அசோகர் காலத்தின் பிராமி எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளும் ஏனைய இலக்கியக் கூற்றுக்களும், கி,மு. முதலாம் நூற்றாண்டிலேயே புத்த துறவிகள் தென் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாவன.

காவிரிப்பூம்பட்டினத்தில் புத்தர் சமயத்தைப் பரப்பும் துறவிகள் பலர் வாழ்ந்து வந்தனர் என்பது சிலப்பதிகாரத்திலிருந்து தெளிவாகின்றது. எனவே, கடைச்சங்க இலக்கியக்காலத்திற்கும் சிலப்பதிகாரத்தின் காலத்திற்கும் இடைக் காலத்தில் வாழ்ந்த வள்ளுவர், புத்தருடைய கருத்துக்களை அறிந்திருத்தல் வேண்டும். வள்ளுவரின் ஒழுக்க இயலுக்கும் புத்தரின்

*தொடர்தல் 67ம் பக்கம்*

# தமிழ்த்தூது

ஒழுக்க இயலுக்கும் ஒற்றுமைக் கருத்துக்களும் பல உளவேற்றுமைக் கருத்துக்களும் பல உள.

## 1

புத்தர் ஒழுக்க இயலைப் பற்றி அறிவதற்குப் பாலிமொழியில் எழுதப்பெற்ற விநயபிடகம், சூத்திரபிடகம் எனும் தொகை நூல்கள் அடிப்படையானவை. அவற்றுள் சிறப்பாகச் சுத்தநிபாதம் எனும் நூல் வள்ளுவரின் நூலுடன் ஒப்பிடத்தக்க கருத்துக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது இந்நூல் சூத்திரபிடகத்தில் உள்ளது.

கிரேக்க ஒழுக்க இயலும் உரோமையருடைய ஒழுக்க இயலும் பெரும்பாலும் உலகில் வாழ்பவர்க்கு ஏற்ற ஒழுக்க இயலாக அமைந்தன. புத்தருடைய ஒழுக்க இயலோ பெரும்பாலும் துறவிகளுக்கென்றே வகுக்கப்பெற்ற ஒழுக்க இயல். புத்த சமயம் அடிப்படையாகத் துறவிகளுக்கென்றே வகுக்கப் பெற்ற சமயம். எனவே புத்த சமயத்தில் உலக 'நோன்பிகளுக்குச்' சிறந்த இடமில்லை உலகில் வாழ்பவர்கள் பிற்காலத்திலேயே புத்த சமய அமைப்பில் இடம் பெற்றனர் தொடக்கத்தில் புத்த சமயம் பெண் துறவிகளைக் கூடப் போற்றவில்லை. ஈடேற்றத்தைப் பெற வேண்டுமெனில் பெண் துறவிகளும் ஆடவர்களாகப் பிறந்து துறவறத்தைப் புத்த சமயத்தில் மேற்கொண்டு அதன் வழியாகவே ஈடேற்றத்தைப் பெறுதல் கூடு-மென்பது புத்த சமயத்தின் அடிப்படைக் கொள்கை.

## 2

கி.மு ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பிராமணரின் செல்வாக்கு நன்றாக நிலைநாட்டப் பெற்றுப் பிராமணரின் சமயம் பரவியிருந்தது. இந்தியாவின் வடகிழக்கிலோ துறவறமே சிறந்த வழியாகக் கருதப்பெற்று எண்ணிறந்த துறவறக் குழுக்கள் அமைக்கப்பெற்றிருந்தன. இத்துறவறக் குழுக்களுள் சிறந்தவர் மகாவீரரின் சமணர், புத்தருடைய துறவிகள், கோசலருடைய ஆசீவகர் ஆகியோராவர். இத்துறவிகள் மேற்கொண்ட துறவறவழிகள் பல. இவர்கள் ஊர் ஊராகச் சென்று தம் கொள்கைகளைப் பரப்பியும் பொது மேடையில் தம் கருத்துக்களை விவாதித்தும் வந்தனர்.

புத்தருடைய அறிவுரைகளும் அவற்றை விளக்கிய ஏனைய நூல்களும் துறவறமே ஈடேற்றத்திற்கு ஒப்பற்ற வழி என்று வலியுறுத்துவதை நாம் காண்கிறோம். வள்ளுவரோ தம்முடைய நூலின் பெரும் பகுதியில் இல்லறமே ஒப்பற்ற வழி என்று வலியுறுத்துவதாகப் பலர் நம்புகின்றனர். துவறவறத்தை வள்ளுவர் இணையற்ற வாழ்க்கை நிலையாகக் கூறினாராயினும் இல்லறத்தையே நன்றாக விளக்கி இல்லறமே துறவுக்கும் உறுதுணையாக நிற்பது என்பதை நிலைநாட்டுகின்றார். எனவே, தரும் பதத்துடனும் ஏனைய நூல்களுடனும் வள்ளுவரின் நூலை ஒப்பிடுங்கால் வள்ளுவரின் நூல் இல்லறத்தின் சாசனமாக விளங்கப் புத்த நூல்கள் துறவறத்தின் சாசனமாக விளங்குவதைத் காண்கின்றோம்.

சமணத்தைப் போல் புத்ததர்மமும் பரந்த மனப்பான்மையை இந்தியாவில் பரப்பியது. பிராமண நூல்களுடைய கருத்தின்படி ஈடேற்றம் அடையத் தகுதி உள்ளோர் இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பில் பிறந்திருக்க வேண்டுமென்றுதாம் கூறிவந்தனர். மிலேச்சர் வாழும் பிற நாடுகள் வேதியர் ஒழுக்கத்திற்கும் வாழ்க்கைக்கும் வேள்விக்கும் ஏற்ற நிலம் அல்ல என்று தரும சாஸ்திரங்கள் பல இடங்களில் விளம்புகின்றன. ஆனால் புத்தரோ தம்முடைய மதம் எங்கும் பரவ வேண்டும் என்று வற்புறுத்திப் பிற நாடுகளுக்கும் தம் சமய போதகர்களை அனுப்பினர். தாம் உலகிற்கு ஒளியைக் கொடுக்க வேண்டுமென்றும் மக்களுக்குப் பிறப்பறுக்கும் ஆற்றலை அளிக்க வேண்டுமென்றும் போதிக்கத் தொடங்கினார். "துறவிகளே செல்லுங்கள், ஆரம்பத்திலும் நடுவிலும் இறுதியிலும் தூய்மையான இக் கொள்கைகளைப் பரப்புங்கள்" என்று கூறியதின் பயனாகவும் அசோகரின் பெரும் முயற்சியினாலும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே இந்தியாவிலும் இந்தியாவைச் சூழ்ந்த ஏனைய நாடுகளிலும் புத்த தருமம் பரவியது. இலங்கையில் புத்த கொள்கை வேரூன்றிச் செழிப்புற்று ஓங்கிய பான்மை வரலாற்றிலேயே வியப்புறும் செய்தியாக விளங்குகின்றது.

## 3

புத்தம் 'புண்ணிய பூமியின்' நிலப்பரப்பை விரிவாக்கியதோடு சமூக சாதி வேறுபாடுகளையும் ஒழிக்க ஒருவாறு முயன்றது. புத்தருடைய காலத்தில் சமூகச் சீர்திருத்தத்திற்குப் பயன்பட்ட பெருங்கருத்து என்னவெனில் சாதி வேற்றுமை-யை ஒழிக்கும் கருத்தேயாம். பிராமணரின் வழிபாட்டு முறைகளையும் கேள்வி செய்யும் திட்டங்களையும் புத்தர் மறுத்ததோடு பிராமணர் தனி வகுப்பைச் சார்ந்தவர் என்றும் மற்றெல்லா வகுப்பினருக்கும் உயர்ந்தவரென்றும் பிராமணர் கூறுவதைக் கண்டித்ததையும் புத்த நூல்களிற் காண்கின்றோம். அந்நூல்களிற் காணப்பெறும் கருத்துக்களையும் கூற்றுக்களையும் படிக்கும் பொழுது இந்த நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தோன்றிய கழகங்கள் பிராமணரல்லாதாரின் உரிமைகளை நிலைநாட்டுவதற்குக் கூறிய மேடை உரைகள் போல் ஒலிக்கின்றன. "ஆடு, மாடுகளை நாம் அவற்றின் நிறத்தால் போற்றுகின்றனம் அல்லோம். அவை நன்றாக ஓடுகின்றனவா அல்லது நன்றாகச் சுமைகளைச் சுமக்கின்றனவா என்று கருதியே போற்றுகின்றனம். எனவே தம்முடைய நிறத்தின் காரணமாக உயர்ந்தோராகக் கருதப்பெறுதல் எத்துணைத் தவறு" என்ற பாணியில் அம்பத்தா சுத்தா, சோணாடந்த் சுத்தா முதலிய அறிவுரைகள் வலியுறுத்துகின்றன.

இந்நூல்களைப் படிக்கும் பொழுது பிராமணர் புத்த துறவிகளைத் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவராகக் கருதினர் என்பதும், அன்னார் பெரும்பாலும் அக்காலப் பிராமணரைப் போல் தோல் நிறமுடையவர்கள் அல்லர் என்பதும் தெளிவாகின்றன.



"துவறவறத்தை வள்ளுவர் இணையற்ற வாழ்க்கை நிலையாகக் கூறினாராயினும் இல்லறத்தையே நன்றாக விளக்கி இல்லறமே துறவுக்கும் உறுதுணையாக நிற்பது என்பதை நிலைநாட்டுகின்றார்."

## 4

தாழ்ந்த குலத்தவரையும் புத்தர் மடங்கள் துறவிகளாக ஏற்றுக் கொண்டன பிராமணர், பிராமணர் அல்லாதாரை விலக்கி வைத்த காலத்தில் புத்த தருமம் விரிவான மனப்பான்மையை உண்டாக்கியது என்பதற்கு இது ஒரு சான்றாகும். தேரிகாத்தா, தேராகாத்தா எனும் தொகை நூல்களில் உள்ள செய்யுட்களை யாத்தவர்கள் பல்வேறு வகுப்புகளைச் சார்ந்தவர்களாவர். தேரிகாத்தாவில் உள்ள இருநூற்றைம்பத் தொன்பது புலவர்களுள் சுஷித்திரியர் அறுபதின்மரும், வேளாளர் எழுவரும், வைசியர் ஐம்பத்து மூவரும், பறையர், தொழிலாளர், மீன்பிடிப்போர் பதின்மரும், நடிகர் ஒருவரும் உள்ளனர். தேராகாத்தா எனும் தொகை நூலில் உள்ள செய்யுட்களை யாத்தவர்களுள் அரச குலத்தைச் சார்ந்தவர் இருபத்து மூவரும் வணிகர்குலத்தைச் சார்ந்தவர் பதின்மூவரும், விலைமாதர் நால்வரும், இதர வகுப்புகளைச் சார்ந்தவர் நால்வரும் உள்ளனர். 'ஆரிய ஒழுக்கம்', 'ஆரிய வழி', 'ஆரிய உண்மை' என்று புத்தர் கூறுங்கால் 'ஆரிய' என்னும் பெயரெச்சத்திற்கு 'உயர்ந்த' 'ஒழுக்கத்தில் சிறந்த' என்ற பொருளைப் புத்த பெருமான் கொண்டாரன்றி ஒரு சாதியையோ, ஒரு வகுப்பையோ அவர் குறிப்பிட்டார் அல்லர். பெரும் ஆறுகள் வந்து கடலுடன் கலக்குங்கால் ஆறுகள் தம் பெயரை இழந்து பெருங்கடல் எனும் பெயரைப் பெறுவது போல் என்னைப் பின்பற்றுவோரும் எந்தெந்த வகுப்பைச் சார்ந்தவராயினும் தம் இல்லத்தையும் பெயரையும் பரம்பரையையும் இழந்து சாக்கிய முனியின் துறவிகள் எனும் பெயரையே பெறுகின்றனர் என்ற பொருள்படப் புத்தர் அந்நூலில் கூறினார்...

## 5

புத்த நூல்கள் கூறும் இலட்சிய புருஷன் முனி அல்லது பண்டிதன் அவன் அன்னத்தைப் போலவும் மயிலைப் போலவும் சமூகத்தின் வாழ்க்கையைத் துறந்து காடுகளிலும் வனங்களிலும் தனி வாழ்க்கையில் ஈடுபட்டு வருபவன்.

கருத்துடையவர்கள் இடைவிடாத முயற்சியுடையவர்கள். அவர்கள் ஒரேயிடத்தில் ஓய்ந்து கிடப்பதில்லை. நீர் நிலையை விட்டுப் பறந்து செல்லும் அன்னங்களைப் போல், அவர்கள் இல்வாழ்வை விட்டுப் போகின்றனர்.

வள்ளுவரின் இலட்சியப் புருஷனோ உலகில் வாழ்ந்து இல்லறத்தில் தன் மனைவி மக்களுடன் அறவாழ்க்கையிலும், அன்பிலும் கல்வியிலும், அரசியலிலும் ஈடுபட்டு வருபவன். ஆதலால் துறவிகளுக்கென்றே எழுதப் பெற்ற தம்மபதம் போன்ற நூல்களுடன் திருக்குறளை ஒப்பிடுவது ஒருவாறு பொருந்துமாயினும், திருக்குறள் தனி நூலாகப் பல்லாற்றாலும் விளங்குவதைக் காண்க.

*அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்*
*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று*

(49)

இல்லறத்திலும் துறவறத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த ஆற்றலை வள்ளுவமும் புத்த நூல்களும் கூறுகின்றன. பிராமணரின் கோட்பாட்டின்படி, தாம் ஆகமங்களைப் பிழையின்றி ஓதியும் வேள்விகளைச் செய்தும் வந்தால்தாம் அந்தணர் என்று கருதப்படுவர் என்று நினைந்தனர். வள்ளுவர் கூறுவது.

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்த தொழித்து விடின்*

(280)

தருமபதமோ கொல்லாமையே சிறந்த நெறியென்றும் உண்மையான கேள்வி உள்ளத்தின் இச்சைகளை வேள்வி செய்வதே என்றும், பொய் கூறாமை கள்ளுண்ணாமை இவற்றை யொழிப்பது சிறந்த அறமென்றும் வற்புறுத்துகின்றது. வள்ளுவரும் மேற்குறித்த அறநெறிகளையே அறிவுறுத்தியுள்ளார்.

*ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று*

(323)

*அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற*
*னுயிர்செகுத் துண்ணாமை நன்று*

(259)

தம்மையே பன்முறை கழுவிக்கொண்டால் அல்லது முடியை நீத்தால் அதனால் தூய்மையை அடைவதாக எண்ணினர் வைதிக வேதத்தார். அகத்தூய்மையே சிறந்த தூய்மை என்று வள்ளுவரும் தருமபதத்தின் ஆசிரியரும் வற்புறுத்துகின்றனர்.

*புறத்தூய்மை நீரா னமையு மகத்தூய்மை*
*வாய்மையாற் காணப் படும்*

(298)

உண்மையான அந்தணர் யாரெனில் கொல்லாமையைக் கடைப்பிடிப்பவர் தம் இச்சைகளை அவிப்பவர் அகத்தூய்மையைக் காப்பாற்றுபவர்.

*அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க் குஞ்*
*செந்தண்மை பூண்டொழுக லான்*

(30)

*தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது*
*வாஅய்மை வேண்ட வரும்*

(364)

*புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை*
*வாய்மையாற் காணப் படும்*

(298)

ஒழுக்கத்தால் சிறந்தவனே அந்தணன் என்று பன்முறை வள்ளுவர் கூறுவதைக் காண்கின்றோம்.

*மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்*

(134)

## 6

திருக்குறளை யாத்த ஆசிரியர் புத்த தருமத்தைத் தழுவியவர் அல்லர் என்பதற்குப் புலால் உண்ணாமையைப் பற்றிப் புத்த சமயத்தில் கடைப்பிடித்த கொள்கையே சான்றாகும். தாம் கொலை செய்யாது பிறர் கொலை செய்த விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் புலாலை உண்ணுதல் கூடும் என்று பண்டு தொட்டு வரும் புத்த கொள்கையை வள்ளுவர் மறுக்கின்றார்.

*அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்*
*பொருளல்ல தவ்வூன் றினல்*

(254)

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*யெல்லா வுயிருந் தொழும்*

(260)

## 7

புத்த துறவிகளும் உலக நோன்பிகளும் கடைப்பிடிக்க வேண்டிய தருமத்தைப் பஞ்சசீலம், அஷ்டசீலம், தசசீலம் என்னும் கட்டளைகளில் காணுதல் கூடும் பஞ்சசீலமாவது:

பிழையில்லாமலும் தீங்கு செய்யாமலும் இருத்தலோடு உயிர்கள் மாட்டு அன்பு பூண்டு ஒழுகுதல்.

பிறர் பொருளை இச்சிக்காமலும், களவு செய்யாமலும் இருத்தல்.

பொய்கூறாமை.

கள்ளுண்ணாமை.

கற்பு நெறியில் இல்லற இன்பத்தைத் துய்த்தல் அ∴தாவது முறை தவறிய சிற்றின்பத்தை நீக்குதல் ஆகியவையாம்.

மேற்கூறிய கட்டளைகள் ஐந்தும் புத்த தருமத்தைத் தழுவும் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம். இக்கட்டளைகள் வள்ளுவருடைய அதிகாரங்களுடன் ஒப்புமை கொண்டிருத்தலைக் காண்க. இப்பஞ்சசீலக் கட்டளைகளுக்கு இன்னும் மூன்று கட்டளை-களைச் சேர்த்தால் அஷ்டசீலக் கட்டளைக-ளாகின்றன. முன் கூறிய ஐந்து கட்டளைகளும் தவறாது கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகள். பின்வரும் மூன்று கட்டளைகளும் அத்துணைக் கண்டிப்பு உடையன அல்ல. அவை,

இரவில் தூய்மையான உணவை அளவோடு உண்ணுதல்.

பூ, சந்தனம், மாலைகள் முதலியவற்றை அணியாமலும் நறுமணங்களை நுகராமலும் இருத்தல்.

தரையில் பாயின் மேல் படுத்து உறங்குதல் ஆகியவையாம்.

இன்னும் இரண்டு கட்டளைகள் துறவிகளுக்கென்று வகுக்கப்பெற்ற சிறப்பான கட்டளைகள். அவை,

இசைப்பாட்டு, கூத்து, நாடகம் முதலிய காட்சிகளைக் கேட்காமலும், காணாமலும் இருத்தல்.

பொன், வெள்ளி முதலியவற்றைத் தொடா

தொடர்தல் 68ம் பக்கம்

திருத்தல் ஆகியவையாம். இப்பத்துக் கட்டளைத் தொகையும் தசசீலம் எனப்படும்.

இக்கட்டளைகளை நோக்குங்கால் புத்த தருமம் உலக வாழ்க்கையை நோய் என்றும் இந்நோய்க்குக் காரணமாக இருப்பது இச்சை அல்லது ஆசை என்றும் கூறி வந்தது. இந்த இச்சையை அறுப்பதே வாழ்க்கையின் நோக்கமாகும். மணிமேகலைத் தொடர்நிலைச் செய்யுளின் பல இடங்களில் இத்தகைய தத்துவம் விளக்கப்பெற்றிருக்கின்றது. 'துன்பம் தோற்றம், பற்றே காரணம். இன்பம் வீடே, பற்றிலி காரணம்'. மணிமேகலை 30.

ஒருவாறு புத்த ஒழுக்க இயல் 'pessimism' எனும் இயற்பண்பினை அடிப்படையாகக் கொண்டது. 'துறவிகளே அனைத்தும் எரிகின்றது' என்று கூறி உலகனைத்தும் பற்றுடன் வாழ்வதால் காமத்தீ பற்றிக் காட்சியளிப்பதாகக் கண்டார் புத்தபெருமான். 'இளமையும் நில்லா யாக்கையும் நில்லா'...... .... வள்ளுவருடைய ஒழுக்க இயலோ 'optimism' என்னும் இன்ப இயற்பண்பினை அடிப்படையாகக் கொண்டது. உலகம் கவர்ச்சியுடைத்து.

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்

*(996)*

வாழ்க்கை இன்பம் பயப்பது,

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலக

*(1103)*

இல்லறம் மேன்மையுடையது,

*அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை ய.்.தும்*
*பிறன்பழிப்ப தில்லாயி னன்று*

*(49)*

## 8

புத்தபெருமானும் அவருடைய துறவிகளும் உலகில் வேண்டிய அன்பையும், நட்பையும் வள்ளுவர் போற்றும் அளவிற்குப் போற்றவில்லை. புத்த தருமம் முற்றிலும் உலக நோன்பிகளால் கடைப்பிடிக்கக் கூடிய தருமம் அன்று. உலக நோன்பிகள் தமக்குரிய கட்டளைகளைக் கைக்கொண்டு வாழ்தலோடு துறவிகளுக்குத் தருமம் செய்தும், தம் பெற்றோரை வணங்கியும், நல்ல தொழிலொன்றைச் செய்தும் ஒழுகுதல் வேண்டும். சிகாலோவாத சுத்த எனும் அறவுரையில் உலக நோன்பிகள் தம் பெற்றோருக்கும், ஆசிரியர்க்கும், துறவிகளுக்கும், மனைவி மக்களுக்கும், நண்பர்க்கும், ஏவலாளர்க்கும், நட்பையும் வணக்கத்தையும், அன்பையும் காட்ட வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். மகா மங்கள சுத்த எனும் கீதத்தில் சான்றோரைத் தழுவுதல், தருமபோதகத்தை உரிய நாட்களில் கேட்டல், துறவிகளுடன் உரையாடல் ஆகியவையெல்லாம் ஒழுக்க இயலில் முன்னேறும் வழிகள் என்று கூறப்பட்டிருக்கின்றன.

புத்த துறவிகளைப் போல் இறப்பு, துன்ப நீக்கத்திற்கு வழியென்று வள்ளுவர் கருதினாருமல்லர் அதனை அஞ்சி ஒழுகினாருமல்லர். இறப்பும் நிலையாமையும் வாழ்க்கையில் இயல்புகளாதலால் அவற்றின் இயல்புகளை உணர்ந்து வாழ்நாள் இருக்கும்போதே அன்பிலும் அறத்திலும், இன்பத்திலும் ஈடுபடுதல் வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

புத்தரின் கற்பனையின்படி எல்லா உயிர்கள் பாலும் சிந்தையாலும் செயலாலும் அன்பு பூண்டு ஒழுகுதல் இன்றியமையாதது. தாய், தன் சேயை உயிர்கொடுத்தும் காப்பாற்றுதல்போல ஒவ்வொருவரும் எல்லா உயிர்கள் பாலும் அளவு கடந்த அன்பைப் பூண்டு ஒழுகுதல் வேண்டும் என்று சுத்த நிபாதத்தில் புத்தபெருமான் கூறுகின்றார். இவ் அன்பை வற்புறுத்துவதோடு உலகம் துக்கமும், துன்பமும் நிறைந்தது என்றும் வலியுறுத்துகின்றார். வள்ளுவர் சான்றோனைப்பற்றித் தீட்டிய குறட்பாக்களில் அவனுக்கு அன்பு இன்றியமையாததென்றும், அவன் எல்லா உயிர்களையும் போற்றுவதுடன் நண்பரைப் பேணியும் எல்லோருடனும் சிரித்து மகிழ்ந்தும் வாழ்தல் வேண்டுமென்றும் கூறுகின்றார்.

*கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு*

*(981)*

*நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்*
*பகலூம்பாற் பட்டன் றிருள்*

*(999)*

*இடுக்கண் வருங்கால் நகுக அதனை*
*அடுத்தூர்வ த.்.தொப்ப தில்*

*(621)*

புத்தருமத்தில் நிலையாமையும், உயிர் நீத்தலும், பல இடங்களில் கூறப்பெற்று, வாழ்க்கையில் ஈடுபடாது அன்னம் போல் பிரிந்து பறப்பதற்கு இச்சிந்தனைகள் துணையாகின்றன. வள்ளுவரோ சாவினைப்பற்றி அத்துணை கருதியவராகத் தெரியவில்லை பிறப்பினை அறுக்கும் வழிகளைக் கூறிவந்தாராயினும் இப்பிறப்போ துன்பத்தையுடையது என்று அவர் வலியுறுத்தவில்லை.

## 9

புத்த தருமம் பல வகுப்பினரைத் துறவிகளாக மடங்களில் ஏற்றுக் கொண்டதன்றிச் சாதி வேற்றுமைகளைப் பொதுமக்களிடம் நீக்குவதற்கு வள்ளுவரைப் போல் திட்டமாகக் கூறவில்லை. மேலும் புத்த பெருமான் பெண்கள் துறவிகளாவதுபற்றி முதலில் விரும்பவில்லை. ஆனந்தரெனும் தம்முடைய நண்பர் பெண்களுக்கும் ஆடவர்போல் தம் சமயத்தில் உரிமைகள் அளிக்க வேண்டுமென்று கேட்டபொழுது, ஆனந்தரே "பெண்டிர் வெகுளியுடையவர், பொறாமையுடையவர், அறியாமையுடையவர்" என்று மொழிந்தார். ஆயினும் பிற்காலத்தில் பெண்களுக்கும் உயரிய ஒரு துறவினை ஏற்பாடு செய்தார். ஆனால் பெண் துறவிகள் எப்போதும் ஆண் துறவிகளுக்குக் கீழ்படிந்தும், அவர்களிடமிருந்து சமய உரைகளைக் கற்றும் வரவேண்டும் என்று விதித்தார் ஆனால் வள்ளுவரோ பெண்களுக்குச் சமநிலை அளித்து காதலிலும் அன்பிலும் புத்த தருமத்தில் இல்லாத உயர்ந்த நிலையை வகுக்கின்றார்.

## 10

புத்தருடைய ஒழுக்க இயலையும் பொதுவாக கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் ஏனைய சமயங்களும் தர்மமாகப் போற்றி வந்த கொள்கைகளையும் பல நாடுகளுக்குப் பரப்ப முயன்றவர் பேரரசர் அசோகர். இந்தியாவில் நிலை நாட்டிய பல தூண்களிலும், பாறைக் கல்வெட்டுக்களிலும் மக்கள் தருமத்தையே கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒழுக்க இயலில் முன்னேறுவதற்குரிய பல வழிகளையும் காட்டியுள்ளார். ஒழுக்க இயலைப் பரப்ப முயன்ற அரசர்களுள் அசோகரே வரலாற்றில் தலைசிறந்தவர். பொதுமக்களும் கல்வி அற்றவரும் ஒழுக்க இயலில் ஈடுபடுதல் வேண்டும் என்றும் தம்முடைய ஒழுக்க இயலைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்கென்று மகா மாத்திரர் என்னும் மாநிலப் பணியாளரை இத்தொண்டிற்கெனச் சிறப்பாக அமைத்தார்.

*'தர்மத்தை நான் பரப்புதல் வேண்டும் தர்மத்தைப் பற்றி மக்களுக்கு அறவுரைகள் நான் கூற வேண்டும். எனவே மாந்தர் இதனைக் கேட்க முன்னேறுவதுடன் தருமத்தில் வளர்ச்சியுறுவார்'.*

கொல்லாமையை யாண்டும் சில நாட்களிலேனும் அனைவரும் கடைப்பிடித்தல் வேண்டும் என்று கூறுவதுடன் பெற்றோர், உறவினர், சுற்றத்தார் முதலிய அனைவரும் ஒருவருக்கொருவர் ஒழுக்க வாழ்க்கையில் ஈடுபடுமாறு தூண்டுதல் வேண்டும் என்றும் பன்முறை கல்வெட்டுக்கள் வழியாகச் சாற்றினார்.

## தமிழ்த்தூது

*'தர்மத்தைப் போன்ற நன்கொடை உலகிலேயே இல்லை. தந்தை, மகன், உடன் பிறந்தான், நண்பன், சுற்றத்தான் ஆகியோரைப் போன்று இது நன்மை பயக்கும். 'இதனை நீ செய்வாயாக' என்ற முறையில் ஒழுக்கத்தில் மேலேறத் தூண்டுதல் வேண்டும்.'*


## முடிவுரை:

இறுதியாக வள்ளுவரின் ஒழுக்க இயலைப் பிறநாட்டு அறிஞரின் ஒழுக்க இயலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பை அளித்த சொர்ணம்மாள் அறக்கட்டளை இயக்கக் குழுவினர்க்கும் நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

வள்ளுவரின் ஒழுக்க இயலை ஆராய வேண்டுமென்று புகுந்ததும் நான் முன் எதிர்பாராத முறையில் இவ்வொப்புமை என் சிந்தனையில் வளர்வதைக் கண்டேன். இன்னும் நேரமும், வேண்டிய நூல்களும் இலங்கையில் உள்நாட்டு அமைதியும் கிடைத்திருந்தால் இன்னும் விரிவாக இவ்வுரைகளை நான் யாத்திருத்தல் கூடும். இவ்வுரைகளுக்கு வேண்டிய முதல் நூல்களை நம் நாட்டின் பெரும் நூல் நிலையங்களில் கூடக் காண்பது அரிது. வருங்காலத்தில் வள்ளுவரின் ஒழுக்க இயலை எபிரேயருடைய ஒழுக்க இயலுடனும், இஸ்லாமிய ஒழுக்க இயலுடனும், தர்மசாஸ்திரங்களின் ஒழுக்க இயலுடனும், சீன ஒழுக்க இயலுடனும் ஒப்பிட்டுப் பயில எண்ணி உள்ளேன். கன்பூஷியஸ் வகுக்கும் ஆசாரக் கோவையில் மகன், தந்தைக்கும், முன்னோர்க்கும் ஆற்ற வேண்டிய கடமையை வற்புறுத்துகின்றார். தமிழ் சான்றோனைப் போல் சுன்சூ (Chun Tsu) என்பவன் பண்டைக்காலச் சீனச் சான்றோனாவன்? விவிலிய இலக்கியங்களுடனும் கெமாரா, மிதிராஷ், சௌஹார் போன்ற எபிரேயருடைய உரைகளுடனும் வள்ளுவர் கூறும் உண்மைகளை ஒப்பிட்டுக் கூறுதல் கூடும். மேலும் வள்ளுவர் அரசியலைப் பற்றியும், பொருளியலைப் பற்றியும், உலக இயலைப் பற்றியும் கூறும் கருத்துக்களை வருங்காலத்தில் ஒப்பீட்டு முறையில் நாம் ஆராய்தல் வேண்டும். அத்தகைய ஆராய்ச்சிக்கு நம் பல்கலைக் கழகம் என்றும் நடுவிடமாக இருத்தல் வேண்டும் என்று பன்முறை வாழ்த்துகின்றேன்.

■ ■ ■

தமிழ்த்தூது



# மொழியுரிமை

## - தமிழ்ப்பேரறிஞர் தனிநாயக அடிகள் -

**இவ்வாண்டு உலகம் எல்லாம் பரவியிருக்கும் தமிழ் ஆர்வலர்கள் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி அவரை நினைவு கூர்கின்றனர்.**

**கிறிஸ்துவப் பணிக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பின் தமிழைத் துறைபோகக் கற்று, தமிழ்மொழியின் தொன்மையையும் செழுமையையும் உலகறியச்செய்து, தமிழ் முனிவராக மலர்ந்தவர் தனிநாயகம் அடிகளார். பட்டங்கள் பலபெற்று, பல மொழிகளறிந்து, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி அர்த்தமுள்ள மாநாடுகளை நடத்தித் தமிழ் செழுமையுறத் துணை நின்றவர். Ambassador for Tamil என இந்தியப் பத்திரிகைகளால் பாராட்டப் பெற்றவர். இவர் எழுதிய ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகளை இன்றைய தமிழ் வாசகர்கள் எல்லோரும் வாசித்தோர் என்றில்லை.**

**தாய் வீடு வாசகர்களுக்காக பேரறிஞர் தனிநாயக அடிகளின் ஆக்கங்களையும் அவர் பற்றிய ஆக்கங்களையும் தொடர்ந்து வெளியிட எண்ணியுள்ளோம்.**

### 1960ம் ஆண்டில் மொழியுரிமை பற்றி ஆற்றிய உரை:

1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் பிரதிநிதிகள் மன்றத்தில் நிறைவேறிய பொழுதும் தமிழ் மக்கள் தம் உரிமையினை எதிர்காலத்திற் பெறக்கூடுமென்று ஒருவாறு எதிர்பார்த்தார்கள். சென்ற நான்கு ஆண்டுகளாக தமிழரின் மொழி உரிமை நிலை இன்னும் வலிமையிழந்து கொண்டே வந்துள்ளது. இன்று அமுலாகும் தமிழ் வழங்கும் சட்டங்கள் நம் மக்களின் உரிமைகளைப் பொருட்படுத்தாது தம் நாட்டிலேயே கீழ்நிலைக் குடிகளாகத் தமிழ் மக்களை ஆக்கிவிட்டது.

இவ்வாண்டில் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையின் வலிமையால் தம்முரிமைகளை நிலைநாட்டாவிடின் எதிர்காலத்தில் அவற்றைப் பெறப்போவதில்லை. எனவே இவ்வுரிமைகளை மீண்டும் பெறுவதற்கு நாம் ஆக்கவேண்டிய பணிகள் சிலவுள.

தமிழ் மொழி உரிமைகளைப் பெற முயலும் இயக்கம் இதுகாறும் வெற்றி பெறாததற்குக் காரணம், தமிழ் மக்களின் உணர்ச்சியின்மை என்றே கூறவேண்டும். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தம்மொழி உரிமைகளைப்பற்றிக் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர் என்று அரசியலார் இன்று அறிவாரெனில் இன்றே வெற்றி காண்போம். நம் இயக்கத்திற்குத் தடைகள் பல உள. அவற்றுள் சில பின்வருமாறு:-

**(அ).** தமிழர் சிலர் அரசியலாரின் ஒற்றராக உழைக்கின்றார்கள். நம் இயக்கங்களில் வலிமையில்லை. ஒற்றுமையில்லையென்று இவர்கள் அரசியலாருக்குக் கூறிக்கொண்டே வருகின்றனர். எனவே, அரசியலாரும் இத்தகைய பொய்யுரையைக் கேட்கவே விரும்புகின்றனர்.

**(ஆ).** தென் இலங்கையிலுள்ள சிலர் அமைதியாகப் பொருள் ஈட்டுவதற்குத் தமிழ் இயக்கங்கள் தடையாக இருக்கின்றனவென்று தமிழ் இயக்கங்களில் ஈடுபடுவோரைத் தம் எதிரிகளென்று கருதுகின்றனர். 'இந்த தொல்லையே வேண்டாம் சிங்களத்தைப் பயின்று இன்னும் பணம் ஈட்டுவோம்' என்பதே அவர்களின் நோக்கம்.

*தொடர்தல் 67ம் பக்கம்*

**(இ).** சிலர் கட்சிகளின் முயற்சியைப் பொருட் படுத்துவதில்லை. தமிழ் மக்கள் உரிமை பெறுவது அவர்களின் நோக்கம் அன்று பிற கட்சிகளின் வழியாகத் தமிழ் மக்கள் யாதொரு வெற்றியும் பெறுதல் ஆகாது என்பதே அவர் களின் சிறந்த நோக்கம். தமிழ் பேசும் இனத் தின் உரிமைப் பற்றிலும் கட்சிப்பற்றே இவர் களுக்குப் பெரிது.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனி ஆற்றல் உண்டு. உனக்கு தமிழ் உணர்ச்சி இல்லை-யெனில் நீ இவ்வியக்கங்களிற்கு இடையூறாக இருக்கின்றாய். இன்றே ஒருவாறு உன் உரி மைகளைப் பற்றி உணர்ந்து உன்னால் இயன்றவரை ஒத்துழை. ஒவ்வொரு காலை யும் இன்று தமிழ் உரிமை வெற்றிக்கு என்ன செய்யப்போகின்றேன் என்றும் ஒவ்வொரு மாலை யும் இன்று தமிழ் உரிமை வெற்றிக்கு என்ன செய்தேன் என்றும் உன் நெஞ்சினைக்கேள்.

## பொருட்செல்வம்:

தமிழ் மக்களிடம் செல்வமில்லாததால் இவ் வியக்கங்கள் வலிமை பெறா என்று கருதுவார் உளர். அவ்வாறு நான் கருதுவதில்லை தமிழ் பல்கலைக் கழகத்திற்கென பத்து இலட்சம் நிதியொன்றை திரட்டுகின்றோம். தமிழ்ப்பேசும் மகன் ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் தந்து உதவ வேண்டும் என்பதே இந்நிதியின் நோக்கம். இவ்வாறு நிதி திரட்டினால் எத்து ணைத் துறைகளில் நாம் முன்னேறுதல் கூடும்! வட கிழக்கு மாகாணங்களின் பொருட்டுறை வளர்ச்சிக்கும் ரூபாய் நிதியொன்றை ஆண் டின் பிற்பகுதியில் நாம் நடத்த வேண்டும். நாம் உறுதி கொண்டால் யாதொன்றும் நம் வளர்ச்சியைத் தடுக்கப் போவதில்லை.

தமிழ் பல்கலைக்கழக இயக்கம் தமிழைக் காப்பாற்றும் இயக்கம். அக்கலைக் கோயிலை எழுப்புமாறு தமிழர் அனைவரும் திரண்டு சேர்க.

சிங்களத்தைப் பயில்வதால் தாம் எதிர் பார்க்கும் பலன்களைத் தமிழ்பேசும் மக்கள் பெறப்போவதில்லை. நம் மொழி உரிமைகளை நிலைநாட்டுவதால் தான் அந்நலன்களைப் பெறுதல் கூடும்.

நான் இருக்கும் நிலையில் அரசியற்றுறை யில் இறங்கி மொழி உரிமைகளுக்காகப் போராடுவதற்கு எனக்கு வாய்ப்புகள் இல்லை. ஆனால் மொழிப் பிரச்சனை அரசியற் பிரச்சனை மட்டுமன்று, அது கல்விப் பிரச்சனை, சமயப் பிரச்சனை, சமூகப் பிரச்சனை. எனவே எத்து றையில் தமிழர் ஈடுபட்டு வந்தாலும் அத்து றைக்கு ஏற்றவாறு தமிழ் மொழி உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு முன் வருதல் வேண் டும். இது காறும் நன்றாக மொழி உரிமைக ளைப் பற்றி உரையாடியுள்ளோம். இனிமேல் அவ்வுரிமைகளைப் பற்றிச் செயல் ஆற்றுவது நம் கடமை.

## மொழியுரிமைகளின் விளக்கம்:

ஈழத் திருநாட்டில் நிகழ்வது வரும் மொழி உரிமைகள் விவாதத்தைப் பற்றியும் தமிழ் மொழியின் உரிமைகள் பற்றியும் தமிழ் மக் கள் முற்றும் அறிந்து தம் உரிமைகளைக் காப்பாற்றும் இயக்கங்கள் அனைத்திலும் பங்கு பெறுதல் வேண்டும் என்று இறைஞ்சுகின்றேன். இவ்வியக்கங்கள் வெற்றி பெறுமாறு ஒத்து ழைத்தலும் பொருளுதவி செய்தலும் வேண் டும். சிங்கள மக்களின் "தனிச் சிங்களம்" என்னும் இயக்கத்தை, தம் அன்பாலும் அறத் தாலும் உண்மையாலும் உறுதியாலும் தமிழ் மக்கள் வெல்லக்கூடும்.

நான் அரசியலிலும் கல்வித் துறைகளிலும் இரு மொழிகள் பன் மொழிகள் இயங்குந் தன்மையை ஒருவாறு கற்றவன். இரு மொழி நாடுகள் பன் மொழி நாடுகளுக்கு நேரில் சென்று இருமொழி அரசியல். பன்மொழி அர சியல் எவ்வாறு தொழிற்படுத்தப்படுகின்றன என்பதை நன்கு நேரில் கண்டறிந்தவன். இரு பதாம் நூற்றாண்டில் மொழியுரிமைகள் பண் புடைய நாடுகள் அனைத்திலும் முற்றும் ஒப் புக்கொள்ளப்பெற்று நிலவுகின்றன. நம் ஈழவள நாட்டில் சிங்கள மொழியுடன் தமிழ் மொழி யையும் அரசின் தேசிய மொழியாகவும் (National Language) ஆட்சி மொழியாகவும் (Official Language) அமைக்காததைப் போல பெருங் கொடுங்கோன்மை வரலாற்றிலேயே இல்லை யென்று கருதுகின்றேன்.

## உலகச் சட்டவழக்கு:

பண்டைக் காலத்தில் தம் மொழிகளை மக்கள் அனைவரும் பேணி வந்தனராயினும் தமிழ் மக்கள் தம் மொழியை தனி முறையில் பேணினர். தமிழர் தம் நாட்டைத் தமிழ் நாடென் றும் ஏனைய நாடுகளை "மொழி பெயர் தேயம்" என்றும் குறிப்பிட்டு வந்தனர். இடைக்காலத் தில் ஐரோப்பாவின் கொடுங்கோலர் கட்டாய மாகத் தம் மொழிகளை அரசியல் ரீதியாக புகுத்தினர் அத்தகைய நாடுகள் விடாமுயற் சியுடன் தம் மொழியுரிமைகளுக்காகப் போராடி வெற்றி பெற்றுக்கொண்டே வந்திருக்கின்றன. எட்டாவது ஹென்றி உவேல்ஸ் நாட்டையும் அயர்லாந்து நாட்டையும் கைப்பற்றிய பொழுது உவேஸ் மொழியையும் ஐரிஸ் மொழியையும் மக்கள் பேசுவது சட்டத்துக்கு முரணென விதித் தான். நானூறு ஆண்டுகளாக உவேல்ஸ் மக்களும் அயர்லாந்து மக்களும் மொழி உரிமைகளுக்காகப் போராடி இந்நூற்றாண் டில் ஒருவாறு வெற்றி கண்டு வருகின்றனர்.

மக்களுடைய அறிவும் உரிமைகளின் உணர் வும் வளர்ந்து கொண்டே வருகின்றன. ஒரு காலத்தில் அடிமைகளை நாட்டில் சட்டத்தால் ஆமோதித்தனர். ஆனால் இன்று அடிமைத் தன்மையை சட்டத்தால் விலக்குகின்றனர். ஒரு காலத்தில் சாதி வேற்றுமைகளை நம் நாட்டில் பாராட்டி வந்தோம். இன்று ஐயந் தியுடன் சாதி வேற்றுமைகளைச் சட்டத்தினால் ஒழித்தல் வேண்டுமென்று திட்டம் வகுக்கின் றனர் ஆட்சியாளர். எனவே 12ம் 13ம் நூற் றாண்டுகளில் நிலவிய மொழியுரிமைகளுக் கும் 20ம் நூற்றாண்டில் விளங்கும் மொழியு ரிமைகளுக்கும் மிக மிக வேறுபாடுண்டு இன்று ஒரு இனத்தாரின் மொழிக்கு சம உரிமைக் கொடுப்பதே முறையாகும். மக்கள் சமகுடிக-ளாயின் ஒரு நாட்டில் சமத்துவம் விளங்கு மாயின் சிறுபான்மையோர் பேசும் மொழிக்கும் பெரும்பான்மையோர் பேசும் மொழிக்கும் சம உரிமை சட்டத்தால் அளிக்கப்படுதல் வேண் டும். இன்றேல் சிறுபான்மையோரைக் குறைந்த குடியுரிமை உடையோராகவும் கருதுவதுவ தற்கு இடமுண்டு. இச்செயலை எதிர்ப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடனென்க.

## பின்லாந்தைப் பின்பற்றலாம்:

நம் சிங்கள நண்பர்கள் தாம் ஏனைய நாடு களின் மொழியுரிமை வழக்கைத் தாம் தழு வப் போவதில்லை என்று கூறுகின்றனர். மற் றெல்லாத் துறைகளிலும் ஏனைய நாடுக ளைப் பின்பற்றும் இவர்கள் மொழியுரிமை ளைப் பற்றி மட்டும் தழுவ விரும்பாததற் குக் காரணம் ஏனைய நாடுகளின் மொழி வழக்கிற்கு இவர்களின் கொள்கை நேர்முர ணாயிருப்பதேயாம். பின்லாந்து நாட்டில் இரு ஆட்சி மொழிகளுள் ஒன்பது விகிதத்தினர் சுவிடிஷ் மொழி பேசுகின்றனர். தொண்ணூறு வீதத்தினர் பின்னிஷ் மொழி பேசுகின்றனர். சுவீடிஷ் மொழி சிறுபான்மையோர் மொழியா யினும் அம்மொழிக்குப் பின்னிஷ் மொழியை பின்னிஷ் மாகாணங்களில் கையாளுகின்ற னர். சுவீடிஷ் மொழியை சுவீடிஷ் மாகாணங் களில் கையாளுகின்றனர். ஆயினும் இருமொ ழிகளும் அரசு மொழிகளாகவும் ஆட்சி மொழி களாகவும் சம உரிமைகளுடன் விளங்குகின் றன. 1949ம் ஆண்டு பின்லாந்து தேசத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தில் 14 ஆம் உட் குறிப்பில் பின்னிஷ் மொழியும் சுவீடிஷ் மொழியும் நாட்டின் மொழிகளென் றும் இவ்விரு மொழிகளையும் அரசு காப்பாற்ற வேண்டுமென்றும் இவ்விரு மொழிகளையும் பாராளுமன்றத்திலும் ஆட்சியிலும் கையாளு தல் கூடுமென்றும் குறிக்கப்பட்டுள்ளது. இங் ஙனமே சுவிட்சர்லாந்து, கனடா, தென்னாபி ரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சைப்ரஸ் முதலிய முப்பது இருமொழிப் பன்மொழி நாடுகளில் சிறுபான்மையோருடைய மொழிக ளுக்குப் பெரும்பான்மையோருடைய மொழி களுடன் சம உரிமைகள் கொடுத்திருக்கின் றனர்.

சைப்பிரஸ் தீவில் உள்ள ஒன்பது இலட்சம் மக்கள் பேசும் இருமொழிகளுக்கும் சமஉரிமை உண்டு. இச்சிறு தீவில் இரு மொழிகள் அர சியல் மொழிகளாயின் இலங்கையில் இருமொ ழிகள் இயங்குவது பொருந்தாதா?



"தமிழ் மக்களுக்குத் தமிழும்
சிங்கள மக்களுக்குச் சிங்களமும்
ஆட்சி மொழிகளாவதையே
நாம் வேண்டுகின்றோம்.
இதுவே குடியாட்சி நீதியாகும்.
இதுவே புத்த தருமமாகும்."

## நமக்கே உரிமை:

சென்ற ஆறு ஏழு நாட்களாகப் பெரும்பான் மையோருடைய மொழியை மட்டும் அரசியல் மொழியாக்க வேண்டும் என்னும் பிரச்சனை யைப் பெரும்பான்மையோரில் சிலர் வற்புறுத்தி வருகின்றனர். இது நீதிக்கும் சட்டத்துக்கும் மக்கள் உரிமைக் கோட்பாடுகளுக்கும் முரண் படும் கொள்கையாகும். மக்கள் அடிப்படை உரிமைகளாகிய மத உரிமை. மொழி உரிமை, பண்பாட்டுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய துறைகளில் சிறுபான்மையோரைத் தாக்கும் விதத்தில் பெரும்பான்மையோர்க் குச் சட்டம் வகுக்க உரிமை இல்லை. சிங் கள மக்கள் தமக்கு அரசியல் மொழியாகச் சிங்களமொழியை அமைக்க முழு உரிமை யுண்டு. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் மொழி யாது என்பதைப் பற்றி முடிவு செய் யத் தமிழ் மக்களுக்கே உரிமை உண்டு. குடியாட்சி என்பது பெரும்பான்மையோரின் ஆட்சிதான். ஆனால் அது பல்வேறு வகுப்பி னரையும் சேர்த்த பெரும்பான்மையோர் ஆட் சியாதல் வேண்டும். மேலும் தனிச் சிங்கள மக்களின் ஆட்சியன்று. தனிச் சிங்கள மக்க ளின் நலன்களுக்காகச் சிறுபான்மையோரின் அடிப்படை உரிமைகளை வேள்வி செய்யும் ஆட்சியுரிமை.

## சமஉரிமை என்றால் என்ன?

உலகில் விளங்கும் மொழியுரிமைகளின்படி இரு மொழிகளுக்கும் அரசு மொழி நிலையும்

# தமிழ்த்தூது

ஆட்சிமொழி நிலையும் அளித்துச் சிங்கள மொழி சிங்கள மக்களுக்கு ஆட்சி மொழி-யெனவும் தமிழ் மொழி தமிழ் மக்களுக்கு ஆட்சி மொழியெனவும் நிறுவுவதே நீதியின் வழியாகும். சம உரிமையெனில் சிங்கள மக்கள் தமிழ் கற்க வேண்டுமென்பதும், தமிழ் மக்கள் சிங்களம் கற்க வேண்டுமென்பதும் அல்ல கருத்து. தமிழ் மாவட்டங்களில் தமிழ் மக்களுக்குத் தமிழும் சிங்கள மக்களுக்குச் சிங்களமும் ஆட்சி மொழிகளாவதையே நாம் வேண்டுகின்றோம் இதுவே குடியாட்சி நீதி யாகும். இதுவே புத்த தருமமாகும். இதுவே இந்த ஐயந்தி வருடத்தில் நம் புத்த நண் பர்கள் தழுவ வேண்டிய தருமமாகும். இதுவே தமிழ் அறமாகும் இதுவே கிறிஸ்தவ நீதியு மாகும்.

## முறையாது?

ஒரு நாட்டில் ஒரு மொழி இரண்டு சதவீகி தம் பேசப்பட்டாலும் கூட அது ஒரு நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் வளங்கப் பெற்றாலும் கூட அதனை அரசு மொழியாகவும் தேசிய மொழியாகவும் நிறுவிச் சமஉரிமை கொடுப் பதே பண்புடைய மக்களின் வழக்கமாக இருந்து வருகின்றது. இவ்வழக்கத்துக்கு முர ணாக நம் சிங்கள மக்கள் நடத்தத் துணி வது ஏன்? தமிழ் மக்களின் உணர்ச்சியையும் உரிமையையும் சிறிதேனும் பொருட்படுத்தாது திட்டம் வகுப்பது எங்ஙனம்? இறுதியாகத் தமிழ் மக்கள் ஈழ நாட்டில் சிங்கள மக்களு டன் சேர்ந்து ஒரு குடையின் கீழ் சம உரி மையுடன் வாழ வேண்டுமாயின். இரு மொழி களுக்கும் அரசு நிலையும் ஆட்சி நிலையும் நம் நாடு கொடுத்தல் வேண்டும். தமிழ் மாண வர் ஆரம்பப் பாடசாலை தொடக்கம் பல்க லைக்கழகம் ஈறாகத் தமிழ் கற்க வாய்ப்பு அளித்தல் வேண்டும். தமிழ் மக்கள் தமிழ் மொழியில் அரசுடன் தம் நடவடிக்கைகளை நடத்த வாய்ப்பளித்தல் வேண்டும். மேலும் தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் அரசினர் ஆதரவு அளித்தல் வேண்டும். இவ்வாறு செய் வதாலே தமிழருக்கும் சம உரிமை இந் நாட்டில் உண்டு என்பதை அரசியலார் நிலை நிறுத்த முடியும்.

## தனிச் சிங்களத்தை எப்படி எதிர்ப்பது?

தனிச் சிங்களத்தைச் சட்டத்தின் அரசியல் கருத்துக்களை அரசியலில் ஈடுபடுவோர் மக் களுக்கு விளக்கிக் கூறுவார்கள். ஆனால் தனிச் சிங்களச் சட்டத்தின் கல்விக்கருத்துக் களைப் பற்றிக் கூறவேண்டியது என்னைப் போன்ற ஆசிரியர்களின் கடமையாகும். நான் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை. ஆயினும் தனிச் சிங்களம் என்னும் திட்டம் கல்வியோ டும் குடியுரிமையோடும் பண்பாட்டுடனும் தொடர்பு கொண்டுள்ளதால் அதனை நன்கு ஆராய வேண்டியது ஈழத் திருநாட்டின் எதிர் கால நலத்தை விரும்புவோரின் கடமையா கும். இந்நகல், தமிழ்க் கல்வியையும் தமிழ் பண்பாட்டையும் தமிழர் தழுவும் திருமறை ளையும் அழிக்கவல்லது என்பதில் சிறிதே னும் ஐயமில்லை. 1967 ஆண்டுக்குப் பின் ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் மட்டுமே வட மாகாணத்திலும் கீழ்மாகாணத்திலும் இருப் பன தவிர, இடை நிலைப் பாடசாலைகளும், உயர் நிலைப் பாடசாலைகளும், பல்கலைக் கழக கல்வியும் இருக்க மாட்டா என்பதே இந்நகலின் திட்டமாகும்.

நம் எதிர்ப்பை எவ்வாறு நிகழ்த்த வேண்டு மென்பதை ஆராய்வோம். முதன் முதலில் இந்நகலை எதிர்க்கும் இயக்கத்தில் ஈடுபடு வோர் அனைவரும் பின்வருமாறு தொண்டு புரிதல் வேண்டும்.

தமிழர் முழுமுதற் கடவுளிலும் அவரது திரு-வருளிலும் அத்தோன்றாத் துணையின் வல் லமையிலும் நம்பிக்கையுடையவராதலால் நாட்டின் நலத்துக்காகவும் தமிழ் மொழியின் வெற்றிக்காகவும் இறைவனை வேண்டி வரு தல் வேண்டும். இவர்கள் ஒவ்வொரு நாளும் பத்துப் பதினைந்து நிமிடங்கள் தியானம்

தொடர்தல் 68ம் பக்கம்

## தமிழ்த்தூது

செய்தல் வேண்டும். தத்தம் திருமறைகளின் நூல்களைச் சிறிதேனும் தினமும் படித்தல் வேண்டும். தியானத்தாலும் வழிபாட்டாலும் இவர்கள் உள்ளத் தூய்மையடைந்து புதிய தூய ஆற்றலுடனும் இவ்வியக்கத்தில் ஈடுப டுவார்கள்.

சிங்கள மக்கள்பால் சிந்தையாலும், செயலா லும் அன்பும் அறமும் காட்டி அவர்களுடன் ஒழுகவேண்டும். அவர்களுக்குச் சிறிதேனும் சிந்தையாலோ செயலாலோ தீமை செய்த லாகாது. அவர்கள் இயற்கையில் நற்குண மும் நற்பண்பும் படைத்தவர்கள் அவர்களுட் பலர் சிறுபான்மையோரைப் பாதிக்கும் இது போன்ற நகல்களை விரும்புவதில்லை. ஏனையோர் பெரும்பான்மையோரின் ஆட்சி யென்றால் தனி சிங்கள ஆட்சியாதல் வேண் டுமென்று நம்புகின்றனர். அவர்கள் அறியாது செய்வதை நாம் பொறுத்தல் வேண்டும். அதுவே தமிழ் அறம்.

ஒவ்வொரு சிற்றூரிலும் பேரூரிலும் ஆசிரியர் களும் பெற்றோர்களும் மற்றுமுள்ளோரும் கூடி நம் உரிமைகளைப் பற்றியும் இத்திட் டத்தின் கல்விக் கருத்துக்களைப் பற்றியும் உரைகள் நிகழ்த்த வேண்டும்.

இத்திட்டத்தினை எதிர்ப்பதாகத் தம் பிரதி நிதிக்கும் பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலை வருக்கும் கூட்டங்களின் தீர்மானங்களை அனுப்புதல் வேண்டும். இக்கூட்டங்கள் வட மாகாணம் கீழ்மாகாணங்களில் மட்டுமல்லாது ஏனைய மாகாணங்களிலும் பெரும்பான்மை-யோருடைய சீற்றத்தைத் தூண்டிவிடாது நடைபெறுதல் வேண்டும். தனிச் சிங்களம் எனும் நகல் நம்மைப்பாதிக்கும் இத்துணைக் குறிப் புகளை உள்ளடக்கி வந்ததற்கு காரணம் தமிழ் மக்கள் இது பற்றி எதிர்ப்புக் கூறாததே யாகும். குடியாட்சியில் பிரதிநிதிகள் மக்க ளின் கருத்துக்களை இத்தகைய கூட்டங் களால் தான் அறிகின்றனர் மக்கள் அனுப் பும் தந்திகளிலிருந்தும் செய்திகளிலிருந்துமே பிரதமர் அவர்களது எதிர்ப்பை நன்கு அறிய வருவார். எதிர்ப்பு இல்லையென்றால் மக்க ளுக்கு இத்திட்டத்தில் உடன்பாடு உண் டென்று கருத இடமுண்டு.

நீதியும் உண்மையும் தமிழ் மக்கள் சார்பில் இருக்கும்போது நாம் உறுதியாக உண்மை களை எடுத்துக் கூறவேண்டும். இத்திட்டத் தின் உட்கருத்துகள் பல. இதை அமுலுக் குக் கொண்டு வருவாரேயாயின் தமிழ் பத் திரிகைகளுக்கும் வானொலி நிகழ்ச்சிகளுக் கும் தமிழ் கலைகளுக்கும் தமிழர் தழுவும் சமயங்களுக்கும் எழுத்தாண்மைக்கும் இட மிராதென்பது திண்ணம். இது காறும் இராத மொழிக் கொடுங்கோன்மையும் பண்பாட்டுக் கொடுங்கோன்மையும் இத்திட்டத்தின் பயனா வன. நம் நாட்டை ஆண்ட ஆங்கிலேயர், ஒல்லாந்தர், பறங்கியர் தம் கருத்திலும் கொள் ளாத நோக்கங்களையும் கொடுமைகளை யும் இத்திட்டம் கருதுகின்றது. அயர்லாந்து தேசத்திலும் உவேல்ஸ் நாட்டிலும் 16-ம் நூற் றாண்டில் 8 வது ஹென்றி ஐரிஸ் மொழியை யும் உவேல்ஸ் மொழியையும் அழிக்க நிறை வேற்றிய சட்டங்கள்போல் 20-ம் நூற்றாண் டில் இத்திட்டம் உருப்பெற்றிருக்கிறது. மக்க ளின் உரிமைப்போராட்டமும் சுதந்திர தாக மும் சமத்துவ மனப்பான்மையும் இந்நான்கு நூற்றாண்டுகளில் எத்துணை வளர்ந்துள்ளது என்பதை இத்திட்டம் அறிந்திலது போல் தோன்றுகிறது.

### சட்டம் நிறைவேறினாலும் போராட்டம் ஓயக் கூடாது:

தனிச்சிங்கள மசோதா சட்டமாவது திண்ண மாயினும் அச்சட்டத்தைப் பொருட்படுத்தாது தமிழ் மொழியின் உரிமைகளனைத்தும் மீண் டும் பெறுமாறு அயராது உழைத்தலே தமிழ் மக்களின் கடமை.

இதுகாறும் செல்வாக்குடன் வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்குப் பல்வேறு இன்னல்கள் நிகழ்ந்திருப்பது அவர்களுக்கு ஒற்றுமையை யும் புத்துணர்ச்சியையும் அளித்திருக்கின்றது.

தமிழ் மக்கள் எவராயிருப்பினும் முஸ்லிம்கள் இந்துக்கள். கிறிஸ்தவர் முழுமுதற் கடவுள் ஒருவரை வழிபட்டுவரும் வகுப்பினர். எனவே அத்தோன்றாத் துணையின் திருவருளை நம் அறப்போர் வெற்றிபெறுமாறு நாள்தோறும் வேண்டி வருதல் வேண்டும். இறைவனின் துணையிருந்தால் நாம் அடைய முடியாத வெற்றி ஒன்றேனுமில்லை தியானத்தாலும் வழிபாட் டாலும் இவ்வறப்போரில் தூய்மையடைந்து உழைப்போம்.

இச்சட்டத்தை தமிழ் மக்கள் சத்தியாக்கிரக முறை யில் எதிர்க்க முழு உரிமையுண்டு. சத்தியாக் கிரகத் துறையில் இதனை எதிர்க்கும் வழி வகைகளை நம் அரசியற் தலைவர்கள் விரை வில் கூறுவர். அவர்களுடைய திட்டங்களை நம் மக்கள் அனுசரித்தல் வேண்டும். 'தனிச் சிங்களம் சட்டமாகி விட்டது. இனிச்செய்வது யாதொன்றுமில்லை' எனும் மனப்பான்மை கோழையின் மனப்பான்மையாகும். பல்லாயி ரம் ஆண்டுகளாகத் தம் மீது படையெடுத்த மாற்றாரைப் புறங்கண்ட தமிழன்னை நம்மிடம் வீரத்தையும் ஆற்றலையுமே எதிர்பார்க்கின் றாள்.

மொழியுரிமைகளுக்காகப் போராடிய மக்களின் வரலாற்றை ஆராயும்போது அவர்களுடைய வரலாறு நம்முடைய எதிர்கால வாழ்க்கையில் அஞ்சாது உழைப்பதற்குப் பெரும் தூண்டுத லாக இருக்கின்றது. உவேல்ஸ் மக்களின் மொழியைச் சிதைக்க வேண்டுமென்ற எண் ணத்துடன் எட்டாவது ஹென்றியும் அவனைத் தொடர்ந்து வந்த மன்னவர்களும் படையெடுத் தனர். 400 ஆண்டுகளாக 'உவேல்ஸ்' மக்கள் பலர் தம்முடைய பண்டைய சில உரிமைக ளைப் பெற்று விளங்குகினர். இன்னுஞ் சில ஆண்டுகளில் உரிமைகளனைத்தையும் பெற்று விளங்குமென்பது திண்ணம். இவ்வாறே 'பெல் ஜிய நாட்டில்' பௌமிஷ்மொழி பேசுவோர் 100 ஆண்டுகளாகப் போராடி இறுதியில் முழு உரிமைகளையும் பெற்று இன்று இன்பமாக வாழ்கின்றனர். பின்லாந்தில் 700 ஆண்டுகள் போராடிய பின் இன்று பின்னிஷ் மொழி அரசியல் மொழியாக திகழ்கின்றது. எனவே மொழியுரிமைகளுக்காகப் போராடிய மக்களின் வரலாற்றை இன்னும் பெருகக் கூறலாம்.

தமிழ்மொழி ஈழத்தின் மொழி. பல நூற்றாண் டுகளாக ஈழத்தில் தனியாட்சி புரிந்த மொழி தமிழ். தனியரசின் மக்கள் தமிழ் மக்கள். எனவே தமிழ் மொழியும் சிங்கள மொழியைப்போற் சம உரிமை பெறுதல் வேண்டும்.

### தமிழ் மக்களின் கடமை:

ஈழத்தமிழ் மக்களனைவரும் இன்று தொடங் கித் தமிழ் இலக்கியங்களையும் தமிழர் வர லாற்றையும் புத்துணர்ச்சியோடு கற்று வருவர் என்பது திண்ணம். பண்டைக்காலத்தில் இல் லாத தமிழன்பு எதிர் காலத்தில் நம்முள்ளங் களில் பெருக்கெடுக்கும் என்பது ஒருதலை. தமிழ் மாணவர் தாழ்வு மனப்பான்மையாதொன் றும் வளர்க்காது தமிழ் மொழியின் பெருமை யையும் தாம் காட்ட வேண்டிய வீரத்தையும் வளர்க்குமாறு நாம் கல்வித் துறையில் ஈடுபட வேண்டும். அரசியல்வாதிகள் அரசியற்றுறை யிற் சம உரிமைகளைப் பெற முயலுங்கால் கல்வித்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் சமூகத்துறையிலும் தொண்டாற்றி வருபவர் கள் புது இயக்கங்களை உண்டாக்கித் தமிழ் மக்களுடைய முன்னேற்றத்துக்காகத் திட்டங் கள் வகுத்தல் வேண்டும்.

சிங்கள அரசியலார் தமிழர் பண்பாட்டை வளர்ப்பாரென்று எதிர்பார்ப்பது வீணாகும். அவர்கள் தேசியப் பண்பாடென்ற கூறுவது சிங்களப் பண்பாடேயாகும். தேசிய இயக்க மென்பது சிங்கள இயக்கமேயாகும். தேசிய மொழி என்பது சிங்கள மொழியேயாகும் அவர்கள் ஏதோ நம்மை இலங்கைக்கு வந் துவிட்ட அகதிகளென்றே கருதுகின்றனர். தமிழ் மக்களே தமிழ் துறைகளனைத்தையும் காப்பாற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. தமிழ் மக்களின் முயற்சியை வருங்காலத்தின் வரலாறு புகழ்ந்து கூறும்.

அரசியற்துறையொழிந்த ஏனைய துறைகளில் உழைப்பதற்காகத் தமிழ் பல்கலைக்கழக இயக்கம் என்ற பெயருடன் ஒரு இயக்கம் உருவாகி வருவது நமக்குப்பெரும் மகிழ்ச் சிக்குரிய செய்தியாகும். அவ்வியக்கம் தமிழ் பேசும் மக்களின் கல்வித்துறை, பண்பாட்டுத் துறை, பொருளியற்றுறை ஆகிய இம்முத்து றைகளிலும் ஆராய்ச்சியும் அலுவலும் ஆற்ற முன்வந்துள்ளது. தமிழ் அரசியல் இயக்கங் களை ஆதரிப்பதுபோல் இவ்வியக்கத்தையும் நம் மக்கள் ஆதரிப்பார்களாக.

தமிழ் மொழியின் உரிமைப்போர் இன்று தான் ஆரம்பித்துள்ளது. இப்போரில் வெற்றி காண மட்டும் தமிழ் மக்கள் அனைவரும் அணிவ குத்து ஆடவரும். பெண்டிரும் மாணவரும். முதியோரும் நாள்தோறும் இப்போரில் பங்கு பற்றி ஒத்துழைப்பது கடமை.

### ஒற்றுமை வேண்டும்:

சென்ற சில திங்கள்களாக வடமாகாணம், கீழ்மாகாணங்களில் சொற்பொழிவுகள் ஆற் றிய பொழுது நம் ஈழத்தமிழ் நாட்டின் பொரு ளியல் சமூக முன்னேற்றங்களைப் பற்றி அறி ஞருடன் கலந்து உரையாட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. மேலும் வவுனியா தொடங்கி ஆனையிறவு ஈறாக இடையேயுள்ள நிலப்ப ரப்பின் எதிர்கால முன்னேற்றத்தையும் உணர்ந் தேன்.

கோயிலும் சுனையும் உள்ள கடல் சூழ்ந்த திருமலையின் குடாவையும் பாறையையும் அதனைச் சுற்றியிருக்கும் நீர்ப்பரப்பு நிலப்ப ரப்பின் அழகையும் கண்டு வியந்தேன். கீழ் மாகாணத்தில் கடலுடன் கலக்குமுன் மகா வலி கங்கையின் இரு மருங்கும் தன் சேயைப் போல் நீரூட்டும் பச்சைக் கழனிகளைக் கண்டு மகிழ்ந்தேன். மட்டக்களப்பின் தென்பாகத்தில் காரைதீவு அக்கரைப்பற்று முதலிய இடங்க ளில் முஸ்லிம் மக்கள் பொன்னிறக் கதிர்களை வெட்டி, கட்டிக்குவிப்பதைக் கண்டு களித்தேன்.

சென்றவிடமெல்லாம் தமிழ் பேசும் மக்கள னைவரிடமும் புது உணர்ச்சியும் புது ஆர்வ மும் தோன்றியது. தனிச்சிங்களம் சட்டமானதும் தமிழ் மக்களுக்கும் முன்பு இராத உணர்ச்சியும் ஒற்றுமையும் தோன்றிற்று. தமிழ் பேசும் இனம் (Nation Tamil) என்னும் புத்துணர்ச்சி பெருக் கெடுத்து ஓடுவதைக் கண்டேன்.

எதிர்காலத்தில் மொழி செல்வாக்குடன் வளர் வதற்காகத் தமிழ் பேசும் மக்கள் சிறப்பாக வாழும் மாவட்டங்களை நாம் இன்றே பல துறைகளிலும் சீர்திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

நம் மாகாணங்களில் காடாகக்கிடக்கும் இடங் களை நாடாக்குவது நம்முடைய கடமை. தென் மாகாணங்களில் செல்வமுள்ள தமிழர், வடமாகாணம் கீழ் மாகாணங்களில் நிலம் வேண்டி நெல், கரும்பு முதலிய பயிர்களை விளைத்து உழவுத்தொழிலும் தோட்டத் தொழி லும் சிறக்கச் செய்வதால் ஈழத் தமிழ் நாட் டில் பொருளியற் துறைகளில் நாம் முன்னே றுவதற்கு வழி வகைகளை காண்பர். தென் மாகாணங்களில் தங்க விருப்பமில்லாத தமி ழர் ஒன்று சேர்ந்து வடமாகாணம் கீழ் மாகா ணங்களில் புதுநகர்களை அமைத்து ஈழத் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணை புரியக்கூடும். வட மாகாணம் கீழ் மாகாணங் களில் கூடிய விரைவில் தமிழ் மக்கள் குடி-யேறுவது நம் எதிர்கால நலன்களுக்கு இன் றியமையாதது.

'மலேயா போன்ற பிறநாடுகளில் இருந்து இலங்கைக்குத் திரும்பும் தமிழர் நம் மாகா ணங்களில் வாழ்ந்து தாம் ஈட்டிய பொருளை இங்கு நன்முறையில் செலவு செய்வது நமக் கும் பெருந்துணையாகும். தென் மாகாணங் களில் வாழும் தமிழர் அனைவர்க்கும் வட மாகாணம் கீழ் மாகாணங்களில் நிலமும் பொருளும் முதலும் இருப்பது நன்று. யாழ்ப் பாணக் குடா நாட்டிலும் தீவுகளிலும் மக்கள் தொகை பெரிதாக இருப்பதால் அங்குள்ள வர்களுடன் பலர் வவுனியா திரிகோணமலை முல்லைத்தீவு, முருங்கன், மாங்குளம், கிளி-நொச்சி முதலிய இடங்களுக்குச் சென்று குடியேறுவது நலமாகும். யாழ்பாணக் குடா நாட்டை விட்டு அகல்வதற்கு அஞ்சுவது தமி ழினத்துக்குப் பெருமையன்று. கல்லோயா, கந்தளாய் முதலிய திட்டங்களுக்குத் தமிழரை அழைத்த போது அங்கு செல்லப் பலர் விரும் பவில்லை.'

நாம் பண்டைக்காலத்தில் சாதிச் சமய வேற் றுமைகளை எத்துணை பாராட்டி வந்திருந் தாலும் இன்று நாம் அத்தகைய வேற்றுமை-களை ஒழித்து, தமிழ் மொழி நம்மை இணைத்து நிலவும் ஒற்றுமையை வளர்த்தல் வேண்டும். இவ்விருபதாம் நூற்றாண்டில் மக்களின் உரி மைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களனைவரும் சம நிலையுடையவர்களும் உடன் பிறந்தாரும் என்று நம் வாழ்க்கையி லும் கூட்டுறவு அமைப்பிலும் நாம் காட்டி வருதல் நம் கடமையாகும். மக்களை பொது மன்றத்திலிருந்தும் கல்விக் கழகத்திலிருந்தும் அகற்றிட வைப்பது தமிழ்ப் பண்பாடன்று. தமிழர் மரபுமன்று தமிழருள் பெரும்பான்மை யாராய் இருப்போர் தமிழருள் சிறுபான்மை-யோராக இருப்பவருக்குச் சிறப்பான முறை யில் நட்பும் அன்பும் ஆதரவும் காட்டுதல் வேண்டும்.

இலங்கையின் தலைநகரிலிருந்து அகன்றிருப் பதாலும் பல இனத்தாருடன் தொடர்பு ஓரளவு சிறிது குறைந்து இருப்பதாலும் நம் மாகா ணங்களில் பரந்த விரிந்த மனப்பான்மை குன் றியிருத்தல் கூடும். எனவே சைவ, வைஷ்ணவ, முஸ்லிம், கத்தோலிக்க, புறட்டஸ்தாந்து என்று பிரிந்து தொண்டாற்றும் மனப்பான்மையும் கொழும்புத் தமிழர், மலைநாட்டுத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், யாழ்பாணத் தமிழர் என்று வேற்றுமை பாராட்டுவதும் நம் இனத் திற்கு நன்மை பயக்காத முறைகளாகும். நம் இனத்திற்கு ஒற்றுமையும் உறுதியும் இருப்பதற்காக நம் எழுத்தறிஞர்களும் மேடைக் கலைஞரும் ஒத்துழைத்தல் வேண்டும். நமக்கு புத்தம் புதிய பாடல்கள் வேண்டும், சின்னங்கள் வேண்டும், சிலைகள் வேண்டும், நமக்கென கலைக்கழகங்கள் வேண்டும், பல்கலைக்கழ கம் வேண்டும்.

நன்றி: தனிநாயகம் அடிகள் நினைவுமலர்
- கனடா

■ ■ ■



> "இனத்திற்கு ஒற்றுமையும் உறுதியும் இருப்பதற்காக நம் எழுத்தறிஞர்களும் மேடைக் கலைஞரும் ஒத்துழைத்தல் வேண்டும். நமக்கு புத்தம் புதிய பாடல்கள் வேண்டும், சின்னங்கள் வேண்டும், சிலைகள் வேண்டும், நமக்கென கலைக்கழகங்கள் வேண்டும், பல்கலைக்கழகம் வேண்டும்."

## தமிழ்த்தூது

# வண. தனிநாயகம் அடிகளார்

மதுரையில் நடந்தேறிய ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் பொழுது தமிழின் தனித்துவப் பொழிவிற்கு, தலைவர்கள் எனக் கருதப்பட்ட, மறைந்த தமிழ் அறிஞர் உருவச் சிலைகளை எழுப்பினர். அவ்வாறு நினைவு கூரப்பட்டவர்களுள் கத்தோலிக்கத் திருச்சபைக் குருவானவர்களில் ஒருவராகிய வணக்கத்திற்குரிய பிதா சேவியர் தனிநாயகமும் ஒருவர். சைவம் சாராத பிறமதத்தினரான தமிழறிஞர்களையும் தமிழரல்லாத பிறமதத்து தமிழறிஞர்களையும் விதந்து கூறுவதற்கு இலக்கிய வரலாற்றின் ஆய்வு நெறிகளை நன்கு அறியாதவர்களிடையே ஒருவாய்ப்பாடு உண்டு. மதத்தின் பெயரைக் கூறி (அதாவது பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்று குறித்து) அதனைத்தொடர்ந்து “தமிழுக்காற்றிய தொண்டு” என்று கூறுவதே அந்த வாய்ப்பாடு.

கிறிஸ்துவம் தமிழுக்காற்றிய தொண்டுகளில் ஒன்றாக (ஒருவராக) தனிநாயகத்தைக் கொள்வதோ, தமிழரால் கிறிஸ்துவத்தை வளர்த்தவர் என்று தனிநாயகத்தைக் கொள்வதோ தவறானது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையே. தனிநாயக அடிகளின் பங்களிப்பு இவை யாவற்றிற்கும் அப்பாற்பட்டது. இந்தக் குறுகிய நோக்குகளைவிட உயர்ந்தது. அவர் இன்றைய சர்வதேச நிலையில் உலகின் ஒருமைப்பாட்டிற்கும் முழுமைக்கும் (அதாவது உண்மையான சர்வதேசத்திற்கு) தமிழ்ப் பண்பாடு எவ்வாறு உதவியுள்ளது என்பதை சாஸ்திரீய ஆராய்ச்சிவழி நின்று நிலை நிறுத்தியதற்கு உதவியவராவார். எந்நாட்டிற்கும் பொதுவான தென்னாட்டுப் பண்புகள் யாவை? அவற்றை இனங்கண்டறிவது எவ்வாறு என்பன போன்ற துறைகளில் அவர் ஆராய்ச்சியினை ஊக்கியும், அத்தகைய ஆராய்ச்சிகளின் களமும் தளமுமாக அமையக்கூடிய நிறுவனமொன்றை நிலைநிறுத்தியும் பணிபுரிந்தார்.

அவர் ஆசாரம் தவறாத அருட்குருவாக விளங்கியவர். ஆனால் அவரைத் தமிழ் மக்கள் ஒரு (யாழ்ப்பாணத்து பேச்சு வழக்கிற் கூறினால்) வேதக்காரராகக் காணவில்லை. தமிழின் தோற்றமாக, தமிழ்ச்சால்பின் தொழிற்பாடாகக் கண்டார்கள். இது கத்தோலிக்கத்தின் உலகப் பொதுமையான நிலைக்கும் (‘கத்தோலிக்கோஸ்' என்ற கிரேக்கச் சொற்றொடரின் கருத்து முழுமையும் தொடர்ந்து உள்ளடக்கியது என்பதாகும்) தமிழ்ச் சிந்தனை வளத்தின் சர்வதேச வியாபகச் சாத்தியப்பாட்டுக்கும் கிடைத்த பெரு வெற்றியாகும்.

தனிநாயகம் என்ற தனி மனிதனால் இவ்வெற்றியை எவ்வாறு ஈட்டமுடிந்தது என்பதற்கான பதிலைக் காண முனையும் பொழுது காலமும் கருத்தும் இணைவதன் அத்தியாவசியத்தை உணர்ந்து கொள்ளலாம். கத்தோலிக்க மதத்தின் தாராண்மைச் செல்நெறியின் தொடர்ச்சியையும் அதன் அடிப்படையான மனிதாயதப் பண்பின் அபிவிருத்தியையும் வேண்டி நின்றார் என்பது அவர் தெய்வ மறைக் கலாநிதிப் பட்டத்திற்காக எழுதிய நூலின் மூலம் தெரிய வருகின்றது.

கிரேக்க ரோமப் பண்பாடு பற்றி வரன்முறையான பயிற்சியும் வரலாறு பற்றிய ஆர்வமும் பெற்றிருந்த தனிநாயக அடிகளார், மேனாட்டுப் பண்பாட்டின் உயர்விழுமியங்களை நன்கு அறிந்து அத்தகை சிந்தனைகளும் சிந்தனைக்கான பயிற்சியும் தமிழ்ச் சூழலில் எவ்வாறு வளர்ந்தன என்பது பற்றித் தெளிவான பல ஆய்வுகள் செய்தார். மேலும் கிறிஸ்துவ மதக் குருமார் பலரால் போற்றப்பட்ட மானிடவியற் பிரயோகங்கொண்டு, தமிழ்ப்பண்பாட்டை சாஸ்திரீய பூர்வமாக தெளிவுபடுத்தவும் விரும்பினார். இவையாவும் அவரின் ஆளுமையையும் அறிவையும் பற்றிக் கூறுவன. ஸ்தாபன ரீதியாக அவர் நிலை நாட்டிய ஒரு நிறுவனமே அவரைப் பற்றிய இவ்வாய்வுகளை நாம் செய்ய வேண்டிய அத்தியாவசியத்தை ஏற்படுத்துகின்றன.

1946ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதியன்று புதுடில்லியில் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அறிஞர்களின் கூட்டம் ஒன்று கூடியது. அக்கூட்டத்திலேதான் தமிழாராய்ச்சிக்கான சர்வதேச சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இது தோன்றுவிக்கப்பட வேண்டியதன் அத்தியாவசியத்தை உணர்ந்திருந்த மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்களுடன் ஏற்கனவே தொடர்பு கொண்டு இதற்காக முன்னின்று உழைத்தவர் தனிநாயக அடிகளாவார்.

இந்த ஆராய்ச்சி இந்திய வரலாற்றில் ஆய்வு முறைகளில் பெரும் பிரச்சினையாக விளங்கிய ஒன்றுக்குத் தீர்வுகாணுவதற்கான வன்மையான களத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தியப் பண்பாட்டினதும் நாகரீகத்தினதும் உருவாக்கத்தில் இடம்பெறும் “ஆரியம் சாராத கூறுகள் யாவை. இவற்றின் உருவாக்கத்தில் அவை பெறும் முக்கியத்துவம் யாது என்பது இந்திய வரலாற்றின் பிரச்சனையாக மாத்திரமல்லாது தென்னாசிய வரலாற்றின் ஓர் முக்கிய பிரச்சனையாக இருந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிற் கொள்ளப்பட்டது போன்று கங்கைக் கரையும் சமஸ்கிரத மொழியுமே இந்தியப் பண்பாட்டுக்கு அச்சாணி என்கின்ற கருத்தைத் தொடர்ந்து பேணுவதற்கு அறிவு பூர்வமான சாஸ்திரீய ஆராய்ச்சிகள் இடமளிக்கவில்லை. இந்தியப் பண்பாட்டு உருவாக்கத்தில் திராவிடக் கூறுகளுக்கும் முக்கிய இடமுண்டு என்பது வரவர வலியுறுத்தப்படலாயிற்று. இந்த ஆராய்ச்சி செல்நெறியை வளர்ப்பதற்கு திராவிட மொழிக் குடும்பத்தின் மிகப் புராதன இலக்கியச் சான்றும் வரலாற்றுத் தொடர்ச்சியுடையதுமான தமிழை மையமாகக்கொண்டு நிகழ்த்தப்படும் ஆராய்ச்சிகள் பயன்தரும் என்ற எண்ணத்துணிவு பல அறிஞர்களிடையே வளரத் தொடங்கிற்று. பிலியோசோ பறோ, எமனோ, முதல் சட்டர்ஜி, நொபணுனு, கறசுஷிமர் வரை பல அறிஞர்கள் தங்களின் ஆராய்ச்சிகள் இவ்வழிச் செல்வதின் அத்தியாவசியத்தை உணர்த்தினார்.


> இன்றைய சர்வதேச நிலையில்
> உலகின் ஒருமைப்பாட்டிற்கும் முழுமைக்கும்
> தமிழ்ப் பண்பாடு எவ்வாறு உதவியுள்ளது
> என்பதை சாஸ்திரீய ஆராய்ச்சிவழி நின்று
> நிலை நிறுத்தியதற்கு உதவியவர்
> தனிநாயக அடிகள்.

இந்த ஆராய்ச்சித் தேவைக்கு வேண்டிய உருவ அமைதியை அடிகள் வழங்கினார்கள். உலக ஆராய்ச்சியாளர் ஒருங்கிணைந்து உழைப்பதற்கான அடித்தளமாக விளங்கும் அத்தியாவசிய ஆராய்ச்சி நெறியைப் பேணினார். இத்தகைய ஒரு நிறுவனத்தின் இயங்கு சக்தியாக விளங்கக்கூடிய தகைமைகள் யாவும் அவருக்கிருந்தன. இது ஆராய்ச்சி நிலையில் நிறுத்தப்பட்ட ஒரு சாதனை. இந்த ஆராய்ச்சிச் சாதனையில் சமூக அரசியல் முக்கியத்துவம் இந்திய சுதந்திரத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட மூன்றாவது உலக விழிப்பானது ஆசிய, ஆபிரிக்க நாடுகளையும் தேசிய இனங்களையும் பின்னிப் பிணைந்து நின்றது. இந்த விழிப்பின் காரணமாக சுதந்திர தாகம். இறைமை, வேட்கை தேசிய இனங்களிடையே வளர்ந்தது. தமிழர்கள் கணிசமான தொகையினராக வாழும் பிரதேசங்களில் அவர்களுக்கு வேண்டிய இனக்கணிப்பு இருக்கவில்லை. சிறு தொகையினராக வாழ்ந்த இடங்களில் அவர்களால் தமது தனித்துவத்தைப் பேணுவதே பிரச்சனையாகவிருந்தது. முதலாவது பிரச்சனையை இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் இரண்டாவது பிரச்சனையை மலேசியா, மொரிசியஸ் போன்ற நாடுகளிலும் காணக் கூடியதாக இருந்தது. இந்தியா, இலங்கையில் இது முக்கிய தேசியப் பிரச்சனையாக விளங்கிற்று. மற்றைய இடங்களில் பண்பாட்டியக்கமாக விளங்கிற்று.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிப்போக்கு இந்த இறைமை வேட்கைக்கும் தனித்துவத் தாகத்திற்கும் பெரிதும் உதவிற்று. இது தவிர்க்க முடியாத ஒரு அம்சமாக விளங்கியது. தமிழின் தனித்துவத்தை நாடும் சமூக, அரசியல் நிறுவனங்கள் இந்த நிறுவனத்தை ஆதரித்தன. அண்ணாத்துரை முதல் டத்தோ சம்பந்தன் வரை செல்வநாயகம் முதல் சிவஞான கிராமணி வரை பல அரசியல் வாதிகள் வரை இதனுடன் சம்பந்தப்பட்டனர். இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழிற்பாட்டில் தங்கள் சமூக அரசியல் வெற்றிக்கான அத்தியாவசியங்களைக் கண்டனர்.

அறிஞர் முதல் அரசியல்வாதிகள் வரை ஒவ்வொருவரிடத்தும் அவரவர் தகுதிக்கேற்ப இந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வேண்டிய உதவியினைப் பெற்றுக்கொண்டு, அவர்களது உட்பூசல்களில் தான் சிக்குண்டு விடாமல் நிறுவனத்தை மேற்கொண்டு நடத்திச் செல்லும் ஆளுமை தனிநாயக அடிகளிடத்திலிருந்தது. இதனால் அவர் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் தமிழின் சின்னமானார். தனிநாயக அடிகளில் தமிழன் எதிர்காலத்தை மக்கள் கண்டனர். அறிவுத்துறை முதல் அரசியல் துறை வரை தமிழை நாயகப்படுத்தும் சக்தியாக தனிநாயகம் முகிழ்ந்தார்.

இந்தப் பெரும் பணியைச் சாதிக்குந்திறன் - உலகளாவிய முழுமையைக் காணுந்திறன் - அவரிடத்திலிருந்தது. அவர் தலைசிறந்த மனிதாபிமானியாக விளங்கினார். புராதன தமிழ் மனிதாயத வாதத்தை எடுத்துக்காட்டும் ஆராய்ச்சியை அவர் மேற்கொண்டிருந்தார். தனிநாயக அடிகளார் தற்காலத் தமிழ்



- பேராசிரியர் கா.சிவத்தம்பி -

இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். வரதராசனின் நாவல்கள் கவிதை, விமர்சனம் போன்ற துறைகளில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினார்.

1965ம் ஆண்டு முதல் தனிநாயக அடிகளுடன் எனக்குத் தொடர்பு இருந்தது. ஆராய்ச்சி மாணவன் என்ற வரையறைக்குள்ளேயே அத்தொடர்பு இயங்கியது. 15 வருடகாலத் தொடர்பினைக் கொண்டு தனிநாயக அடிகளின் ஒரு முக்கிய பண்பினைக் கூறலாம். அவர் இளம் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தார். அவர்களுடைய ஆராய்ச்சி முடிவுகளை தமது சொந்த எண்ணத் துணிபுகளுக்கு முரணாகவிருந்த இடத்தும், பிறழ்வற்ற ஆராய்ச்சி முறை பேணப்பட்டவிடத்து, அந்த ஆராய்ச்சியை அவர் எதிர்க்கவில்லை.

தமிழர் பண்பாட்டில் “கற்பு” எனும் குணநலன் போற்றப்படுவதற்கு சொத்துரிமை உணர்வே மூலகாரணம் என நான் எனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டதையடுத்து தோன்றிய சர்ச்சையின் பொழுது, அவர் கூறிய உற்சாக வார்த்தைகளை நான் இன்னும் மறக்கவில்லை. ஒருவனது எண்ணத் துணிவையும், அறிவு நேர்மையையும் மதிக்கும் மனப்பாங்கு வளர்க்கப்படாவிட்டால் ஆராய்ச்சியை வளர்த்து விடமுடியாது. தனிநாயக அடிகளிடம் பிறரது அறிவுத் திறனை மதிக்கும் பண்பாடு நிறைய இருந்தது. தமிழையும் தமிழ் பண்பாட்டையும் மீளக் கண்டறிந்து இந்திய, உலக நாகரீக வளர்ச்சியில் அவற்றின் இடத்தை மட்டிடும் முயற்சிக்குதவியவர் அடிகளார். தமிழின் தனித்துவத்தை அறிவதன் நோக்கம் அது சர்வதேச சமூகத்திற்கு எவ்வகையில் உதவுகின்றது என்பதை அறிவதற்கே என்ற ஆராய்ச்சி நெறியை அவர் மேற்கொண்டிருந்தார்.

மனிதர்களை நேசிப்பவர்களும் மனித நேயத்தை வற்புறுத்துபவர்களும் மறக்கப்படுவதில்லை.

*(நன்றி: மல்லிகை)*

■ ■ ■

தமிழ்த்தூது




# பண்பாட்டின் இலக்கணம்

- அமுதன் அடிகள் -

**இவ்வாண்டு உலகம் எல்லாம் பரவியிருக்கும் தமிழ் ஆர்வலர்கள் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி அவரை நினைவு கூர்கின்றனர்.**

**கிறிஸ்துவப் பணிக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பின் தமிழைத் துறைபோகக் கற்று, தமிழ்மொழியின் தொன்மையையும் செழுமையையும் உலகறியச்செய்து, தமிழ் முனிவராக மலர்ந்தவர் தனிநாயகம் அடிகளார். பட்டங்கள் பலபெற்று, பல மொழிகளறிந்து, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி அர்த்தமுள்ள மாநாடுகளை நடத்தித் தமிழ் செழுமையுறத் துணை நின்றவர். Ambassador for Tamil என இந்தியப் பத்திரிகைகளால் பாராட்டப் பெற்றவர். இவர் எழுதிய ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகளை இன்றைய தமிழ் வாசகர்கள் எல்லோரும் வாசித்தோர் என்றில்லை.**

**தாய் வீடு வாசகர்களுக்காகத் தொடர்ச்சியாக வெளிவந்த பேரறிஞர் தனிநாயக அடிகளின் ஆக்கங்களும் அவர் பற்றிய ஆக்கங்களும் இந்த இதழோடு நிறைவடைகின்றன.**

தனிநாயக அடிகளார் மிகக் சிறந்த பண்பாளர் என்பதை அவரை அறிந்த அனைவருமே ஏற்றுக்கொள்வர். 'இன்பமாய்ப் பேசுவார், பண்புடன் பழகுவார், பணிவுடன் தொண்டாற்றுவார்' என்று அவரது அடக்கத் திருப்பலியில் மறையுரை நிகழ்த்திய மதுரநாயகம் அடிகளார் கூறியது முற்றிலும் பொருந்தும், 'தமது தலைமுறையின் மாபெரும் தமிழர் அவர், ஏனெனில் தம் மொழி, பண்பாடு ஆகியவற்றின் சிறப்பைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதில் அவர் பெருந்துணையாக இருந்தார்' என்று திரு. ஜேம்ஸ் இரத்தினம் கூறுவது மிகையன்று.

## நட்பு:

அடிகளார்க்கு உலக நாடுகள் பலவற்றிலும் நண்பர்கள் உண்டு. பலமொழி பேசுவோரும் அடிகளார்க்கு நண்பர்களாக இருந்தனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பொன்மொழி யைத்தம் வாழ்வில் அவர் கடைப்பிடித்து வாழ்ந்தவர் என்பதை உலகளாவிய அவரது நண்பர்கள் தொகையே மெய்ப்பிக்க வல்லது. ஆங்கில நாட்டவராகிய வின்சென்ட் க்ரோனின், சி.ஆர்.பாக்ஸர், ஆர்.இ.ஆஷர், ஜே.ஆர்.மார், ஆல்பாட்டீன் கோர், பிரான்சு நாட்டவராகிய ழான் ஃபீலியோசா, ஃபிரான்சுவாக்ரோ, ஐக்கிய அமெரிக்க நாட்டவராகிய லியோ நோய்டெக்கர், எம்.பி. எமனோ, கிளாரன்ஸ், கிளிக், எட்கர் நோல்ட்டன், கார்ல் மென்ஜெஸ், செக்கோஸ் லாவாக்கிய நாட்டு கமில் சுவலபில், இலங்கையர்களாகிய சு.வித்தியானந்தன், கைலாசபதி, கா.சிவத்தம்பி, சி.ஜே.எலியசர், தந்தை செல்வா, ஜி.ஜி பொன்னம்பலம், எம்.திருச்செல்வம், அருட்திரு. ஜோக்கிம்பிள்ளை, ஆயர் தியோகுப்பிள்ளை, ஆயர் குலேந்திரன், ஏ. ஜே. வில்சன், நீதிபதி தம்பையா, வீரகேசரி வென்செஸ்லாஸ், ஜேம்ஸ் இரத்தினம், கு.நேசையா, எம்.எம். உவைஸ், எ.ஃப்.எக்ஸ்.சி. நடராசா, ஆயர் சி.எல். விக்கிரமசிங்க, பெர்ட்ரம் பாஸ்தியாம்பிள்ளை, இந்தியர்களாகிய அ.சிதம்பரநாதச்செட்டியார், அ.சுப்பையா, வ.அய்.சுப்பிரமணியம், இரா.பி.சேதுப்பிள்ளை, அருட்திரு. ச.இராசமாணிக்கம், இரா.முத்துக்குமாரசுவாமி, வ.சுப்பையாபிள்ளை, சுவாமி அமலதாசன், பேராயர் அருளப்பா என அவரது நண்பர் பட்டியல் மிக நீண்டதாகும்.

தம் நண்பர்களை அவர் மிகவும் மதித்தார். அவர்களுடன் உரிமையோடு பழகினார். மலேயாப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்று

*தொடர்தல் 67ம் பக்கம்*

## தமிழ்த்தூது

இலங்கைக்குத் திரும்பியபோது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்த முனைவர் ஏ. ஜெயரத்தினம் வில்சன் அவர்களின் இல்லத்தில் ஓராண்டுக்கு மேல் தங்கியிருந்தார். அதன் பின்னர் அவர் யாழ்ப் பாணத்தில் தம் ஓய்வு காலத்தைச் செலவிட்டார்.

தம் நண்பர்களைச் செல்லமாகப் பெயர் சொல்லி அழைப்பதை அடிகளார் மிகவும் விரும்பு வார். தத்துவபோதகரின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய ஆங்கில எழுத்தாள ராகிய வின்சென்ட் க்ரோனின் அவர்களை ஆங்கில முறைப்படி வின்ஸ் என்று அவர் மிகுந்த உரிமையுடன் அழைப்பார்.

அடிகளாரைச் சந்திக்கும் மனிதர் அனைவரும் அவரைத் தமது நண்பராகக் கொள்ளவேண் டுமென விரும்பும் அளவுக்கு அவரது பண்பு நலன்கள் அமைந்திருந்தன என்பார் எட்கர் நோல்ட்டன்.

நண்பர்களுக்கு உதவுவதிலும் விருந்தோம்ப லிலும் அடிகளார்க்கு நாட்டம் மிகுதி. 1964ம் ஆண்டு டில்லியில் நடந்த கீழைத்தேய அறி ஞர்களின் உலக மாநாட்டில் தம் நண்பர் கமில் சுவலபில் கலந்து கொள்ள வேண்டுமென்று அடிகளார் விரும்பினார், சுவலபிலும், அடிக ளாரும் நேரில் சந்திக்காமல் கடிதத் தொடர்பு மூலமே நட்புப்பூண்டிருந்த காலம் அது. எனி னும் மாநாட்டில் சுவலபில் கலந்து கொள் வதற்குத் தேவையான பொருளுதவிக்கு அடி களார் ஏற்பாடு செய்தார்.

### விருந்தோம்பல்:

அடிகளாரின் விருந்தோம்பல் பண்பு உலகப் புகழ்பெற்றது எனலாம். அதைப்பற்றி முனைவர் கமில் சுவலபில், பேரா. எஸ். அரசரத்தினம், எமனோ, க்ரோனின், பேராசிரியர்கள் பெர்ட்ரம் பாஸ்தியாம்பிள்ளை, கே.இந்திரபாலா, எட்கர் நோல்ட்டன் எனப் பல நாட்டு அறிஞர்களும் பாராட்டியிருக்கின்றனர். அவரது நண்பர்களுள் பெரும்பாலோர் கல்வித்துறையைச் சார்ந்த வர்கள் என்பதும், அவர்களை விருந்துக்கு அழைத்து, வயிற்றுக்கு உணவோடு செவிக் கும் அறிவுக்கும் விருந்து படைப்பதில் அடிக ளார் வல்லவர் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கவை.

### அறிவாண்மை:

அடிகளாரின் பொழுதுபோக்கு, புத்தகங்களைப் படிப்பதே என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து படித்துத் தம் அறிவையும் ஆராய்ச்சியையும் வளர்த்துக் கொள்வதில் அவர் ஈடிணையற்றவர்.

அடிகளாரின் அறிவாண்மையே உலக அறி ஞர்கள் நடுவில் அவருக்குச் சிறப்பிடம் பெற் றுத் தந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் ஆராய்ச்சியே அடிகளாரின் களம் என்றாலும் நாடகம், இசை, வரலாறு, சமயம், ஓவியம், சிற்பம் எனப் பலதுறை வல்லுநராகவும் அவர் திகழ்ந்தார். எனவே அவர் எத்துறையைப் பற்றிப் பேசினாலும் உரையாடினாலும் கூடி யிருந்தோர் மெய்ம்மறந்து செவிமடுத்து மகிழ் வது வழக்கம்.

### நகைச்சுவை:

தம் நண்பர்களோடு உரையாடும்போது அடி களார் நகைச்சுவை மிக்கவராக இருப்பார். ஆனாலும், அவரது நகைச்சுவை கூடப் பெரும் பாலும் அறிவுசார்ந்ததாகவே இருக்கு.

தூத்துக்குடி மறைமாவட்டத்தில் அடிகளார் பணியாற்றிய போது அம்மறைமாவட்டப் பொரு ளாளர் ஒருமுறை அவருக்கும் எழுதிய கடி தத்தை முடிக்கும்போது 'கிறிஸ்துவில் உங் கள் அடிமை' என்று அக்கால வழக்கப்படி இலத்தீன் மொழியில் எழுதிக் கையொப்பமிட் டிருந்தார். அடிகளார் அவருக்குப் பதில் எழு தும்போது, 'கிறிஸ்துவில் என் அடிமைக்கு' என்று தம் மடலைத் தொடங்கியிருந்தார்.

28.04.1880 அன்று யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவாற்றினார் அடிகளார். தாம் அணிந்திருந்த புதிய கால ணிகளை வீரசிங்கம் மண்டபத்தினுள் நுழை யுமுன் கழற்றி வெளியே வைத்துவிட்டுச் சென்றார். சொற்பொழிவு முடிந்து வெளியே வந்தபோது காலணிகளுள் ஒன்று காணாமற் போய் வேறொரு காலணி வைக்கப்பட்டிருந்தது. அடிகளார் தாம் கடைசிக்காலத்தில் தங்கியி ருந்த பண்டத்தரிப்பு தியான இல்லத்துக்குத் திரும்பியபோது, அங்குள்ள கன்னியர்களைப் பார்த்துக் 'கன்னியர்களே, என் கால் ஒன்று காணாமல் போய்விட்டது' என்று சொல்லிக் காலணி அணியாத காலைக் காட்டிச் சிரித் தாராம்.

### நாவன்மை:

அடிகளாரின் நாவன்மை உலகப்புகழ் பெற்ற தாகும். உலகின் பல்வேறு நாடுகளில் பொது மேடைகளிலும் ஆலயங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் கருத்தரங்கு களிலும் மாநாடுகளிலும் அவர் உரையாற்றி யுள்ளார். கேட்பதற்குச் சுவையான இனிய குரலில், தக்க ஏற்ற இறக்கங்களுடன், மகிழ்ச்சி தரும் வகையில் சொற்பொழிவாற்ற வல்ல வர் அடிகளார். அவர் உணர்ச்சியைத் தூண் டும் பொதுமேடைப் பேச்சாளர் அல்லர். என் றாலும் ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசி னாலும் அவையோரின் ஆர்வம் குன்றாத நிலையில் உரையாற்ற வல்லவர்.

பேசுவதற்கு முன் தக்க முறையில் தயாரிப்பை மேற்கொள்வது அடிகளாரின் வழக்கம். முக் கியமான உரைகளை முழுமையாக எழுதிப் படித்து வழங்குவதும் அவரது வழக்கம். ஆகவே அவரது உரைகள், கட்டுரை வடிவம் கண்டு நூல்களில் இடம் பெற்றது உண்டு.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும்



> "தமிழ் ஆராய்ச்சியே அடிகளாரின் களம் என்றாலும் நாடகம், இசை, வரலாறு, சமயம், ஓவியம், சிற்பம் எனப் பலதுறை வல்லுநராகவும் திகழ்ந்தார்."

திறம்பட உரை நிகழ்த்த வல்லவராகிய அடி களார், தாம் அவையினருக்கேற்றவாறு பிரெஞ்சு, ஸ்பானிஷ், இத்தாலியம் ஆகிய மொழிகளி லும் உரையாற்றியது உண்டு.

தேவைக்கேற்றவாறு முன் தயாரிப்பு இல்லாமல் அடிகளார் உரையாற்றுவது உண்டு. அத்த கைய உரைகளும் சுவை மிக்கனவாகவே அமைந்திருக்கும்.

அடிகளாரின் தேர்ந்த சொல்லாட்சியும், தெளி வான ஒலிப்பு முறையும் அனைவரின் மதிப் பையும் பெற வல்லவையாகும். தாம் கற்றறிந்த மொழிகளைச் செம்மையாகக் கையாளும் திறம் அவருக்குக் கைவந்த கலை.

### திட்டமிட்ட செயல்பாடு:

எதைச் செய்தாலும் அதைத்தக்க முறையில் திட்டமிட்டுச் செயல்படுத்துவது அடிகளாரின் வழக்கம். மலேயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறையை வளர்ப்பதிலும், தாம் முன்னின்று நடத்திய கோலாலம்பூர் பாரிஸ் மாநாடுகளை நடத்துவதிலும் மேலாண்மைத் திறனோடும், நுணுக்கமான செயல்களைக் கூடத் திட்டமிட்டும் அவர் செயல்பட்டமை அனைவரையும் வியப்பிலாழ்த்தியதாகும்.

சிக்கல்கள் எழுந்தபோதும் சிரித்த முகத்தோடு அவற்றை எதிர் கொண்டு, அடிப்படைக் கோட் பாடுகளை விட்டுக்கொடுக்காமலே சமாளித் துவிடும் திறம் அடிகளார்க்கு உண்டு. இத்தி றமை கோலாலம்பூர், சென்னை, பாரீஸ், யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாடுகளின் போது தெளிவாகப் புலப்பட்டது.

'பலரையும் ஈர்த்து இணைத்து உன்னதமான பணிகளில் அவர்களை ஈடுபடுத்துதல், மற்ற வர் தயங்கும் பொறுப்புக்களைக்கூட ஏற்றுக் கொண்டு அற்புதமான திறமையோடு நிகழ்த் திக் காட்டும் தெய்வீகத் திறமை ஆகியவை அடிகளாரிடம் இருந்தன' என்று தமிழ்ப் பல்க லைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா.வ. அய்.சுப்பிரமணியம் கூறுவது மிகவும் பொருத்த மாகும்.

### ஆராய்ச்சித் திறன்:

சமயவியல் தமிழ் இலக்கியம், கல்வி ஆகிய துறைகளில் பட்டம் பெற்றவரேனும் அடிகளார் வரலாறு, நிலவியல், மானுடவியல், பண்பாட் டியல், அரசியல் ஆகிய துறைகளிலும் வல் லவராக விளங்கினார்.

பலதுறை வல்லுநராக விளங்கியதாலேயே தமிழ் ஆய்விலும் பல துறைகளையும் இணைத் துப் பணியாற்ற அவரால் முடிந்தது. கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் மேனாட்டு நூல்களையும் இணைத்தும் ஒப்பிட்டும் நோக்க அவரால் இயன்றது. தமிழர் வாணிகம், மேலை நாட்டு நிலவியல் நூல்களும் தமிழ்நாட்டு இடப்பெயர்களும், கடாரம் எங்கே? தமிழாய்வு: அன்றும் இன்றும் தெற்காசிய – தென்கிழக்கா சியக் கலை, சமயமும் கலையும், சமயமும் பண்பாடும், மனித நேயக் குறிக்கோள்கள், தமிழ்ப்பண்பாடும் நாகரிகமும், குவாடலூப்பே மார்த்தினீக் நாடுகளில் தமிழர் குடியேற்றம், சங்க இலக்கியத்தில் கல்விச் சிந்தனை, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, தமிழர்தம் கவின் கலைகள், பழந்தமிழ் இலக்கியம், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உயர்நிலைக் கல்வி, தமிழ்ப்பாட பாடங்களில் சொல்லாட்சியும் உள்ளடக்கமும், தமிழ் இலக்கியத்தில் கத் தோலிக்கர் பணி, இலங்கையில் மொழியுரி மைகள், மலரும் மாலையும், தமிழில் அச் சேறிய முதல் நூல்கள், ஐரோப்பிய நூலகங்க ளில் தமிழ்க் கையெழுத்துச் சுவடிகள் என அவரது எழுத்துப் படைப்புக்களின் தலைப்பை நோக்கும்போதே அடிகளாரின் பல்துறை அறிவு நமக்கு எளிதில் புலப்படும்.

அறிஞர்களுக்கிடையில் அவர் ஒரு முனிவர், துறவி என்று பலர் அவரைப் போற்றியது மிகவும் பொருத்தமே. அவரது அறிவாற்றலா லும் ஆளுமைத் திறத்தாலும் ஈர்க்கப்பட்ட ஒருவர் 'இவரைப் போன்ற ஒரு குருவே போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' என்று கூறியது நினைவுக்கு வருகிறது.

கருத்து வேற்றுமைகளை அடிகளார் மதித்துப் போற்றியவர், கத்தோலிக்கரல்லாத கிறித்து வர்கள், இந்துக்கள், இசுலாமியர், பௌத்தர், சிங்களவர் எனப் பலரோடும் நட்புறவு பாராட்ட வல்லவர் அவர். வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்போர் மீது அவர் என்றுமே கசப்புக் கொண்டிருந்ததில்லை.

### எளிமை:

கற்றுத் தேர்ந்த பேரறிஞர் எனப்புகழ் பெற்ற வரேனும் அடிகளார் அனைவருடனும் எளி தாகப் பழக வல்லவர்.

1958ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்க் கலைவிழாவுக்கு அடிகளாரை அழைப் பதற்காக அவரது இல்லத்துக்குச் சென்றபோது, அடிகளாரை முதல் முறையாகச் சந்திக்கவி ருந்ததால் தாம் சற்றே கலக்கமுற்றிருந்த நிலையில், அடிகளார் தங்கள் மாணவர்க ளாயிற்றே என ஒதுக்காமல் மிகுந்த அன்புடன் வரவேற்றுப் பழகினார் என்பார் பேரா. கே. இந்திரபாலா.

தாம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வர லாற்றுத் துறையில் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் அடிகளாரை முதன் முறையாகச் சந்தித்ததை நினைவுகூரும் பேரா. பெர்ட்ரம் பஸ்தியாம் பிள்ளை, தம்மைச் சந்தித்த உட னேயே அடிகளார் தம் கலக்கத்தைப் போக்கி விட்டதை எடுத்தோதுகின்றார்.

மலேயாப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணியாற்றச் சென்ற தம்மை, வேறு துறை யைச் சார்ந்தவராயிற்றே என்றெல்லாம் எண் ணாமல் மூத்த பேராசிரியராகிய அடிகளார் மாடிப் படியேறி வந்து தம் அறையிலேயே தம்மைச் சந்தித்து வரவேற்புத் தெரிவித்த நாகரிகத்தை விதந்து கூறுவார் பேரா எட்கர் நோல்ட்டன்.

அடிகளார் சினந்து பேசியதை யாரும் கேட்ட தில்லை அனைவரிடமும் இனிமையாக, எளி மையாகப் பேசிப்பழகியதையே பலரும் கூறுவர்.

### மன்னிக்கும் மாண்பு:

அடிகளார்க்கு ஒரு துறவிக்குரிய மதிப்புக்கூடத் தராமல், அவரைத் 'திருத்தனிநாயகம்' என்று குறிப்பிட்ட ஞா.தேவநேயப் பாவாணர், அடிக ளார் 'தமிழ் வளர்ச்சிக்கென்று உலகத் தமிழ்ப் பேரவையைத் தோற்றுவித்ததாகத் தெரிய வில்லை' என்றும் 'அயல் நாட்டார்க்குத் தமி ழைப் பற்றியிருந்த உயர்வான எண்ணம் வர வரத் தாழ்ந்துபோனதே முக்கருத்தரங்கு மாநாடுகளின் விளைவாகும் என்றும், 'வணிகப் புலவரும் தமிழறியாதவருமே திருத்தனிநா யகத்தின் துணைவர்' என்றும், 'தமிழர் வர லாறு' என்னும் நூலில் எழுதியுள்ளார். ஆனால் அடிகளார் பாவாணரைப் பற்றி மதிப்புக் குறை வாக எவரிடமும் பேசியதில்லை. பாவாண ரின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலிறுக்கவு மில்லை. 'உண்மை ஒருநாள் வெளியாகும் என்னும் உறுதியான நம்பிக்கை அடிகளார்க்கு இருந்தது.

### முன்னேற்றச் சிந்தனைகள்:

கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த குருக்கள், வழக்கமாகச் செய்துவரும் மறைப்பணிகளை விட்டு அரசினர் பல்கலைக் கழகத்தில் அடி களார் பணியாற்றச் சென்றதும், தமிழ்ப் பணி யினைத் தம் உயிர் மூச்சாகக் கொண்டு உழைத்ததும் பலருக்குப் புரியாத புதிர், 'கட வுளுக்குப் பணிந்து தன் பண்பாட்டுக்காகவும் தன் நாட்டுக்காகவும் ஒருவன் தன் ஆற்றல் களையும் நேரத்தையும் செலவிடுவது தன் னல மற்றதும் உன்னதமானதுமாகும்' என்று அடிகளார் 1955ம் அண்டு கொழும்பில் ஆற் றிய ஓர் உரையில் குறிப்பிட்டது அவரது பண்பாட்டுப் பணிக்குரிய விளக்கமாகவே அமைந்துள்ளது. மனித மேம்பாட்டுக்காக மனித நேயத்தோடு ஆற்றும் எல்லாப் பணி களுமே இறைவனுக்கு உகந்த பணியாகும் என்று அடிகளார் உறுதியாக நம்பினார்.

தம் காலத்தை விஞ்சிய முன்னேற்றக் கருத் துக்களைக் கொண்டவராக அடிகளார் விளங் கினார் என்பதற்கு அடிகளாரின் எழுத்துக் களில் நாம் பல சான்றுகளைக் காண முடி யும். சமயத் துறையிலும் ஆராய்ச்சித் துறை யிலும் அடிகளார் புரட்சிகரமான சிந்தனைக- ளைக் கொண்டிருந்தார். அதனாலேயே கட வுள் ஏற்புக் கொள்கை, மறுப்புக் கொள்கை என்னும் கொள்கைகளைக் கொண்டிருந்த இருவகைத் தமிழறிஞரிடையேயும் அவர் மதிப் போடு விளங்கினார். அவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கூட அடிகளாரின் முன்னேற்றச் சிந்தனைகளை மதித்தனர் என் பதில் ஐயமில்லை. பொதுவுடைமைக் கோட் பாட்டைச் சார்ந்த க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் கூட அவரை 'அறிஞர்க ளுக்கு நடுவில் ஒரு முனிவர்' 'அறிஞர் -துறவி' என்று மதித்துப் போற்றினர்.

பழமைவாதத்தில் ஊறியிருந்த தமிழ் அறிஞர் களை அறிவியல் முறையிலும் பகுப்பாய்வு முறையிலும் சிந்திக்கவும் ஆராய்ச்சி செய்ய வும் தூண்டிச் செயல்படுத்திய பேறிஞர் அவர்.

### மறைவில் நிறைவு:

அடிகளார் ஆற்றிவந்த பணியின் சிறப்புக் கருதிப் பல்கலைக்கழகம் அவரது பணிக் காலத்தை 1973ஏப்ரல் வரை நீடித்தது. ஆனால் மலேயாப் பல்கலைக் கழகப் பணியினின்று அடிகளார் 26.07.1969 அன்று ஓய்வு பெற்

தொடர்தல் 68ம் பக்கம்

றார். ஐம்பத்தாறு வயதிலேயே அடிகளார் ஓய்வு பெற்றமைக்குரிய காரணம் தெரியவில்லை. 'உலகம் சுற்றுதலை நிறத்தும்படிக் கேட்டனர் பல்கலைக்கழக ஆட்சி பீடத்தினர். அடிகளார் மறுத்தார், பதவியும் துறந்தார்' என்பார் வித்துவான் எ.ஃப்.எக்ஸ்.சி.நடராசா. இது உண்மைதானா என்பது ஐயத்துக்குரியது. ஓய்வு பெறுவது பற்றி அவர் யாரையும் கலந்தாலோசிக்கிவில்லை என்பதை அவர் தம் கடிதங்கள் மூலம் அறிகின்றோம். 10.05.1969 அன்று பேரா.வ.அய். சுப்பிரமணியம், அ.சுப்பையா ஆகிய நண்பர்களுக்கு எழுதிய கடிதத்தில் பணிச் சுமை காரணமாகவும் உடல்நிலை காரணமாகவும் ஓய்வு பெறவிருப்பதாக எழுதினார். பல்கலைக் கழகத்துக்கும் இதையே காரணமாகக் காட்டி ஓய்வுபெற விரும்புவதைத் தெரிவித்தார். ஓய்வுபெற்ற பின் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடர்பான பணிகளில் ஈடுபடவும் விரும்பினார்.

ஓய்வு பெற்றபின், ஆராய்ச்சியிலும், உலகின் பல நாடுகளில் தமிழ்பற்றிய விரிவுரைகளை நிகழ்த்துவதிலும் ஈடுபட்டு வந்ததோடு 1970ம் ஆண்டு பாரீசிலுள்ள பிரான்சுக் கல்லூரியிலும், 1991ம் ஆண்டு நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்திலும் வருகைக்கு பேராசிரியராகப் பணி புரிந்தார்.

உடல் நலம் குன்றியவராய் ஐரோப்பாவிலிருந்து திரும்பிய அடிகளார் கண்டி பேராதனையில் பேரா.ஏ.ஜே.வில்சனின் இல்லத்தில் ஓராண்டளவாக் தங்கியதாக அறிகின்றோம்.

அதன்பின் அடிகளார் யாழ்ப்பாணத்தில் வாழத் தொடங்கினார். அன்றைய யாழ்ப்பாணம் ஆயராக விளங்கிய மேதகு தியோகுப்பிள்ளை அடிகளாரின் நண்பர். உரோமையில் ஒரு சாலை மாணாக்கர். அவர் வளலாயில் உள்ள தம் விடுமுறை இல்லத்தில் அடிகளார் தங்கி வாழ ஏற்பாடு செய்தார். 1972ம் ஆண்டு செப்டம்பர் முதல் 1979ம் ஆண்டு ஜுலை வரை அடிகளார் வளலாயில் தங்கியிருந்தார்.

இக்காலத்திலும்கூட அடிகளார் வாளாவிருக்கவில்லை. பல்கலைக்கழகப் பணியிலிருந்துதான் அவர் ஓய்வு பெற்றாரேயன்றி, தமது தமிழ்ப்பணியினின்று அவர் ஓய்வு பெறவில்லை. யாழ்ப்பாணம் கல்லூரியின் சிறப்புப் பேராசிரியராகவும், பின் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் அடிகளார் பணியாற்றினார்.

அமெரிக்கரும் யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற கல்வியாளராக விளங்கியவரும் யாழ்ப்பாணம் கல்லூரியின் முன்னாள் முதல்வருமாகிய முனைவர் பங்க்கர் அடிகளார் நினைவுச் சொற்பொழிவுகளை 1972ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அடிகளார் நிகழ்த்தினார். 'தமிழர்தம் மனித நேயக் கோட்பாடுகள்' என்னும் பொருள் பற்றி அவ்வமயம் அடிகளார் பேசினார்.

1973ம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாட்டில் அடிகளார் கலந்து கொண்டார்.

1974ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டை நடத்துவதில் இங்கைத்தமிழ் அறிஞர்களுக்கு வலக்கரமாகவும், மாநாட்டு அமைப்புக் குழுவில் இணைச் செயலராகவும் விளங்கியதோடு, மாநாட்டில் தொடக்கவுரையும் ஆற்றினார் அடிகளார்.

யாழ்ப்பாணம் மாநாட்டின்போது நடைபெற்ற வன்செயல்களால் அடிகளார் தாங்கொண்ணாத் துயருற்றார். அதன்பின் பொது நிகழ்ச்சிகளில் அடிகளார் மிகுதியாகக்கலந்து கொள்ளவில்லை.

1979ம் ஆண்டு ஜுலை முதல் பண்டத்தரிப்பு என்னுமிடத்திலுள்ள தியான இல்லத்தின் அடிகளார் வாழ்ந்துவந்தார். அவரது உடல்நலம் குன்றியிருந்ததே இதற்குக் காரணமாகலாம்.

அவ்வில்லத்துக்குப் பொறுப்போற்றிருந்த திருக்குடும்பக் கன்னியர்கள் அடிகளாரை நன்கு ஓம்பிவந்தனர். கன்னியர்க்கு ஆங்கிலமும், அப்பகுதியிலுள்ள இளம் பெண்களுக்குத் தமிழ் இலக்கியமும் கற்றுக் கொடுத்தார் அவர்.

1979ம் ஆண்டு டிசம்பரில் அடிகளாரின் உடல் நலம் தேறியது. அவ்வமயம் இலங்கையில் அவசரகாலச் சட்டத்தின் காரணமாகத் தமிழ் மக்கள் அனுபவித்த துயரத்தைக் கண்டு மனம் நொந்த அடிகளார், பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து நம் கருத்துக்களை வெளியிட விரும்பினார்.

தாம் விரும்பியவாறே 10.01.1980 அன்று யாழ்ப்பாணம் நகர மன்றத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அடிகளார் உரை நிகழ்த்தினார். யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சியின் நினைவு நாள் அது.

அதே ஆண்டு ஏப்ரல் 26ம் நாளன்று 'தந்தைக்கு அஞ்சலி' என்னும் நூலைத் தந்தை செல்வா நினைவிடத் திறப்பு விழாவின்போது வெளியிட்டு உரையாற்றினார் அடிகளார். பின் 27, 28 ஆகிய இரு நாட்களிலும் 'தந்தை செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவுகள்' நிகழ்த்தினார். முதல் நாள் 'தமிழ்ப் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்' என்னும் பொருள்பற்றித் தமிழிலும், மறுநாள் 'தமிழ்த் துறை ஆய்வுகள் - இன்றுவரை, இனி (Tamil Studies: Retrospect and Prospect) என்னும் தலைப்பில் ஆங்கிலத்திலும் உரையாற்றினார். தமிழ்ச் சொற்பொழிவுக்குப் பேரா.கு. நேசையாவும், ஆங்கிலச் சொற்பொழிவுக்குப் பேரா.சு. வித்தியானந்தனும் (யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணை வேந்தர்) தலைமையேற்றுச் சிறப்பித்தனர்.

முதல் நாள் சொற்பொழிவின் இறுதியில் நன்றியுரையாற்றியவர் இலங்கைப் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம். 'இந்தத் தலைப்பில் இத்தகைய விரிவுரையாற்றும் தகுதி வேறெவருக்கும் இல்லை. இனி நீண்ட காலத்துக்கு இத்தகைய பேரறிஞர் ஒருவரை நாம் காண இயலாது' என்று அவ்வமயம் அவர் கூறினார். ஆடாமல் அசையாமல் அடிகளாரின் சொற்பொழிவைச் செவிமடுத்த அவையினர் அக்கூற்றைத் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டனர்.

1980ம் ஆண்டு மேத் திங்களில் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் அடிகளார் கலந்துகொண்டு, பேரா.கா.பொ. இரத்தினம் எழுதிய 'தமிழ்மறை விருந்து' என்னும் நூலை வெளியிட்டு உரையாற்றினார் அடிகளார் கலந்துகொண்ட இறுதிப் பொது நிகழ்ச்சி இதுவே.

அதன் பின் அடிகளாரின் உடல் நலம் குன்றத் தொடங்கியது. 'என் உடல் நலம் நன்றாக இல்லை' என்று தம் நண்பர் சி.ஆர்.பாக்ஸர்

# தமிழ்த்தூது

அவர்களுக்கு அடிகளார் எழுதினார்.
அவரது உடல் நலம் முன்னேற்றம் காணவில்லை. 1-9-1980 அன்று மாலை 6.30 மணியளவில் அடிகளார் உயிர் நீத்தார்.

அடிகளாரின் மறைவு கேட்டுத் தமிழ் உலகம் கண்ணீர் சிந்திக் கலங்கியது. யாழ்ப்பாணம் மறைமாவட்டத் தலைமைக்கோவிலில் வைக்கப்பட்டிருந்த அவரது சடலத்துக்குக் குருக்களும் கன்னியாரும் தமிழ் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் தமிழ் பொது மக்களும் அஞ்சலி செலுத்துவதற்காகத் திரண்டு வந்தனர்.

03.09.1980 அன்று யாழ்ப்பாணம் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளையின் தலைமையில் பல குருக்கள் சேர்ந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தபின் அடிகளாரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது, திருப்பலியின்போது மதுரநாயகம் அடிகள் மறையுரை நிகழ்த்தினார்.

அடக்கச் சடங்குகளின் பின், பேராலயத் திறந்தவெளி அரங்கில் பேரா.கு. நேசையாவின் தலைமையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் யாழ்ப்பாணம் ஆயர் தியோகுப்பிள்ளை, பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.வித்தியானந்தன், யாழ். மாநகர முதல்வர் ஆகிய பெருமக்கள் கலந்துகொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் அ. அமிர்தலிங்கம் இரங்கலுரையாற்றினார்.

உலகப்பற்றினை அறுத்த துறவியாகிய தனிநாயகம் அடிகளார் மனித நேயத்தை மறந்ததில்லை. மொழிப்பற்றும் இனப்பற்றும் நாட்டுப்பற்றும் மனிதப் பற்றும் கொண்டவராகவே அவர் வாழ்ந்தார், பணியாற்றினார். உண்மையான துறவுக்கு ஏற்ற எடுத்துக்காட்டு அடிகளாரே என நாம் உறுதியாகக் கூறலாம்.

'கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தனிநாயக அடிகளாரைப் போலத் தமிழுக்குத் தொண்டாற்றியவர் வேறு எவருமிலர்' என மேதகு ஆயர் சபாபதி குலேந்திரன் எழுதியது இவ்வமயம் நினைவுக்கு வருகிறது.

*நன்றி: தனிநாயகம் என்னும் தமிழ் நாயகம்*

■ ■ ■